

# பரமானந்தம்

## மணிவிழா மலர்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமானந்தம்

## மணிவிழா மலர்

மலராசிரியர்
கலாநிதி.பா.தனபாலன்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்
2024

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | பரமானந்தம் |
| வெளியீடு | : | மணிவிழா மலர்க்குழு |
| முகவரி | : | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,<br>கோப்பாய். |
| மலர்க்குழு | : | திரு. தி. ஜெயகாண்டீபன் (தலைவர்)<br>*(உபபீடாதிபதி நிதி நிர்வாகம்)* |
| செயற்குழு உறுப்பினர்கள்: | | திரு. த. தவனேசன்<br>*(உபபீடாதிபதி கல்வியும் தரமேம்பாடும்)*<br>திரு. எஸ். ஆர் சத்தியேந்திரம்பிள்ளை<br>*(உபபீடாதிபதி தொடருகல்வி)*<br>திரு. அ. குகன்<br>*(உபபீடாதிபதி நிறுவன அபிவிருத்தி)*<br>திரு. இ. அருள்நேசன் *(பதிவாளர்)*<br>திரு. ப. பரணிதரன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திரு. நா. அம்பிகைபாகன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திரு. து. இளங்குமரன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திரு. து. வாகீஸ்வரன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திரு. சி. முகுந்தன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திரு. கு. யோதிரட்ணராஜா *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திருமதி. ஞா. கணேசநாதன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திருமதி. பப்சி மரியதாசன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>செல்வி. வி. கந்தசாமி ஐயர் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திருமதி. சு. விக்னமோகன் *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திருமதி. ஸ்ரீ சுமதி *(ஆசிரிய கல்வியியளாளர்)*<br>திரு. செ. மாவிரதன் *(முகாமைத்துவ சேவை அலுவலர்)*<br>கலாநிதி பா. தனபாலன் (மலராசிரியர்) |
| பதிப்பு | : | 2024 தை |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ்,<br>கோண்டாவில் வீதி,<br>இருபாலை. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமானந்தத்தின் உள்ளே...

## இயல் 01 - வாழ்த்தியல்

அருளாசிகளும் வாழ்த்துக்களும்

## இயல் 02 - வரலாற்றியல்

கலாநிதி S.பரமானந்தம் அவர்களின்

வாழ்க்கை வரலாறும், பணிகளும்

## இயல் 03 - கட்டுரையியல்

கல்வியல் ஆய்வுக்கட்டுரைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமாணந்தம்

## இயல் ஒன்று

## வாழ்த்தியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் கருத்துரை



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நான்காவது பீடாதிபதியாக கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். அவரது அறுபதாவது அகவையில் கல்லூரிச் சமூகம் மணி விழாவைக் கொண்டாடுகின்றது. மிகச்சிறந்த மனிதாபிமானப் பண்புகளும் ஆசிரிய வாண்மைத்துவ விருத்தியில் அர்ப்பணிப்பும் தியாக உள்ளமும் கொண்டு உழைத்தவர் கலாநிதி சு.பரமானந்தம் அவர்கள்.

"என்பதத்தால் எய்தல் எளிதென்ப யார் மாட்டும்
பண்புடமை என்னும் வழக்கு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய மற்றவர்களிடத்தில் எளிமையாகவும், இனிமையாகவும், இளகிய மனத்துடனும் நடத்து கொள்வதும், மற்றவர் தம்மிடம் எளிதில் பழகக் கூடிய இயல்புடனும் வாழ்வதே பண்புடையாரின் செயலாகும் என்பதற்கமைய வாழ்ந்து காட்டியவர் கலாநிதி. சு.பரமானந்தன் அவர்கள். பல சவாலான சூழ்நிலைகளிலும் சாதனைகளை உருவாக்கும் பண்புடையவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இவர் காலத்தில் கற்ற முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் கல்வியியலாளர்கள் அனைவர் மீதும் மென் திறன்களைப் பிரயோகித்து அவர்களுடைய வளர்ச்சிக்கு பெரிதும் வழிகாட்டிய பெருமகனாவார் அவர்.

கலாநிதி சு.பரமானந்தம் அவர்களின் மணி விழாவை சிறப்பாக ஒழுங்கமைத்து வழிகாட்டிய தலைவர் திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்களுக்கும், மணி விழா மலர்க் குழுவினருக்கும், மற்றும் கல்வியியலாளர்கள், கல்வியியலாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்களின் நலன்புரிக் கழகத்தினருக்கும், முகிழ் நிலை ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வரலாற்றில் மணிவிழா நாயகன் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். இலங்கையிலுள்ள அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகள் மற்றும் பிரதம ஆணையாளர் சகிதம் இவருடைய காலத்தில் எமது கல்லூரிக்கு வந்து எமது கல்லூரியின் எடுத்துக்காட்டான தகவல் தொழிநுட்ப செயற்திட்டத்தை பயின்று இலங்கையிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பிரயோகித்தமை ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். இலங்கையிலேயே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி எல்லா விடயங்களிலும் முதன்மை தேசிய கல்வியியற் கல்லூரியாக செயலாற்றியமைக்கு மிகச்சிறந்த கல்வித் தலைமைத்துவத்தையும் மென்திறன்களையும் சிறப்பாக பிரயோகித்தவர் மணி விழா நாயகன் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளகத்தனையது உயர்வு" என்ற வள்ளுவர் மொழிக்கேற்ப கலாநிதி சு.பரமானந்தம் அவர்களின் உயர்வான குணங்களால் அவர் உயர்வான நிலையை அடைந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியாகி பெரும் கல்விச் சேவையை நல்கியுள்ளார். அத்தோடு அவர் மனைவி, பிள்ளைகள் மிகச்சிறந்த பண்புடையவர்களாக முன்னுதாரணமான நல்வாழ்வு வாழ்ந்து காட்டிவருகின்றார்கள். இவ்வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் இம் மணிவிழா சிறப்பாக எடுக்க உதவிய உங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இம் மலரை சிறப்பாக செவ்வை பார்த்துத்தந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வியலாளர் திரு.கு. யோதிரட்ணராஜா அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த "பரமானந்தம்" என்ற மணிவிழா மலரைச் சிறப்பாக அச்சிட்ட குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் விளம்பர அன்பளிப்புக்களை வழங்கிய நண்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கலாநிதி பா. தனபாலன்,**
**சிரேஸ்ர விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தக விநாயகர் ஆலய
## பிரதம குருக்களுடைய ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுக்கு மணிவிழா கொண்டாடுவதையிட்டு எனது ஆசிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒழுக்கம், கல்வியில் சாதனைகள், புதிய ஆக்கங்களின் வெளியீடுகள் என யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இலங்கையில் தனித்துவமான முன்மாதிரியான கல்லூரியாகக் காணப்படுகின்றது. இதற்கு உன்னதமான அர்ப்பணிப்பினை பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் இதுநாள்வரை வழங்கியுள்ளார்.

கல்லூரியின் வித்தகவிநாயகர் முடிமன்னவைரவர் ஆலயத்தில் நடைபெறுகின்ற அனைத்துப் பூசை வழிபாடுகளிலும் பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் அவர்கள் தவறாது பங்கு கொண்டு இறை சக்தியைப் பெற்ற கனவான் ஆவார். மாணவ ஆசிரியர்களை ஆன்மீக நெறியில் சரியாக வழிகாட்டி சிறந்த அனுபவங்களை அவர்கள் பெற முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். சைவ சமயபண்பாட்டு விழுமியங்களைச் சரியாக மாணவ ஆசிரியர்கள் கைக்கொள்வதுடன் பாடசாலை மாணவர்களுக்கும் அவற்றைப் பின்பற்ற சரியான வழிகாட்டலை வழங்கி ஒரு ஆன்மீகத்தலைவரின் வகிபாக வழிகாட்டலை எம் எதிர்காலச் சந்ததியினருக்கு ஏற்படுத்திய நல்ல மனிதராக மணிவிழா நாயகன் சேவையாற்றியுள்ளார்.

சிறந்த கல்விச்சேவையாற்றி ஓய்வு பெறும் மணிவிழா நாயகன் அவர்தம் மனைவி மக்கள் எல்லோரும் தொடர்ந்தும் மகிழ்ச்சியான நல்வாழ்வு வாழ எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.'


சிவஸ்ரீ விநாயகமூர்த்தி குருக்கள் சிவாக்குருக்கள்
வித்தகவிநாயகர் பிரதம குருக்கள்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் கிறிஸ்தவ தேவாலய பரிபாலகரின் ஆசிச் செய்தி



யாழப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு முதற்கண் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த ஐந்து வருடங்கள் பல இக்கட்டான சவால்கள் மத்தியில் கல்லூரியைச் சிறப்பாக வளர்த்துள்ளார். இதற்கு முக்கிய காரணம் அவரது ஆன்மீகப்பற்றும் இறைபக்தியுமே ஆகும்.

எமது தேவாலயத்தில் நிகழும் கிறிஸ்தவ சமய நிகழ்ச்சிகளில் பங்குபற்றி மாணவ ஆசிரியர்களுக்கும், கல்வியலாளர்களுக்கும் எமக்கும் சிறப்பாக உற்சாகமூட்டியுள்ளார். அத்தோடு கிறிஸ்தவ மாணவ ஆசிரியர்களின் கிறிஸ்தவ மன்ற நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைபெற பேருதவி புரிந்துள்ளார்.

கலாநிதி சு.பரமானந்தம் அவர்கள் மிகச்சிறந்த மனிதத்துவ பண்புகளுடன் எம் எல்லோருக்கும் முன்மாதிரியாகத் திகழ்பவர். நல்ல மனிதர் மாணவ ஆசிரியர்களுக்கு ஆசிரிய வாண்மை தொடர்பாக நல்ல வழிகாட்டியாகத் திகழ்பவர். அவருடைய கல்விச் சேவைக்கும், அர்ப்பணிப்புகளுக்கும் எமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவரது மனைவி பிள்ளைகள் எல்லோருக்கும் சிறப்பான வாழ்வு வாழவும் வாழ்த்துகின்றேன். ஓய்வு காலத்தில் மணிவிழா நாயகன் தொடர்ந்து கல்விப்பணியாற்றி நல்வாழ்வு வாழ நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அருட்பணி. கு.று. ஜேம்ஸ்,**
**இயக்குனர், மறைகல்வி நடு நிலையம்,**
**யாழ் மறைமாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய மன்ற அனுசரணையாளர் அவர்களின் ஆசிச்செய்தி



எல்லாம் வல்ல அல்லாவைத்தொழுது வணங்கியவனாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழாவுக்கு எனது ஆசிச்செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஐந்து வருடங்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை மிகச்சிறந்த முறையில் முகாமை செய்து இலங்கையிலேயே முன்மாதிரியான கல்லூரியாகத் திகழவைத் பீடாதிபதி மணிவிழாநாயகன் கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் அர்ப் பணிப்பான கல்விப்பணியைப் பாராட்டுகின்றேன்.

கல்லூரியில் பயிலும் இஸ்லாமிய மாணவர்கள் இறைவழிபாட்டில் ஈடுபடவும் புனித நோன்புக் காலங்களிலும் முக்கிய இஸ்லாமிய தினங்களிலும் மிகச்சிறப்பான வழிகாட்டல்களையும், உதவிகளையும் செய்கின்ற மிக உயர்வான பண்பாளர் மணிவிழா நாயகன். அவருடன் நான் பழகிய சந்தர்ப்பங்கள் நிகழ்வுகளில் பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் மறக்க முடியாதவை அவருடைய கல்விப்பணி ஓய்வு காலத்திலும் தொடர இறையாசியை வேண்டுகின்றேன்.

மணிவிழா நாயகன் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களது மனைவி, பிள்ளைகள் மகிழ்ச்சியான நல்வாழ்வு வாழ இறைவன் துணைநிற்பானாக. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் மணிவிழா மிகச்சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


மு.மு.நிபாகிர் (தலைவர்)
தமிழ் முஸ்லீம் ஒற்றுமைக்கான அமைப்பு
யாழ். மாநகரசபை உறுப்பினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Congratulatory Message From chief Commissioner of Teacher Education Ministry of Education



Unique and memorable happy retirement wishes for Dr.S.Paramanathan the President of Jaffna National College of Education. You have been a great asset to the field of Teacher Education. With Your retirement will miss you very much not only for the Jaffna NCoE but also to the extra filed of education. You have rendered an ardent service especially as the president of Jaffna national College of Education. During the last five years you mauled the prospective teachers, specially with discipline, dedication and duty conscious great effort has been taken to provide first hand experience needed for teachers by providing a role model with a great well balanced personality as a lecturers, as a vice president and as the president of Jaffna National College of education for the long years.

You have had a very positive and healthy relation ship with ministry of Education which was very useful to run the college harmoniously and have guided your followers towards the correct path by setting a good leadership the way you work with your colleagues was highly supported to ran the process in very smooth and effective manner.

Your Management skills are appreciable in incorporating all the stake holders of the college for the execution of education process. you achieved the targets and goals by following the holistic approach as a team effort i believe that was the main factor for your success in every effort.

Thank you for your support and contribution wish you good luck and very happy retirement filled with joy goodness and prosperity

***Mrs.B.G.I.Kalani Hemalie***
***Chef Commissioner,***
***Teacher Education branch,***
***Ministry of Education,***
***Battaramullai.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமானந்தம் மணிவிழா தலைவரின் வாழ்த்துச் செய்தி
# "பரமானந்தம்" எனும் தனித்துவ ஆளுமை



இரண்டாயிரத்தொன்று மாசிமாதம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியின் அலுவலகம்.. புதிதாக ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட ஆசிரியர் குழாம்! பீடாதிபதி திரு.அ. அழகரட்ணம் கம்பீரமாக தனது இருக்கையில் சிங்கம் போல! புதிய எதிர்பார்ப்புக்கள், புதிய சிந்தனைகள், புதிய நண்பர்கள், புதிய கருத்தாடல்கள் கூடவே மனதிற்குள் இனம்புரியாத புதிய சிறிய பயம் எங்களுக்குள்.

புதிய நண்பர் குழாமினுள் மிக இளமையாக வசீகரிக்கும் தோற்றத்துடன் ஒருவராக எனக்கு அறிமுகமான ஒரு நண்பன் திரு.சு. பரமானந்தம். மிக அன்பாக எவருடனும் பண்புடனும் மரியாதையுடனும் மற்றவர்களை "அவர்களாகவே" அங்கீகரிக்கும் பண்பும் எதிலும் புதிய கோணத்தில் சிந்திக்கும் ஆற்றல் அப்பொழுதே அவரது எதிர்கால உயர்ச்சியை வெளிச்சமிட்டுக் காட்டியது.

கல்லூரியில் பல்வேறு பணிகள், பாட விதான, இணைபாடவிதான செயற்பாடுகள் நாள் தோறும் கல்லூரியின் செயற்பாடுகளை போஷிக்கும் பணிகள் எனப்பலவும் நடந்தேறின. இவ்வெல்லாப் பணிகளிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஒருவராக அடையாளம் காணப்பட்ட பரமானந்தம் இலகுவான பீடாதிபதி மற்றும் உபபீடாதிபதிகளின் நன்மதிப்பை பெற்றுக்கொண்டார் .

கல்லூரியின் பல்வேறு கணினி சார் பணிகளை தன்னுடைய கணினி சார் வல்லமையினால் இலாவகமாக நிறைவேற்றினார். கல்லூரியின் "பிரதிமை" முதற்கொண்டு "வித்தியாதீபம்" வரை பரமானந்தம் தனது முத்திரையை பதித்தார். "பரீட்சை" என்றால் பரமானந்தம் "புதிய மாணவர்கள் அனுமதி" என்றால் பரமானந்தம் "கடமை நேரத்திற்கு அப்பால் இரவு நேரம் வரை சேவை" என்றால் பரமானந்தம் எனப்பல பணிகளிலும் "உண்மையான ஆனந்தம்" கண்டார்.

படிப்படியாக புதிகாக வந்த நண்பர்கள் பழையவரானார்கள். சீனியர், யூனியர் வாதங்கள் எழுந்தன. பதவிநிலைகளின் மீதான நாட்டம் நண்பர்களின் பரஸ்பர அன்பை ஒட்டுணர்வை பரிசோதித்தது. "பகட்டுப் பேச்சுக்கள்". " போலியான சுயமேதாவித்தனம்" , "புறம் பேசுதல்", "எவரையும் பற்றி எவரிடமும் இகழுதல்", போன்ற குணங்கள் மெல்ல மிதக்க ஆரம்பித்தது. அப்போது இவை எவற்றிலும் துளிகூட பொருந்தாது தெளிவாக " என்னுடைய இலக்குகளில் கல்லூரியின் பீடாதிபதியாவது" என்று கூறினார். அவ்வாறு கூறியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாது அதற்கான முயற்சிகளிலும் எவருக்கும் தீங்கிளையாது அப்போதே தொடங்கினார்.

"பதவிகளை நாம் தேடக்கூடாது அவை நம்மை தானாக தேடிவரவேண்டும்" என்ற தாரக மந்திரத்தை தன்னுள்ளே விதைத்ததனால் அவருக்கு விரிவுரை இணைப்பாளர் , உபபீடாதிபதி போன்ற பதவிகள் தானாகவே கிடைத்தன. ஒரு பிள்ளை தானும் அனுமதியின்றி இருக்கக் கூடாது என புதிய அனுமதியில் கிடைத்த "கோட்டாவை" நிரப்புவதற்கும் எந்தப்பிள்ளையும் நியாயமின்றி சித்தியடையாதிருப்பதை தவிர்க்கவும் கண்விழித்த இரவுகள் உடனிருந்தவன் என்ற வகையில் நான் நன்கு அறிவேன். அந்த ஏழைப்பிள்ளைகளின் "போற்றுதல் , "ஆசீர்வாதம்", அவருக்கு கிடைத்த இறையருளாக நான் காண்கிறேன். பிள்ளைகள் பால் எப்பொழுதும் சிந்திக்கும் மென்திறனின் ஆற்றல் தான் " யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம்" என்பது எனது கருத்து.

அன்று எமக்கு கிடைத்த மீட்பர்களில் முதன்மையானவர் திரு. க பேணாட்சேர் எனின் மிகையாகாது. நிர்வாக நடவடிக்கைகள், தாபன விதிகள், மாதாந்தக் கூட்டங்கள், முகாமைத்துவக் கூட்டங்கள், அனுமதிப் பிரச்சினைகள், மாணவர் ஒழுக்காற்று பிரச்சினைகள் என கல்லூரியின் சிக்கலான பலபணிகளை தன்னுடைய துணிவான தெளிவான ஆளுமையால் கையாள்வது எப்படி என்பதை எடுத்துக்காட்டி புதிய ஆளுமைகளை உருவாக்கிய பெருமை அவரையே சாரும். அவரை ஒரு வழிகாட்டுனர் "Mentor" . ஆக வைத்துக்கொண்டு தலைமைத்துவக் கல்வியை சிறப்பாக பெற்றுக் கொண்டமையை குருபக்தியுடன் பரமானந்தம் கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன். அவருடைய உயர்ச்சியில் பேணாட் சேரின் பங்கு என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி".

நான் "கல்விப் புள்ளிவிபரவியல்" என்ற நூலை வெளியிட்ட நாளில் பேணாட் சேர் " என்ன பரமானந்தம் உங்கள் நூல்களை காணவில்லை" என்று கேட்டார், "விரைவில் வரும் என அமைதியாக கூறினார்" அவரது அமைதியான பதிலின் ஆற்றலின் விளைவுதான் அவரது உண்மையான தேடலின் வெளிப்பாடுகளான கல்வி தொழிநுட்பம், வகுப்பறை முகாமைத்துவம் கட்டுருவாக்கவாதம் போன்ற இன்னோரன்ன பல நூல்கள். "ஆசிரியம்" என்ற சஞ்சிகையில் வெளிவந்த பல கட்டுரைகள் அவரது அறிவு இற்றைப்படுத்தலை தெளிவாக எடுத்தியம்பின.

அவர் விரும்பாத ஒன்று எனின் அது "பிரச்சினைகள்" தான் . அதற்காக அவர் விரும்பும் ஒன்று "தீர்வுகள்" மட்டும்தான். அவற்றை கையாளும் மென்திறனில் வெற்றி மேல் வெற்றிதான் ( Win -Win) பரமானந்தத்துடன் இணைந்து பணியாற்றுவது என்பது மனதுக்குள் மகிழ்வுட்டும் ஒன்றாகும். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இணைந்து பணியாற்றிய சந்தர்ப்பங்கள் எனக்கு நிறையவே உண்டு. பணிகளை பகிர்ந்து, அறியாத விடயங்களை அறிவித்து , மற்றவர்களை புரிந்து , சமயோசிதமாக செயற்படும் பாங்கு அலாதியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் எப்பொழுதும் நான் பதவிநிலைகளுக்கான "EGO" வை உணர்ந்ததில்லை. நான் இடமாற்றத்தின் போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை தெரிந்தெடுத்தமைக்கான பிரதான காரணங்களில் ஒன்று "பரமானந்தத்துடன் பணியாற்றல் ஆனந்தமானது" என்பதாகும். இவ்வகையில் பரமானந்தத்திற்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

தோற்றத்தில் ஓய்வுக்கான எந்தவித தளர்நிலையையும் காட்டாத மாரக்கண்டேயனாக வலம் வரும் பரமானந்தம் ஓய்வு பெறுகிறார் என்பதில் பலர் கொள்ளும் சந்தேகத்திற்கு நியாயமிருக்கின்றது அந்த நியாயம் அவர் தன்உளநலனில் கொண்ட ஆரோக்கியம் மட்டுமே.

மணிவிழாக்காணும் பரமானந்தம் என்றும் ஆனந்தத்துடன் அவரது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.ஜெயகாண்டீபன்,**
**உபபீடாதிபதி, நிதி நிர்வாகம்,**
**யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளர் அவர்களின் வாழ்த்துரை



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன். ஒரு பொருள் கிடைக்கும் போது அல்லது கிடைக்க இருக்கும் போது அதன் அருமை தெரியாது. அப்பொருள் தொலையும் போது கிட்ட இல்லாத போது தான் அது எவ்வளவு முக்கியமாகும் என்பது புலனாவது போலவே ஒருவருடைய அரச சேவையின் போதலும், சேவையும் அமையும். இவ்விடயத்திற்கு ஒப்பாகவே எம் பீடாதிபதியின் சேவையும் உள்ளது.

மணிவிழா என்பது இன்றைய சிறப்பு விழா ஆகும். திருமணமான தம்பதியரில் ஆண் அறுபது வயதை அடையும் போது இரண்டாவது முறையாக திருமணம் மணிவிழாவாக நடைபெறுகின்றது. இதனை அறுபதாவது திருமணம் அதனை சஷ்டியப்த பூர்த்தி அல்லது மணிவிழா என அழைக்கின்றனர். அந்த வகையில் மணிவிழா காணும் எங்கள் நாயகனுக்கு எமது கல்லூரிச்சமூகம் சிறப்பான மணிவிழாவை எடுத்துள்ளது. அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்கள் கல்லூரியின் சொத்தாக மாண்புமிகு அரசருக்கு மணிவிழா சிறப்பாக அமையவும் ஓய்வுக்கால வாழ்க்கை சிறப்பாகவும் இருக்க என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பொறுமை, விட்டுக் கொடுத்தல் இவ்விரண்டும் மனித வாழ்வில் முக்கியமானதாகும். ஆனால் இவை இரண்டிற்கும் எல்லைகள் உண்டு. அதுபோலவே அரச சேவையிலும் ஓர் எல்லையுண்டு அதுதான் அறுபது வயது பூர்த்தி... தற்போது அறுபது வயதிற்கு மேல் சேவை செய்ய முடியாது. அதுவே மணிவிழாவாக சிறப்பிக்கின்றது. இருப்பினும் இவரது சேவை அளப்பெரியது. தன் குணத்தினால் எல்லோரையும் வசீகரப்படுத்தி தனது சேவையின் இலக்கை அடைய வழி சமைத்தார். சிறந்தவர், வல்லவர், ஆண்அழகர் என்று பலவாறு புகழ்ந்து கொண்டே போகலாம்.

"தவிர்க்க முடியாத சில இழப்புக்கள்....
வெளிப்படுத்த முடியாமல் சில உண்மைகள்....
நம்ப முடியாமல் சில துன்பங்கள்....
அனுபவிக்க முடியாமல் சில சந்தோசங்கள்....
இவைகள் நிறைந்தது தான் வாழ்க்கை....!!
வாழ்க வளமுடன்

**இரா. அருள்நேசன்,**
**பதிவாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கலாசாலையின் வெற்றிகரமான இயக்கத்திற்கு வழித்தடம் வகுத்தவர்



இலங்கையில் ஆசிரிய கல்வியை வழங்கும் முக்கிய நிறுவனங்கள் பலவெனினும் மத்திய கல்வி அமைச்சின் நேரடி நெறிப்படுத்தலில் இயங்கும் முக்கிய நிறுவனங்களாக ஆசிரிய கலாசாலைகளையும் தேசிய கல்வியியற் கல்லூரிகளையும் அடையாளப்படுத்தலாம். பலரும் பார்த்து வியக்கும் வகையில் மேற்கண்ட இரு நிறுவனங்களுக்கும் உறவுநிலை உண்டென்றால் அது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும் இடையிலான உறவுதான் என்பது கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் வெளிப்படுத்திய செய்தி ஆகும். இந்த உறவின் பெருமைக்கான முக்கிய சூத்திரதாரி பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் அவர்களே ஆவர்.

கொவிட் நெருக்கடிக் காலத்தில் கல்வி அமைச்சின் இ-தக்சலா சேவையின் ஊடாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான நிகழ்நிலை வகுப்புகளை முன்னோடியாக நடத்தியது. எமது கலாசாலைக்கும் அந்த வழியைப் பின்பற்றுமாறு நெறிப்படுத்தியது இதனால் இ-தக்சலாவில் நுழைந்த ஒரேயொரு கலாசாலையாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விளங்கிற்று. சமூகத்திற்கான மாற்றம் என்னில் இருந்து... என்ற தொனிப்பொருளில் கலாநிதி சு. பரமானந்தம் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட வாராந்த கருத்தரங்கத் தொடரைப் பார்த்து மறுவாரமே கலாசாலை சார்ந்து நாமும் ஆரம்பித்தோம். குறிப்பிடத்தக்களவு வாரங்கள் அவரது ஆலோசனையுடன் வெற்றிகரமாகக் கருத்தரங்குகளை நடத்தினோம். ஆயினும் பீடாதிபதியவர்கள் பலரும் பிரமிக்கத்தக்க வகையில் வருடக்கணக்காகப் பயன்தரு கருத்தரங்கத் தொடர்களை முன்னின்று நடத்தினார். கல்விக் கல்லூரி நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் வகையில் குருதீபம் என்ற இ-சஞ்சிகையை அவர் தொடங்கினார். கலாதீபம் என்ற பெயரில் நாமும் இ-சஞ்சிகை தொடங்க வழிகாட்டினார். தான் பங்கேற்கும் முக்கிய பொது நிகழ்வுகளில் எமது நிறுவனத்தின் பிரதிநிதித்துவத்தையும் உறுதிப்படுத்துவதோடு கௌரவமாக எம்மையும் தனது வாகனத்தில் அழைத்துச் சென்று பங்கேற்க வைப்பார்.

கலாசாலையில் பௌதிக மற்றும் மனித வளப்பற்றாக்குறைகள் ஏற்படும் பட்சத்தில் நமது ஆசிரியர்களின் கல்விக்கு எந்தவித பங்கமும் நேரக்கூடாது என்ற உணர்வுடன் ஆவன மேற்கொண்டு எம்குறைகளைக் களைவதில் பீடாதிபதியின் பங்களிப்புக் காத்திரமானதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலையின் நூற்றாண்டைக் கௌரவிக்கும் வகையில் பல நிகழ்வுகளில் தனதும் தான் சார்ந்த நிறுவனத்தினதும் பங்களிப்புகளை வழங்கினார். இரண்டு நிறுவனங்களுக்கிடையில் சிநேகபூர்வ விளையாட்டுப்போட்டியை ஏற்பாடு செய்து அதனைப் பெருவிழாவாக முகிழ்த்தெழச் செய்ததுடன் பெருமனதுமிக்க நடத்தைகளையும் வெளிப்படுத்தினார். கலாசாலையின் நூற்றாண்டு சிறப்பு நிகழ்வுகளுக்கு உரிய வழிகாட்டல்களை மேற்கொண்டார். எமது கலாசாலைச் சமூகத்திற்கு என்றும் அரணாகவும் விளங்கினார்.

இளமை மிடுக்கோடு இன்றும் பயணிக்கும் கலாநிதி சு. பரமானந்தம் அவர்கள் அகவை அறுபது கண்டு ஓய்வு பெறுகிறார் என்பதை ஏற்பதற்கு எம்மனம் மறுக்கிறது. கல்லூரியில் வருங்காலத் தலைமைகள் இத்தகைய பண்புணர்வுடன் பயணிப்பார்களா என்கிற ஏக்கத்தையும் கூடவே எழச்செய்கிறது.

பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் அவர்கள் ஆற்றிய தன்னலங் கருதாக் கல்வித் தொண்டுகளுக்கு கலாசாலைச் சமூகத்தவர் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் அவரது மணிவிழா மாண்புற எங்கள் நல்வாழ்த்தை நவில்வதிலும் மகிழ்வுறுகிறேன்.

**சந்திரமௌலீசன் லலீசன்,**
**அதிபர்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தாபக பீடாதிபதி அவர்களின்
# வாழ்த்துச் செய்தி
# "ஆரவாரமற்ற செயற்றிறனாளர்"



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழா மலரில் அவரை வாழ்த்தி சில வார்த்தைகள் கூறுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதகளின் முற்பகுதியிலிருந்து அவருடனான உறவு எனக்குள்ளது. அவரை ஆசிரியராக, பலாலி ஆசிரியர் கலாசாலைப் பயிலுனராக, கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தராக, பட்டதாரியாக, விரிவுரையாளராக, உபபீடாதிபதியாக, பீடாதிபதியாக என்ற பல நிலைகளில் அவரைக் கண்டு மகிழ்ந்துள்ளேன்.

அங்கெல்லாம் அவரது திறமைகளும், ஆற்றல்களும் செயற்றிறனும் பிறவும் என்னை வியந்து மகிழ வைத்துள்ளது. தனது கணிதத்துறையிலும், அதனைக் கற்பிக்கும் முறை சார்ந்தும், கணினித்துறையிலும், இன்னும் கல்வியியலில் புத்தாக்கத் தொழிற்பாடுகளிலும் சமூக எழுச்சிச் செயற்பாடுகளிலும் நாட்டமிக்கவராகச் செயற்பட்டு வருபவர் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள்.

அவர் எக்கருமத்தில் ஈடுபட்டாலும் அதனைச் செவ்வனே செய்து முடித்துக் கொள்வார். சிறப்பாக மற்றவர்கள் மதிக்கும்படியாகவும், பயன்பெறும் வகையிலும் செய்து முடித்து அமைதியாகத் தன்வழி செல்வார்.

ஆதலால் அவரை 'ஆரவாரமில்லாத செயற்றிறனாளராக' நான் மதிப்பிடுவதுண்டு. இக் கருத்து அவரை அறிந்த வேறு பலரிடமும் இருந்துள்ளதையும் நானறிவேன். இத்தகு தனித்திறமைகள் கொண்டவர் எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பீடாதிபதியாக நியமனம் பெற்ற போது மிக்க மகிழ்ச்சி கொண்டேன்.

அவரது ஆற்றலும் திறமையும் அவற்றோடிணைந்த உழைப்பும் எமது கல்லூரி பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டு என என்னுள் பேருவகை கொண்டேன். காணாமற்போன சில பக்கங்கள், நிரப்பப்படும் என்றும் மகிழ்ந்தேன். காலத்தின் கொடுமை? அவரது ஆற்றலோடு இணைந்த உழைப்பை முழுமையாகப் பெறமுடியாமற் போய்விட்டது.

கொடிய கொரோனாவும், தவிர்க்கமுடியாத பொருளாதார மட்டுப்பாட்டுச்சவால்களும் அவரை தடுத்து நின்றன. கொரோனா பாதிப்புக்குள்ளானவர்களுக்காக கல்லூரி கையகப்பட்டது. மனிதாபிமான நோக்கில் அதற்கு ஆதரவளித்து நின்றார். கல்லூரிக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியோ, வளங்களோ அற்ற நிலையில் தற்துணிவுடன் முகிழ்ந்ததுதான் எமது கல்லூரி. ஆனால் இன்று எல்லாமிருந்தும் இல்லாத நிலை. பீடாதிபதி பரமானந்தம் எதிர் கொண்ட மிகச் சவாலான சந்தர்ப்பம் அது. முகிழ் நிலை அசிரியர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். பீடாதிபதியோ கல்வியியலாளர்களோ அல்லது கல்விசாரா ஊழியர்களோ கல்லூரி வளாகத்தில் செல்ல முடியாத நிலை.வித்தகரும் தனிமைப்பட்டார். கல்வி முடங்கியது.

என்ன செய்யப் போகின்றார் பீடாதிபதி என்று கல்வி உலகம் எதிர்பார்த்தது. அந்த இக்கட்டான நிலையில் அவர் தளர்ந்து சோர்ந்து இருக்கவில்லை. இடர்கால முகாமைத்துவ வழிமுறைகளை பிரயோகிக்க முற்பட்டார். அவரது நிதானமும், ஆர்வமும், விடாமுயற்சியும் நல்ல பலனைத் தந்து நின்றன. அமைதியாக சிந்தித்து தொழிற்பட்டார்.

கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் அலுவலகம் அமைத்து அங்கிருந்த முகிழ்நிலை ஆசிரியர்களையும், உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் நெறிப்படுத்தத் தொடங்கினார். நிகழ்நிலை வகுப்புக்கள் (on line classes) நடைபெற ஏற்பாடுகள் செய்தார்.

கல்வியியலாளர்களை அவ்வழி நெறிப்படுத்தியதனால் கல்வி தடையேதுமின்றி கிடைத்தது. கல்லூரி உயிர்ப்புடன் தொழிற்பட்டது. இதனைக் கேள்வியுற்ற கல்வி அமைச்சும், பிரதம ஆணையாளரும் ஏனைய கல்வியியற் கல்லூரிகளையும் இவ்வழியில் தொழிற்டப் பணித்து நின்றனர். அவ்வழி பீடாதிபதி கலாநிதி பரமானந்தம் அவர்களும் அவர் நெறிப்படுத்தி நின்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் முதன்மை பெற்று உயர்ந்து பெருமை கொண்டது.

எல்லா வளங்களும் நிறைந்திருக்க அங்கு இருப்பவற்றைக் கொண்டு செயற்படும் முகாமைத்துவத்தைவிட அங்கு தட்டுப்பாடுகள் தோன்றும் வேளை மாற்றிச் சிந்தித்து நிறைவாக ஆற்றுவதே சிறப்பான ஆளுமை ஆகும். அந்த ஆளுமை கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களிடம் நிறைந்துள்ளது.

அவர் இளைப்பாறினாலும் அந்தத் திறனைத் தொடர்ந்து எமது சமூகத்துக்கு வழங்குவார் என்று நம்புகின்றோம். அதற்கு எல்லாம் வல்ல வித்தக விநாயகரும், நல்லூர் முருகப்பெருமானும் அவருக்கு நல்லாரோக்கிய வாழ்வு வழங்கிட பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்,**
**ஸ்தாபகப் பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு பெற்ற இரண்டாவது பீடதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாக இருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நான்காவது பீடாதிபதியாகப் பொறுப்பேற்று அர்ப்பணிப்பான சேவையை ஆற்றியவர். அவருடைய காலத்தில் கல்லூரியை நடாத்துவதில் மிகப்பெரும் சவால்களை எதிர்கொண்டார். கொரோனா பெரும் தொற்று நோய் மற்றும் சிகிச்சை நிலையமாக கல்லூரி மாற்றப்பட்டமை, அடுத்தது இலங்கை வரலாற்றில் கண்டிராத மாபெரும் பொருளாதார நெருக்கடி இவ் இரு பிரச்சினைகளையும் சவால்களாக ஏற்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்விசார், கல்விசாரா ஊழியர்களை அணிசேர்த்து முகிழ்நிலை ஆசிரியர்களின் உதவியுடன் கல்வியமைச்சின் வழிகாட்டலில் இன்று வரை கல்லூரியைச் சிறப்பாக நடாத்தி வருகின்றார். அதற்காக முதற்கண் எனது பாராட்டுக்களை அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கொரோனா காலத்தில் மூடப்பட்டு சிகிச்சை நிலையமாக இருந்த போது முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு Zoom வகுப்புக்கள் நிகழ்நிலை நிகழ்ச்சிகள், e-தக்சலாவையைப் பயன்படுத்தி தகவல் தொழில் நுட்பத்தினூடாகக் கல்லூரியைச் சிறப்பாக இயக்கினார். இதன் வெற்றிகரமான விளைவு கல்வியமைச்சும், பிரதம ஆணையரும் எல்லா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகளும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வந்து தகவல் தொழில்நுட்பதிறன் Best Practice அனுபவங்களைப் பகிர்ந்து பயிற்சி பெற்றமை ஒரு மிகச்சிறந்த வெற்றிகரமான கல்விச் சாதனை இதனை அனைவரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் அவர்களின் மனிதத்துவம் பொருந்திய முகாமைத்துவத்திறன் போற்றப்பட வேண்டியது. அவர் ஒரு சிறந்த மனிதர் எல்லோரையும் மதிப்பவர் தன்னால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்யும் நல்ல உள்ளம் படைத்தவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னால் பீடாதிபதிகள், கல்வியியலாளர்கள், முகிழ்நிலை அசிரியர்களை மதித்து மரியாதையுடன் கௌரவமாக நடாத்தும் மாண்புறு பண்பாளர். நல்லுள்ளம் படைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோர்ககும் பெய்யும் மழை'

என்ற திருவள்ளுவரின் முதுமொழிக்கு இலக்கணமானவர் மணிவிழா நாயகன் சு.பரமானந்தம் அவர்கள் இவருடைய பண்பான நடத்தைகள், சிந்தனை - சொல் - செயலில் தெளிவு, புன்னகை ததும்பும் முகம், பொழிவான உடல், எடுத்த கருமங்களை நேரம் காலம் பார்க்காது செய்யும் உழைப்பு, சிறந்த முன்மாதிரி நல்லாசிரியராகக் கடமைகளைச் செய்யும் முன்னுதாரணங்கள் சிறப்பானவை. ஆசிரியர் கல்வி சார்ந்த ஆக்கங்களையும், நூல்களையும் எழுதுதல் சிறந்த கல்வியியல் வளவளாராகக் கடமையாற்றல். இயற்கை விவசாயத்தில் விருப்பம், இறை வழிபாட்டிலும் ஆன்மிகச் செயற்பாடுகளிலும் முகிழ்நிலை ஆசிரியர்களை முழுமையாக ஈடுபடுத்தி அவர்களை அற - விழுமிய நெறியில் நல்வழிப்படுத்தும் செயலாற்றுகைகள் இன்றைய காலத்திற்கு அவசியமானவை. கலாநிதி சு.பரமானந்தம் அவர்கள் இவற்றை எல்லாம் மிகவும் சகிப்புத்தன்மையுடன் பல சவால்களினூடாகக் கல்லூரியில் நடைமுறைப்படுத்தி சாதனையை ஏற்படுத்தியுள்ளார். அதற்கான நன்றி மறவாமை விழாவாக இம் மணிவிழா இனிதாகநடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் நிறைவான வாழ்விற்கு அவர்தம் பாரியார் பெரிதும் உதவி வருகின்றார். அத்தோடு அவர்களுடைய பிள்ளைகள் மூவரும் மிகச்சிறந்த கல்விச் சாதனையாளர்களாகக் காணப்படுகின்றார்கள். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பதற்கு முன்னுதாரணமாகப் பரமானந்தம் அவர்களுடைய குடும்பம் திகழ்கின்றது. அவருடைய தாய், தந்தை, சகோதர, சகோதரிகளும் மிகவும் அன்பும், பாசமும் பொருந்திய பண்பாளர்கள். இப்பண்புகளை எல்லாம் எல்லாச் சந்தர்ப்பத்திலும் வெளிக்காட்டும் நல்ல மனிதர் மணிவிழா நாயகன் கலாநிதி சு.பரமானந்தம் அவர் ஓய்வு காலத்திலும் மிகச்சிறந்த நல்வாழ்வு வாழவும், கல்விப்பணியாற்றவும் எனது வாழ்த்துக்களையும், இறையாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இம்மணிவிழாவைச் சிறப்பாகச் செய்கின்ற மணிவிழா அமைப்பினரையும் பாராட்டுகின்றேன்.

'வெள்ளத்தனைய மலர் நீட்டம்
மாந்தர்க்கு தம் உள்ளத்துணையது உயர்வு'

**திரு.S.K.யோகநாதன்**
**2ஆவது ஓய்வு நிலைப் பீடாதிபதி**
**யாழ்ப்பாண தேசியியல் கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓய்வு பெற்ற மூன்றாவது பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் உயர்திரு கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக மன மகிழ்வு கொள்கிறேன். தன்னோடு கடமையாற்றி ஓய்வுபெறும் ஒரு ஆசிரிய கல்வியியலாளனை பாராட்டுவதற்காக இக்கல்லூரி விரிவுரையாளர்கள் முன்வந்து செயற்படுவது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

ஆசிரியராக தனது கல்விப் பணியை ஆரம்பித்த இவர் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் விரிவுரையாளராக ஆசிரிய கல்விச் செயற்பாடுகளை தொடர்ந்து படிப்படியாக சிரேஸ்ட விரிவுரையாளர். உப பீடாதிபதி எனப் பல பதவி உயர்வுகளைப் பெற்று, பின் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிடாதிபதியாக பதவி உயர்வு பெற்றதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக தனது கல்வித் தகைமையையும் உயர்த்திய கல்விமான் ஆகும். இவரிடம் காணப்படும் சிறப்பு அம்சமாக எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்பதாகும். இவர் ஆசிரிய கல்விக்குத் தனது அர்ப்பணிப்புடனான பல்வேறு பங்களிப்புகளை வழங்கியமை பாராட்டுக்குரியதாகும். முகிழ்நிலை ஆசிரியர்களுடைய ஆளுமை விருத்திக்கான பல செயற்பாடுகளைச் செய்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டவராவர். இன்றைய காலகட்டத்தில் ஆசிரியத்துவ மேம்பாட்டிற்க்கு இது மிக அவசியமானதாகும். இவர் நாட்டின் பல நிறுவனங்களில் வளவாளராக இருந்து ஆசிரியர்களின் அபிவிருத்தியை மேம்பாடு அடையச்செய்து கொண்டிருக்கிறார் மேலும் தேசிய கல்வி நிறுவகத்தின் முதுகல்விமானிப் பட்டப்படிப்பின் இணைப்பாளராக சிறந்த முறையில் செவ்வனே செய்து வருவது பாராட்டுக்குரியது ஆகும். கல்வியல் துறை சார்ந்த பல கட்டுரைகளை சஞ்சிகைகளில் எழுதி ஆசிரியர்களின் அறிவுவிருத்திக்கு பெரும் பங்காற்றி வருகிறார்.

நிறைந்த அனுபவமும் ஆளுமையும், உயர்ந்த அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளும் நேரிய சிந்தனையும் சமூக பற்றும் கொண்ட இவர் போன்றவர்கள் இளைப்பாறுவது என்பது கல்விப்புலத்தில் மிக பெரிய இடைவெளியை ஏற்படுத்தும் என்பது தெளிவானது ஆகும். எனினும் அவரது சேவை வரையறுக்கப்பட்டிருப்பதால் அவர் ஓய்வு பெறுவது என்பதும் இயல்பானது ஒன்றாகும்.

இன்று மணிவிழாக் காணும் நண்பனும் பீடாதிபதியுமாகிய கலாநிதி. சுப்பிரமணிம் பரமானந்தம் அவர்கள் ஓய்வுக்காலத்தில் நீண்ட ஆரோக்கியத்துடனும் சீரும் சிறப்புடனும் தனது குடும்பத்தினருடன் வாழுவதுடன் தொடர்ந்து சமூகத்திற்கு கல்விச் சேவையை தொடர எல்லாம் வல்ல முடிமன்னர் வைரவரும் வித்தக விநாயகரும் அருள்பாலிக்க வேண்டும்.

**திரு. ச.அமிர்தலிங்கம்,**
**ஓய்வு பெற்ற பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு மனிதம் ஆனந்தம்



"ஒவ்வொரு மனிதனும் அடுத்தவனுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். நீங்கள் எதுவாக இருக்க விரும்புகிறீர்கள் என யோசித்துப் பார்ப்போமாயின் எதாவது ஒரு தொழிலே ஞாபகத்திற்கு வரும். அந்தச் சிந்தனையிலிருந்து வேறுபட்ட தூரநோக்கை கொண்டவர் தான் இன்று வாழ்ந்து நிற்கும் "பரமானந்தம்" தொழில்துறைக்கு அப்பால் பல வேறுபாத்திரங்களை ஏற்று வாழ்ந்து வருபவர். தலைவர், கொடையாளர், ஊக்குவிப்பாளர் வழிகாட்டி, நல்லுறவாளர், முன்மாதிரி இவ்வாறு இன்னும் பல நடி பங்கை ஏற்று சரியாக வாழ்ந்து காட்டி வருபவர். இவை ஒவ்வொன்றையும் நாங்கள் ஒவ்வொருவரும் அனுபவித்திருக்கின்றோம் என்பது உண்மைமையே. எனவே அவற்றை இங்கு குறிப்பிட்டு விளக்க வேண்டியதை தவிர்த்துக் கொண்டு எனக்கும் "பரத்துக்குமான" உறவை இங்கு ஒவ்வொன்றாக தருவதற்கு விரும்புகின்றேன்.

**கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அறிமுகம்**

அப்படித்தான் அவருடைய முழுப்பெயருடன் அறிமுகமாகிக் கொண்டேன். அவரது பெயரையும் அவரது இயல்பையும் எனக்கு அறிமுகமாக்கியவர் வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் மறைந்த திருமதி. V.R.A ஒஸ்வோல்ட் அம்மணி. அவருடைய அறிமுகத்துடன் முதன் முதலில் பரமானந்தத்தை வலய கல்விப்பணிமனையின் திட்டமிடல் பிரிவில் சந்தித்தவேளை எனக்கு ஞாபகம் இருக்கிறது. இது 2001ம் ஆண்டு. அதே ஆண்டில் தான் திரு.சு.பரமானந்தம் (பரம்) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விரிவுரையாளராக நியமனம் பெற்று வந்திருந்தார். அவ்வேளையில் நான் உப பீடாதிபதியாக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அவ்வேளையில் பரத்திடம் நான் கண்ட முதல் பண்பு பெரியவர்களை மதிக்கும் கௌரவப்படுத்தும் பண்பு. இதனூடாகவே எனக்கும் அவருக்குமான உறவு தொடங்கி அது குடும்ப உறவாக உருவாக்கம் பெற்றது.

**எமக்கிடையேயான குடும்ப உறவு**

தனி உறவாக இருவருக்கிடையில் உருவெடுத்த உறவு குடும்ப உறவுகளின் அறிமுகத்துடன் வியாபகம் அடைந்தது. படிப்படியாக வளர்ந்த வியாபித்த நல்ல கல்லூரியின் விரிவுரையாளர்கள் விடுதிக்கு குடியேறி வந்ததைத் தொடர்ந்து இன்றும் இறுக்கமான நெருக்கமான உறவுகளாகி எங்கள் இரு குடும்பங்களுக்கு இடையே இன்பத்திலும் துன்பத்திலும் பகிர்ந்து கொண்டு பங்கெடுத்துக் கொண்ட மறக்கமுடியாத சந்தர்ப்பங்கள் பல உள்ளன. இவற்றை விளக்கமாக சொல்ல என்னால் முடியவில்லை. இவ்வாறு உணர்ந்து உறவும், மூத்தவர்களை மதிக்கும் பண்பும் எனது நிர்வாக செயற்பாட்டிற்கு பெரும் உதவியாகவும் ஊக்குவிப்பாகவும் இருந்தமை குறிப்பிடக்கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிர்வாகத்தில் துணையாளனாக.**

2001 ஆண்டில் வவுனியா தே.க. கல்லூரியில் இணைந்த போது விரிவுரையாளனாகவும் உயர்பீடாதிபதி பகுதியாக எனக்கு தொடங்கிய உறவு நான் 2002ம் ஆண்டு பீடாதிபதியாக பொறுப்பேற்ற பின்னரும் நான் ஓய்வுபெறும் (2014) வரையினும் ஒன்பது ஆண்டுகள் எனது பீடாதிபதி செயற்பாட்டில் இணைந்து செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அவை உண்மையில் என்னைப்பலப்படுத்தி ஊக்குவித்தமை குறிப்பிடக்கூடியவையாகும். எனது பீடாதிபதி பதவிக்காலத்தில் பெரும் காலம் சவால்மிக்க காலம் என்பதை பலரும் அறிந்திருக்கிறார்கள். பீடாதிபதியாகவும், தனிப்பட்டவனாகவும் நான் எதிர்கொண்ட சவால்களிலும் நடைகளிலும் உடனிருந்தவர்களில் பரம் முக்கியமான துணையானர். நிர்வாகியாக, தலைவனாக முகம் கொடுத்த பல சவால்களுக்கு உடன் இருந்து வெற்றிகரமாக அவற்றை மேற்கொள்ள உதவியாக இருந்தார். தனிப்பட்ட பல பிரச்சினைகளின் போதும் கூடவே இருந்து உதவியவனாவார். பலர் என்னுடனிருந்து செயற்பட தயங்கினார்கள். விமர்சனங்களுக்கு அஞ்சினார்கள் அதனால் என்னைவிட்டு தூர விலகி நின்று செயற்பட்டார்கள். அவ்வாறான நிலைகள் ஒவ்வொன்றிலும் கூட இருந்து செயற்பட்டவர்களில் ஒருவர் அதனால் இவருக்கு பீடாதிபதிக்கு சார்பானவர் என்ற ஒரு கருத்தும் நிலவிய வேளையிலும் அவர் பின்வாங்காது உண்மையை அறிந்து செயற்பட்டவர். இன்னும் பல உள்ளன.

கல்வியமைச்சின் பல செயற்பாடுகளை தான் வெற்றிகரமாக செய்து உடனிருப்பு உதவியாக இருந்தமை குறிப்பிடக்கூடியதாகும். குறிப்பாக தேசிய கல்வியற்கல்லூரிகளுக்கு மாணவ ஆசிரியர்களை உள்வாங்கும் செயற்பாட்டில் கல்வி அமைச்சுமட்டத்தில் நான் நம்பிக்கைக்குரியவனாகவும் ஆலோசகனாகவும் செயற்படுவதற்கு பரத்தின் உடனிருப்பு வழிகோலியது அறிக்கைகள் சமர்ப்பித்தல், கருத்துச்செறிவாக கலந்துரையாடல்களில் பங்கெடுத்தல் போன்ற பல விடயங்களில் 'பரம்' துணையாளனாக இருந்தமை குறிப்பிடக்கூடியவையாகும். இதனால் நான் ஒரு சாதனையாளனாக இனம் காணப்பட்டேன். என்னை சார்ந்திருந்த சாதனைகளில் பரத்தின் உடனிருப்புக்கு பல உதாரணங்கள் உள்ளன அவற்றில் சில...

**சாதனைகளின் பங்காளன்**

உள்ளூர்யுத்தம் அசாதரணமான நாட்டு நிலைமைகள் காரணமாக தேசிய கல்வியற்கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு அனுமதி கிடைத்த பல மாணவ ஆசிரியர்கள் 2005ம் ஆண்டிலிருந்து தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு வந்து சேரமுடியாமல் போனமை துர்ரதிஸ்ரவசமானதே. பின்னர் 2009ம் ஆண்டில் உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களோடு அவ்வாறானவர்களில் பல வவுனியா நலன்புரி முகாம்களுக்கு வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் மீண்டும் இழந்த சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தனர். அவர்கள் வெவ்வேறு கல்லூரிகளில் அனுமதி பெற்றவர்களாக இருந்தனர். அவ்வாறானவர்களின் விபரங்களை சரிவர சேகரித்து தொகுத்து, உறுதிப்படுத்தி, தெளிவுபடுத்தி ஆசிரியர் கல்வி பிரதம ஆணையாளரின் ஊடாக கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதி பெற்று அவர்களை பல்வேறு தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கு இணைத்துக்கொள்ள முடிந்தது என்றால் இவ்விடயத்தில் எனக்கு உதவியாக இருந்த சாதனைப்பங்காளி கலாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.பரமானந்தமாகும். இன்னும் பல உள்ளன.

கல்வியியற்கல்லூரிகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆவணங்களைச் சேகரித்து வைக்கும் பழக்கம் என்னிடம் இருந்தது அதற்கும் பரம் உதவியாக இருந்தார். கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரிக்கிளையில் ஏதேனும் ஆவணங்கள் அல்லது தகவல்கள் தேவைப்பட்டால் வவுனியா தேசிய கல்லூரியில் கேட்டால் கிடைக்கும் எனக் கேட்கப்படுவதுண்டு. நான் ஓய்வுபெற்ற பின்னரும் அவ்வாறு என்னிடம் கேட்கப்பட்டதுண்டு. அவ்வேளைகளில் எல்லாம் நான் கலாநிதி சு.பரமானந்தத்திடம் கேட்டால் கிடைக்கும் என அறிமுகமாக்கியிருந்தேன்.

இவ்வாறு பல சாதனைகளுக்கும் பதிவுகளுக்கும் சாதனைப்பங்காளியாக இருந்தவரே கலாநிதி சு.பரமானந்தம் ஆகும்.

ஒருமுறை மகரகம தேசிய கல்வி நிறுவகத்திலிருந்து ஒரு செயற்பாட்டிற்காக வந்தவர்களில் ஒரு செயல்திட்ட அலுவலர் (PO) என்னிடம் பரமானந்தத்தைக் காட்டிக் கேட்டார் இவர் உங்களது தொழில் நுட்பவியலாளரா என்று. இல்லை அவர் விரிவுரையாளர் என்றேன். அந்தளவுக்கு பரம் கீழிறங்கி பொறுப்புடன் வேலை செய்பவராக இருந்தார். இதுவும் அவரது பண்பும் சாதனைப்பாங்குமாகும். பின்நாட்களில் அவரை ஒரு சிறந்த நிர்வாகியாகவும் இனம் காண இவை உதவியது. அவரது பண்புகள் இன்னும் அடையாளம் காணப்பட்டவையே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அவரை இட்டுச்சென்றது.

**வவுனியாவிலிருந்து யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு**

நான் 2014ல் ஓய்வுபெற்ற பின்னர் 2015ல் கலாநிதி சு.பரமானந்தம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (SLTES) தரம் I க்கு பதவி உயர்வு பெற்றிருந்தார். அவ்வேளையில் கலாநிதி.சு.பரமானந்தம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக வேண்டும் என ஆசைப்பட்டேன். அவரது பீடாதிபதி நியமனத்துக்கு முன் நான் என்னால் முடிந்த வரை அதற்கான முயற்சியும் செய்து பார்த்தேன். ஆனால் அது சாத்தியமாகவில்லை. எப்படியோ கல்லூரிக்கு பீடாதிபதியாக நியமனம் பெற்றார். அது மகிழ்ச்சியும், அதிஸ்ரமுமான ஒரு நியமனம் என பின்நாட்களில் நான் உணர்ந்து கொண்டேன்.

யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியற் கல்லூரிக்கு வவுனியா தேசியகல்வியியற் கல்லூரி வழங்கிய மற்றுமொரு பீடாதிபதி கலாநிதி.சு.பரமானந்தம். யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் உள்ள நீண்ட கால உறவு இதுவாகும். யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி.T.கமலநாதன் இல் இருந்து திரு.S.K.யோகநாதன், கலாநிதி S. பரமானந்தன் மூன்றாவது பீடாதிபதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வந்தவர்களாகும். இவ்வுறவு இன்னும் தொடரும் என நம்புகின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கலாநிதி சு.பரமானந்தத்திற்கு நல்ல வாய்ப்பான களமாக அமைந்தமை மகிழ்ச்சிக்குரியதே. பலரும் கண்டு பூரிப்பும் மகிழ்ச்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையும் வகையிலும் கூடவே சிலர் பொறாமைப்படும் வகையிலும் பரத்தின் பீடாதிபதி தலைமைத்துவ செயற்பாடுகள் அமைந்துவந்தன. யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசார் கல்விசாரா ஆளணியினர் அவருக்கு சிறப்பான வளங்களாக அமைந்தமையால் சாதனைகள் பல சாதிக்க முடிந்திருக்கிறது. அவர்கள் அனைவருக்கும் எனது நல்ல வாழ்ததுக்களும், பாராடுக்களும். முதலில் பரம் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியானபோது திருப்தியடைந்தவனாக இருந்தனான்.

பின்னர் அவரது செயற்பாடுகள், சாதனைகள், பதிவுகள் குறித்து மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இவை அவர் யாழ் தேசிய கல்லூரிக்கு சென்றமையாலேயே முடிந்திருக்கிறது. பீடாதிபதி பரமானந்தத்தின் காலம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்றில் ஒரு பொற்கால பதிவாகும்.

**சவால்களும் முன்மாதிரியும்.**

பரத்திற்கு பல சவால்கள் குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்றுக் காலம் கல்வி நிறுவனங்கள் எதிர்நோக்கிய சவால்களைப் போல் யாழ் தேசிய கல்லூரியும் முகம் கொடுத்தது. அதிலும் அங்கு கோவிட் 19 வைத்தியநிலையமாக மாற்றப்பட்டமை அதனால் ஏற்பட்ட கல்வித்தடையை நவீன தொழில் நுட்பத்தின் மூலம் வெற்றிகரமாக மேற்கொண்டமையைக் குறிப்பிடலாம். இவரது செயற்பாடுகள் இலங்கையிலுள்ள எல்லா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் முன்மாதிரியாக கல்வி அமைச்சினால் காட்டப்பட்டமை குறிப்பிடக் கூடியதாகும். இவ்வாறு இன்னும் பல உள்ளன.

**ஆசிகளும் வாழ்த்துக்களும்**

அரசாங்க ஓய்வு வயதெல்லை மாற்றப்பட்டதனால் இலங்கை ஆசிரியர்கல்வி உலகம் ஒரு பெறுமதியான பீடாதிபதியை பயன்படுத்த முடியவில்லை. எவ்வாறாயினும் அவரது சேவைக்கும் வழிநடத்தல்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாக்கி அவருடைய எதிர்காலம் வளமுடையதாக அமைய இறையாசிகளையும் வேண்டி நிற்கின்றேன். கூடவே இவருக்கு வாழ்விலும் தொழிலும் உறுதுணையாக இருந்த அவரது மனைவி மாலதி பரமானந்தத்திற்கும் பிள்ளைகளுக்கும் எமது பாராட்டுக்களும் நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

**திரு.க.பேர்ணாட்**
**ஓய்வுநிலை பீடாதிபதி,**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஸ்ர ஆலோசனைச் சபை உறுப்பினர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் பணி நயப்பினை ஒட்டி மணிவிழா அமைப்பினரால் வெளியிடப்படும் "பரமானந்தம்" என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டுப் பெரு மகிழ்வடைகின்றேன்.

"தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (திருக்குறள் - 236)

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைய கலாநிதி.சுப்பிரமணியம் பரமானந்தம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரிக்குப் பீடாதிபதியாக இருந்து மகத்தான கல்விப்பணியை ஆற்றியவர். கல்வியும் ஒழுக்கமும் ஆசிரியர்களுக்கு இரண்டு கண்களாகும். அவற்றினை வளர்த்தெடுத்து உயரிய சமூக விழுமியங்களும், நற்பண்புகளுடைய ஆசிரியர்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உருவாக்கி வருகின்றது. இதற்கு உரமூட்டிய பீடாதிபதியாக இருபத்திநான்கு மணி நேரமும் கல்லூரியிலேயே இருந்து அதன் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவர்.

இவருடைய காலத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கீடுகள் பெரும் சவால்களால் இருந்தன. அவற்றைச் சமாளித்து கல்லூரி பல சாதனைகள் செல்வதற்குத் துணையாக வழிகாட்டினார். முகிழ்நிலை ஆசிரியர்களைப் பயன்படுத்தி கல்லூரிச் சுற்றாடலை மிக அழகாக வைத்திருப்பதுடன் விரிவுரையாளர்கள், கல்விசாராப் பணியாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்களுடன் அந்நியோன்னியமான தொடர்பை வைத்து தனது சேவையை இணைந்த பணியில் விளைந்த வெற்றியான முன்னுதாரணமாகச் செயலாற்றினார். எத்தகைய சவால்களையும் புன்னகையுடன் எதிர் கொள்வதில் வல்லவராக கலாநிதி.சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க ஒருவர் தாம் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையினை எய்த வழிகாட்டுவது கல்வியே என்ற வகையில் மணிவிழா நாயகன் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தன் அவர்கள் கற்ற கல்வியால் தானும் உயர்ந்து எமது சமூகத்தையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியையும் உயர்த்தியமைக்கு நன்றிகளையும் தெரிவித்து, மணிவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

**வைத்திய கலாநிதி (Dr.) லயன் வை. தியாகராஜா,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்**
**சிரேஸ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களின் மணிவிழா வாழ்த்து "மனமகிழ்வு..."

யாழ்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியும் எனது பாசமிகு நண்பருமான கலாநிதி. திரு. சு. பரமானந்தம் அவர்களின் மணிவிழா நிகழ்வு தொடர்பாக மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். இவர் கல்வி, கேள்விகளில் சிறந்த தேர்ச்சி பெற்றவராகக் காணப்படுவதுடன் கல்வியில் உயர் பட்டமான கலாநிதிப் பட்டம் வரை தானும் உயர்ந்து மற்றவரையும் உயர்த்திப் பார்க்கும் உன்னத உள்ளம் படைத்தவர்.

"வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வார்."

என்ற மகாகவி பாரதியின் பாடல் இவ்விடத்தில் இவருக்கும் பொருந்தி நிற்கிறது. அதாவது எவரிடத்திலும் பாகுபாடு காட்டாது தன்னடக்கத்துடன் வாழ்ந்து அறிவுப் பெருக்குடன் கலைப்பெருக்கும் பிரகாசிக்கும் இவரின் செயற்பாடுகள் கீழுள்ளவர்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் சிறந்து விளங்கி அவர்களின் பதவியை சிறப்பாக்க துணைபுரிகின்றது.

தன்மானம் கொண்ட தமிழராய் தமிழ் மீதும், தாய் நாட்டின் மீதும் அதீத பற்றுக் கொண்டிருப்பவர், வெளிநாடு சென்று உயர் கல்வியை தொடர்ந்தும் அங்கேயே வதிவிடமாக வாழ வழிகிடைத்த போதும் எம் நாட்டுக்கும் எம் மக்களுக்கும் சேவை செய்வதே என் பணி என இங்குவந்து சேவை செய்கின்றமை நண்பனின் உயர் மனப்பாங்கை வெளிப்படுத்துகின்றது.

"சாகினும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்
சாம்பல் தமிழினிலே வேக வேண்டும்."

என்ற தமிழரின் முதுமொழியும் இவருக்கு சாலவும் பொருந்தி நிற்கின்றது.

தேசிய கல்வியியற் கல்லூரியில் நல்லறுவடையாக தரமான ஆசிரியர்களை உருவாக்கியவர், சிறந்த பண்பாளர், ஆய்வாளர், சிந்தனையாளர், முற்போக்காளர், விமர்சகர் எனப் பல்வகை ஆளுமையாகக் காணப்படுவதுடன் இவரின் பணி எட்டுத்திக்கும் சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டும் என மனதார பாராட்டி வாழ்த்தி மகிழ்வடைகின்றேன்.

திரு T.கணேசரெத்தினம்.
பீடாதிபதி,
மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவும் ஆக்கமும் கலந்த பெருமகன் பரமானந்தம்.



கல்வி நிறுவனங்கள் பின்தங்கியுள்ளன, ஆசிரியர்களின் செயலாற்றல்கள் குறைவாக உள்ளன, ஆசிரியர் கல்வி முன்னைய காலங்கள் போல் தரமாக இல்லை என்ற விமர்சனங்களை ஏற்று அவற்றை முடிந்தவரை மாற்றுவேன். தற்போதைய நிலையை மாற்றி ஆசிரியர் கல்வியை ஒரு முன்னேற்றகரமான ஒரு நிலைக்கு இட்டுச்செல்வதாக என் பணிகள் தொடரும்.

தேங்கியிருக்காமல் ஓடிக்கொண்டிருப்பேன். மாற்றம் என்னிலிருந்து ஆரம்பமாகும் என்பது தான் பரமானந்தம் அவர்களின் தலைமைத்துவத்தின் சாரம் என யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் தலைமைத்துவத்தை ஏற்று மாற்றங்களாலும் ஆக்கங்களாலும், கடின உழைப்பினாலும் முன் மாதிரியாதொரு தலைமைத்துவத்தினை வழங்கி யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதியதொரு பரிமாணத்தை வழங்கி இன்று பணியிலிருந்து ஓய்வு பெறும் பெருமகன் பரமானந்தம் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்பிக்கை, மகிழ்ச்சி, நேர்மை, பொறுப்புணர்ச்சி, நெகிழ்வுத்தன்மை தீர்மானித்தல், நம்பகத்தன்மை, சகிப்புத்தன்மை, பணிகளை முன்வந்து ஏற்றலில் விருப்பம், பணிவு, விடாமுயற்சி என்பனவற்றின் நேர்நிலை வடிவமாக நான் இவரை நோக்குகின்றேன்.

பரமானந்தம் அவர்கள் ஆசிரிய கல்வி விருத்தியில் தனது பங்களிப்பினைச் செலுத்தும் போது நான் அவரிடம் அவதானித்த குணப்பண்புகள் ஏராளமாக உள்ளது. அவற்றில் என்னை கவர்ந்த குணப்பண்புகள் பின்வருமாறு அமைகின்றன.

மாணவ ஆசிரியர்களினதும், ஆசிரிய கல்வியியலாளர்களினதும் வளர்ச்சியில் பெரும் அக்கறையை எப்போதும் வெளிப்படுத்துவார். இயல்பிலேயே மனிதர்கள் நல்லவர்கள் என்ற வலுவான நம்பிக்கையின் அடிப்படையில் மற்றவர்களை ஊக்குவிப்பதில், எப்போதும் சலிப்படையாத குணம் பரமானந்தம் அவர்களின் சிறப்பு குணமாகும்.

மாணவ ஆசிரியர்களினதும், ஆசிரிய கல்வியியலாளர்களினதும் புதிய யோசனைகளை திறந்த மனதுடன் வரவேற்று, அவ்யோசனைகளை சாத்தியப் படுத்துவதற்காக, எப்போதும் அவர்களுடன் இணைந்து பணியாற்றும் இவரது செயற்பாடுகள், இவரது மனிதர்களின் மீதான நம்பிக்கை குணத்திற்கு சான்று பகிர்வதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றது. இதனால் தான் யாழ்ப்பாண கல்வியியற்கல்லூரி சமூகம் இவரின் தலைமைத்துவத்தினை மனமாற ஏற்றுக்கொண்டமைக்கு காரணமாக அமைந்தது எனலாம்.

கட்டுருவாக்க தலைமைத்துவ பாணி கல்வியில் மிகவும் பயனுள்ள தலைமைத்துவ பாணிகளில் ஒன்றாகும். பரமானந்தம் அவர்கள் எப்போதும் கட்டுருவாக்க கொள்கையை தனது செயற்பாடுகளில் முன்வைப்பதை நான் பல முறை அறிந்திருக்கின்றேன். கட்டுருவாக்கம் பற்றி நன்கு கற்றாய்ந்து கட்டுருவாக்கம் என்ற தலைப்பில் ஒரு நூலை கல்வி உலகிற்கு சமர்ப்பித்தவர். இவர் ஆசிரிய மாணவர்கள் ஆக்கப்பூர்வமாக இயங்க வேண்டும் என்பதில் தனது வழிகாட்டலை தொடர்ச்சியாக வழங்கிவருபவர்.

ஆசிரியர் மாணவர்கள் முன் சிக்கல்களை, சாவல்களை முன்வைத்து பெருந்தொற்று போன்ற கடினமான காலங்களில் கூட அவர்கள் யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளவும், பிரச்சினையை ஒன்றாக இணைந்து தீர்க்கவும் கற்கைநெறியொடு ஒத்துழைக்கவும், தனது ஊக்குவிப்பினை தொடர்ச்சியாக வழங்கியவர். இந்த வகையான கற்றல் ஆக்கபூர்வமானது என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது ஆசிரிய மாணவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதன் மூலமும் ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது பிரச்சினையில் அவர்களின் முன்னோக்குகளை ஆராய்வதன் மூலமும் தாங்கள் கற்றுக்கொள்வதைப் பற்றிய புரிதலை உருவாக்க அனுமதிக்கிறது எனலாம்.

ஒரு தலைப்பைப் பற்றி விமர்சன ரீதியாக சிந்திக்க மாணவர்களை ஊக்குவிக்கும் வினாக்களை தொடுப்பதன் மூலம் ஆசிரிய மாணவர்களின் விமர்சன சிந்தனைத் திறனை வளர்ப்பதற்கான ஆக்கபூர்வமான தலைவராக மட்டுமின்றி அவர்களின் சிறந்த ஆசிரியராகவும் பரமானந்தம் அவர்கள் தனது பீடாதிபதி பணியை நிறைவேற்றி இருக்கின்றார்.

அத்துடன் இது போன்ற தனது முன்மாதிரியான செயற்பாடுகளால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மட்டுமின்றி இலங்கையிலுள்ள ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளினது செயற்பாடுகள் மந்தமடையாமல் உழைத்த பெருமகன் பரமானந்தம் அவர்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

பரமானந்தம் அவர்கள் ஜனநாயக தலைமைத்துவத்தின் அதிக ஈர்ப்பு உடைய வர்.அத்துடன் ஜனநாயக தலைமைத்துவத்தின் ஊடாக பங்கேற்பு தலைமைத்துவத்தினை தனது செயற்பாடுகளின் ஊடாக தெளிவாக வெளிக்காட்டுபவர்.

கல்விசார் ஆளணியினர், கல்விசாரா ஆளணியினர் மற்றும் மாணவ ஆசிரியர்கள் ஆகியோரின் செயற்பாடுகளில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு, அனைத்து தரப்பினரிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்று அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பார். என்பது யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தின் ஏகோபித்த கருத்து என்பதை நான் அறிந்திருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு இடத்திலும் தனது கருத்தினை பணிவாக வெளிப்படுத்தும் இவர், தனது அனுபவ முதிர்ச்சியின் ஊடாக அறநெறி நின்று மற்றவர்களை வழிப்படுத்துவதிலும் வல்லவர். நான் பரமானந்தம் அவர்களை 1987 ஆம் ஆண்டு ஒரு கணித ஆசிரியராக குருணாகலை மல்லியதேவா கல்லூரியில் சந்தித்தேன். அன்று முதல் இன்று வரை தொடர்ந்துக் கற்பதில் ஆர்வமுடைய ஒரு நண்பனாகவே அவர் மனதில் வீற்றிருக்கின்றார் தொடர்ந்து கற்க கற்க அவரது ஆளுமை மட்டுமல்ல அவரின் பணிவுமிக்க ஆசிரியத்துவமும், தொலைநோக்குமிக்க ஆய்வுநோக்கும் படிப்படியாக வளர்ந்து, இன்று கல்வியியல் கலாநிதியாக தன்னை பண்படுத்திக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

பாடசாலைகள், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி என தொடர்ந்த எங்கள் உறவு கல்விசார் பணிகளின் ஊடாக மற்றவர் பொறாமைப்படும் அளவிற்கு, பரஸ்பர வளர்ச்சிக்கு வழிகோலியது எனலாம். ஆழமான நட்பு மிக்க உறவாகவும் விருத்தி அடைந்தது எனலாம்.

தனது அறுபதாவது வயதில் பணி ஓய்வு பெறும் பரமானந்தம் அவர்கள் சீரும் சிறப்புமாக தனது அழகிய மனைவியுடன், அன்பான பிள்ளைகளுடன், பல்லாண்டுகள் வாழ்ந்து. கல்வி பணிக்காக உழைக்க வேண்டும் அவரது ஆய்வுகளும் நூலாக்கமும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு.க.சுவர்ணராஜா,**
**ஓய்வு பெற்ற பீடாதிபதி,**
**வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம் எனும் வளம் செழிக்கும் மருத நிலத்தில், தமிழரின் பாரம்பரியத்துடன் கூடிய விவசாயக்கிராமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நானும், பரமானந்தம் அவர்களும் 1990ஆம் ஆண்டில் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியின் போது அறிமுகமாகி, இற்றைவரை நண்பர்களாக இருக்கும் காலத்தில் நல்லதொரு நண்பருக்கான உயரிய பண்புகளை அவரிடத்தில் கண்டேன். சரளமாகப் பழகுபவர், இனிமையாகப் பேசுவார், உதவி செய்வார், மதிப்பளிப்பார், மனதைப்புண்படுத்தமாட்டார், உயர்வுகள் அறிந்து உரிய நேரத்தில் வாழ்த்துவார், போன்ற இன்னோரன்ன மனிதநேயமிக்க மனிதனை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஆரம்பக் கல்வி முதல், சாதாரண தரம் வரை தனது கிராமத்தில் கற்று, உயர்தர கல்வியினை வவுனியா நகர பாடசாலை ஒன்றில் கற்று சித்தியடைந்து, 1987இல் ஆசிரியர் நியமனம் பெற்று கல்விப் பணியில் காலடி எடுத்து வைத்த சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற முதுமொழிக்கு அமைவாக ஆசிரியர் பணியுடன் தொடர்ந்து கற்க வேண்டும் என்ற விருப்பத்துடன் கற்றதன் பயனாக கலைப்பட்டதாரியாக, பட்டப்பின் கல்விடிப்ளோமாதாரியாக தன்னை கல்வியில் உயர்த்தி 2001 ஆம் ஆண்டில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் இணைந்து, ஆசிரிய மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சியினை வழங்கும் கல்வியியலாளனாக, விரிவுரை இணைப்பாளராக, உப பீடாதிபதியாக இருந்து ஆசிரியர்கல்விக்கு அயராதுஉழைத்த கல்வியியலாளனை உளம்மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் - (குறள் - 611)

நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாகவும் அமையும். என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு அமைவாக நம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் பணியாற்றி கல்விப் பணியில் பீடாதிபதியாக உயர் பதவி வகித்தும், கல்வியில் கலாநிதிப்பட்டம் வரை கற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வித் தகைமையினைத் தன் வசமாக்கிய அன்புக்குரிய நண்பரும், பீடாதிபதியுமாகிய சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களை மனமுவந்து வாழ்த்துகிறேன்.

கல்வித்துறைக்கு, கல்வித்தகைமைகளுடன் கூடிய பல்வேறு பதவிகளின் ஊடான வகிபாகங்களை ஏற்று, செயலூக்கத்துடனும், வினைத்திறனுடனும் பணியாற்றி, பணியில் மகிழ்வு கண்டு மணிவிழாக் காணும் சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் இந்நாளுக்குப் பின்னரான காலத்தில் மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர்கள், நண்பர்களின் இணைபிரியாத உறவுடன் இன்று போல் என்றும் வாழ, எல்லாம் வல்ல இறைவனின் அருளாசியினை வேண்டி வாழ்த்துகிறேன்.

**சதாசிவம் பவானந்தன்,**
**(பீடாதிபதி)**
**தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரமணி மகுடம் சூடும் பரமானந்தரே.....



மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்வித்துயையில் பல்வேறு வகிபாகங்களில் காத்திரமான பங்காற்றி வைரமணி மகுடம் சூடும் சு. பரமானந்தம் ஆகிய தங்களை மனதார பாராட்டி மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை எய்துகின்றேன்.

"உன்னையே நீ அறிவாய், நீ உன்னை அறிந்தால், உலலகத்தில் போராடலாம். வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம் என்ற உன்னை அறிதல் தத்தவத்தை புரிந்தொழுகி அதனூடாக ஆழ்தடம் பதித்தவர்கள் ஒரு சிலரே அந்த சிலரில் தங்களுக்கும் தனியிடமுண்டு. ஆசான், விரிவுரையாளன், பீடாதிபதி என்ற ஆளுகையின் முப்பரிமானத்தில் நீங்கள் பதித்த தடயங்கள் ஏராளம், ஏராளம் இதனை கல்வித்துறை சார்ந்தவர்களும் சமூக ஆர்வலர்களும் நன்கறிவர். சிகரத்தை தொட்ட 36 வருட கல்விச்சேவையின் முழுமையின் நிறைவுக்கு தாங்களே நிகராவர்.

1992ம் ஆண்டு டிசெம்பர் மாதம் செட்டிக்குளம் பரீட்சை இணைப்பு நிலையத்தில் முதன்முதலாக திருவாளர் எஸ். விஸ்வலிங்கத்தின் அறிமுகத்தில் தங்களை சந்தித்தேன். அன்று தொடங்கிய நட்பு இன்றுவரை ஆரோக்கியமாக வியாபிக்கின்றது. அத்தோடு 1994ம் ஆண்டு திருகோணமலை நிலாவெளி விடுதியில் நடைபெற்ற ஒருவார முகாமைத்துவ செயலமர்வில் நாம் செய்தவைகளும், பேசியவையும் மறக்கமுடியாதவை. மற்றவரை மதிக்கும பண்பும், உதவி செய்யும் மனப்பாங்கும் நேரான சிந்தனையும் கருத்தாடலும் என்னை வெகுவாக கவர்ந்தவை. படிப்படியாக மேம்பட்ட பேச்சுத்திறன் கண்டு இறும்பூதெய்துகின்றேன். மனிதர்களில் நண்பர்களை சந்தித்திருக்கின்றேன். நண்பர்களில் கண்ட முதல் மனிதர் தாங்களென்றே எண்ணுகின்றேன்.

கல்வித்துறையிலும் சரி, ஏனைய நிர்வாகத்துறைகளிலும் சரி யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்து முத்திரை பதித்தவர்களே அதிகம். ஆனால் வவுனியாவிலிருந்து யாழ் சென்று முகாமைத்துவத்தில் தனிமுத்திரை பதித்த மாண்புறு மனிதர் தாங்களே அத்தோடு கலாநிதி பட்டம் பெற்ற பாக்கியவானும் தாங்களே.

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

என்ற அருமைவுடையவர்களின் பெருமை கூறும் வள்ளுவனின் வளமான வரிகளுக்கேற்ப வாழ்ந்து வரும் தங்களை எனது சார்பாக 4ம் கல்விச்சமூகம் சார்பிலும் உளமார பாராட்டி வாழ்த்துகின்றேன். உற்றதுணை மற்றும் உறவுகளோடு வாழி! நலம், வளம் சூழ என்றே வாழ்த்துகின்றேன். வாழிய பல்லாண்டு.....

**கலாநிதி எம்.பி. நடராஜா**
**முன்னாள் வவுனியா கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவன முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழாக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரிய வண்மை விருத்தியில் கலாநிதி சு.பரமானந்தம் அவர்கள் எமக்கு பல வழிகாட்டல்களை மேற்கொண்டவர். அவருடன் பயணித்த காலம் முழுவதும் மனிததத்துவத்தையும் ஆசிரியத்துவத்தையும் முழுமையாகக் கற்றுணர்ந்தேன். மானிட நேயம் கொண்ட மிக உயர்ந்த மனிதாபிமான செயற்பாட்டாளராக எமக்கு மிகச்சிறந்த முன்மாதிரியாளராகச் செயலாற்றிய பெருமனிதர். அவருடன் கடமையாற்றிய காலங்கள் மிகவும் மகிழ்ச்சியானவை.

எமது வலிகாமம் ஆசிரிய வாண்மை விருத்தி நிலையத்தில் நடைபெறும் ஆசிரியர்களுக்கான வாண்மைவிருத்தி செயலமர்வுகளில் மிகச்சிறந்த வளவாளராகக் கவர்ந்து சிறப்பிப்பவர். அத்துடன் இந்த வருடம் செயல்நிலை ஆய்வு மாநாடு ஒன்றை நடாத்தினோம். அதற்கும் மதிப்பீட்டானராகவும் சிறப்பு விருந்தினராகவும் கவர்ந்து பெரும்பங்காற்றி இருந்தார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர்களையும் எமது நிலையத்திற்கு அனுப்பி பல செயலமர்வுகளை ஆசிரியர்களுக்கு மேற்கொள்ள பேருதவி புரிந்துள்ளார்.

மணிவிழா நாயகன் கலாநிதி சுப்பிமணியம் பரமானந்தம் அவர்தம் பாரியார், பிள்ளைகள் எல்லோருடனும் நாமும் ஒரு குடும்பத்தினராக மகிழ்ச்சியாக உறவாடி வந்துள்ளோம். மனிதத்துவ மான்புடைய பெருமனிதரான கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் ஓய்வு காலத்திலும் மிக மகிழ்ச்சியாக நல்வாழ்வு வாழ இதயபூர்வமான வாழத்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. வி.முருகேசபிள்ளை**

**வலிகாமம் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவன முகாமையாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமானந்தம்

## இயல் இரண்டு

## வரலாற்றியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் வாழ்க்கை வரலாறும் பணிகளும்



1. சுப்பிரமணியம், சரஸ்வதி தம்பதியினருக்கு ஏழாவது மகனாக செட்டிக்குளம் அரசினர் வைத்தியசாலையில் 1964ம் ஆண்டு ஜனவரிமாதம் 15ம் திகதி பிறந்தார்.
2. இவரது ஆரம்பக்கல்வி அவர் வாழ்ந்த கிராமமான முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையாகும். அங்கு தரம் 1 முதல் தரம் 5 வரை கல்வி கற்றார்.
3. 6 தொடக்கம் 11 வரை செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தில் கல்விபயின்று க.பொ.த.சாதாரண பரீட்சையில் சித்தியெய்திய பின் க.பொ.த.உயர்தரக் கல்வியை வவுனியா மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானத்துறையில் கற்றார்.
4. தொடர்ந்து யாழ்ப்பாணம் கொக்குவில் Technical colleg இல் குடிசார் எந்திரவியல் (National certificatein Engineering (civil) துறையில் 2ம் வருடம் சித்தியெய்தினார். படவரைஞர் சான்றிதழை மானிப்பாய் இந்துக்கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவில் பெற்றுக் கொண்டார்.
5. அதன்பின் கணித விஞ்ஞான ஆசிரியராக வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு வ/அல்காமியா முஸ்லீம் வித்தியாலயத்தில் கற்பித்தலை மேற்கொண்டார்.
6. 1990 - 1991 ம் ஆண்டு கணிதத்துறையில் ஆசிரிய பயிற்சியினை பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசலையில் முடித்த பின் சில காலம் ஆசிரியராக வ/இலங்கைத்திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கலவன் பாடசாலையிலும், (v/e.c.t.m.s) செட்டிக்குளம் மகா வித்தியாலயத்திலும் சேவையை மேற்கொண்டார்.

7. 1994ம் ஆண்டு பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கலைமானிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

8. பதவி உயர்வுகளை அடுத்து திட்டமிடல் உதவியாளராக வவுனியா தெற்கு கல்வி அலுவலகம், வவுனியா-செட்டிக்குளம் கோட்டக்கல்வி அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றிவந்தார்.

9. 1998இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றார்.

10. 1998ஆம் ஆண்டு பெற்றோரின் விருப்பப்படி இல் வாழ்வில் இணைந்து கொண்டார்.

11. 2001ம் ஆண்டு மாசிமாதம் 9ந்திகதி வ/கல்வியியற் கல்லரியில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

12. 2002இல் புலமைபரிசில் பெற்று விஞ்ஞான முதுகல்விமாணி பட்டப்படிப்பிற்காக ஐக்கிய இராச்சியம் சென்று வட அயர்லாந்திலள்ள University of Ulstar பல்கலைக்கழகத்தில் 2 வருடப்பயிற்சியில் MSc in Edu பட்டத்தில் சிறப்புச் சித்தி பெற்று திரும்பவும் அதே கல்லூரியில் கடமையாற்றினார்.

13. 2016 PGDEM பட்டத்தைப் பெற்றார் தேசிய கல்வி நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா திறந்த பல்கலைக்கழகத்தில் தொழில்சார் ஆங்கிலப் பாடநெறியையும் கற்றார்.

14. வவுனியா கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளர் இணைப்பாளர் உபபீடாதிபதி பதவிகளை 2019ம் ஆண்டு மார்ச் 28ம் திகதி வரை வகித்தார்.

15. 2019ம் ஆண்டு மார்ச் 30ந் திகதி பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதியாக நியமனம் பெற்று (இன்று) மணிவிழா காணும் வரை சேவை ஆற்றிவருகின்றார். அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் Integration of Technology Instrumental Resources (TIRS) in teaching learning Process என்ற தலைப்பில் கலாநிதிப்பட்டமும் பெற்றார்.

இவரது சாதனைகளுக்கு அவரது குடும்பத்தவர்கள் குறிப்பாக மனைவி திருமதி மாலதி பரமானந்தம் அவர்கள் பின்னனியாக நின்று செயலாற்றியுள்ளார். இருவரும் மூன்று முத்தான ஆண்பிள்ளைகளைப் பெற்று அவர்களை இளவயதிலேயே கல்வியில் சாதிக்க வைத்துள்ளனர்.

**மூத்தவர் – பரமானந்தம் நிந்துகேசன்**

கொழும்பு பல்கலை கழக - மென்பொருள் பொறியியலாளர் (Hologo Compaw)

**இரண்டாமவர் – ப.சாருகேசன்**

NIBM - தகவல் முறைமையியல் பட்டப்படிப்பை
மேற்கொள்கிறார்.

**மூன்றாமவர் – ப.நிகேசன்**

யாழ்.இந்துக்கல்லூரி (விஞ்ஞானப்பிரிவு)

நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்பதற்கு ஏற்ப சிறந்த தலைவராக இருந்து கலாநிதி சு.பரமானந்தம் அவர்கள் நல்வழிகாட்டி சாதித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம், சமூகம் சார்பான தலைமைத்துவம் ஆன்மீக அடிப்படையில் கட்டி எழுப்பப்படவேண்டும். என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் கலாநிதி சு.பரமானந்தம் அவர்கள். மிகுந்த இறைபக்தி கொண்டவர். கல்லூரி வித்தகவிநாயகரிலும், முடிமன்னர் வைரவரிலும் ஆழமான பக்தி கொண்டவர் அனைத்து மத வழிபாடுகளிலும் பங்கு கொள்வார்.

மனிதத்தன்மைகளோடு நல்ல மனிதராக வாழும் வாழ்வுதான் ஆன்மீக வாழ்வு.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு

உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று மனித விழுமியங்கள் பேணி வாழும் வாழ்வே தெய்வீகமானது. அதற்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டிய மணிவிழா நாயகன் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் ஓய்வு காலத்திலும் மகிழ்ச்சிகரமான ஆன்மீக வாழ்வு வாழ இதயபூர்வமாக வாழ்த்தகின்றோம். இவ் வேளை அவர்களைப் பெற்ற தந்தை அமரர் கன்னுப்பிள்ளை சுப்பிரமணியம் தாய் அமரர் திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் அவர்களையும் நினைவுகூர்ந்து வணங்குகின்றோம்.

**திருமதி ஞா.கணேசநாதன்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நான்காவது
பீடாதிபதி கலாநிதி சுப்ரமணியம் பரமானந்தம் அவர்களின்
செம்மைச் சேவையைப் பாராட்டி உளநிறைவுடன் வழங்கப்பட்ட

# மணிவிழா வாழ்த்துப் பாமாலை

கவியன்பன்
மானியூர் ரட்ணேஸ்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



பரமா னந்தம் பணியெழில் பீடத்தில்
மாண்பாய் மலர்ந்தது!
தரமிளிர் கலாநிதி தன்னிகர் முனைப்புடன்
திடமாய் புலர்ந்தது!
புலருமெம் கல்வியலின் பலம் காத்த ஆளுமையே!
திலகமே யாழ் மண்ணின் தீந்தமிழர் தோழமையே!
மிளிருமும் வினைத்திறனால் ஒளிசேர்த்த வித்தகனே!
உளமகிழ் புதுமைகாண் உண்மைநெறி அர்த்தகனே!
அழகியல், புத்தாக்கம் ஆக்க பூர்வ சிந்தனைகள்
மலர்ந்த நல் நெறியாள்கை மாற்ற வித்திட்டதிங்கே..
இளமெழில் உள்ளழகே இறைபக்தி நிறையுணர்வே
துலங்கினீர் தூரநோக்கில் தூயவரே வாழிய நீர்!
கொடிய நோய் கொரோனாவாய் கோரம் கொண்ட வேளையிலும்
முடியுமென்று தொழினுட்ப முன்நிலையில் முகவரியாய்
தடம் பதித்து நிகழ்நிலையில் தடைகள் தாண்டி வித்திட்டு
இடம் கண்டீர் கல்வியலின் முதற்தர வல்லவராய்
இடருற்றோர் நலமுறவே விடுதிகளை இங்கமைத்து
திடமாக மருத்துவரோ டிணைந்திங்கு பணிசெய்தீர்!
கடமையில் மனிதத்தின் மாண்புகள் காத்துயர்ந்து
வடம் பிடித்த வல்லோனே வாழிய நீர் பல்லாண்டு!
வண்ணமுறு வாழ்வியலில் வலுவாய் நல் வளம் கண்டீர்
உன்னதத்துணை மாலதியும் உயர் மகப்பேறு மூன்றும்
எண்ணிய முத்துக்களாய் ஏற்றங்கள் பல கொண்டீர்
திண்ணமுறு எதிர்காலம் தீரமுடன் வளமோங்க
இன்பம் தரு மிறையாசி இன்றுமென்றும் நிறைந்திருக்க
தன்னிகராய் தளைத்தோங்கி தளிர் புலமே வாழிய நீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா நாயகன்கலாநிதி சு.பரமானந்தம் எம் கல்லூரியின் கதாநாயகன்

க. தாட்ஷாயினி
ஆங்கிலத்துறை 2ம் வருடம்.



அன்று கல்லூரியின் முதல் நாள் நுழைவின் போது நீலநிற முகக்கவசம் அணிந்தபடி கம்பீரமான ஒரு உருவம் மேடையில் அமர்ந்திருந்தது. இவர்தான் எம் பீடாதிபதியா என்று அப்போது நினைத்த போது மிகவும் பயமுற்றேன். என் பயம் வீணானது என்று அன்று ஏனோ எனக்கும் புரியவில்லை. கல்லூரியின் விதிப்படி எம் பீடாதிபதி ஐயா, மதிப்புக்குரிய சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களை கண்டவுடன் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினோம். முதல்நாள் உரையின் போது "உங்களின் பிரச்சினைகளை என்னுடன் பகிர்ந்து கொள்ளலாம்" என்றார். அன்று என்மனம் உயர் அதிகாரியிடம் எவ்வாறு பகிர்வது என சலனமிட்டாலும் இன்று அவரின் வழிகாட்டலின் விளைவாக நானும் மிளிர்கின்றேன்.

இந்து மன்றத்தின் பத்திரா அதிபராக நான் இருக்கின்றமையால் எனக்கும் வித்தகரை தினமும் அதிகாலையில் சென்று தொண்டு செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. எம் பரமானந்தம் சேர் அதிகாலை 6.00மணிக்கு எம்மைப் போலவே காலணி அணிந்து அதிகாலை பயிற்சிக்கு உரிய உடையடன் வருவார். கல்லூரியை ஒரு சுற்று சுற்றும் அவரின் கண்ணில் காகிதம் தென்பட்டால் அதை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு நகருவார். அவரின் செயல் எமக்கு முன்மாதிரியாகவே இருந்தது. சொல்வதை விட செயலில் எமக்கு பலவற்றையும் புகட்டியவர் இவர்.

பீடாதிபதி என்ற உயர்பதவியையும் தாண்டி பெற்றோரைப் போல எம்மை மிகவும் அக்கறையுடன் வழிநடத்துபவர் அவர். அவரிடம் நான் வாங்காத பேச்சுக்களே கிடையாது. "பூங்கன்றுதண்ணீர் ஊற்று, புற்களை பிடுங்கிப்போடு, பொலித்தீன் இருப்பது கண்ணிற்கு தெரியவில்லையா?" என பலவாறும் ஏசுவார். அவர் அன்று அவ்வாறு இல்லாவிட்டால் இன்று தலைமைத்துவத்தை பெற்றவளாக மாறிய நான் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் முயற்சிகளுக்கு முதுகெலும்பாக இருந்து எம் திறமையை வெளிக்கொண்டு வந்த வித்தகரின் வித்தகன் இவர். ஒருமுறை என்மனதில் "பரம்பொருள் பெரும்புகழைப் பாடிப்பணிதலின்றி பிறர்வார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்தில்" என்ற வாசகத்தை எம் ஆலயத்திலும் காட்சிப்படுத்த அவா ஏற்பட்டது. பீடாதிபதி ஐயாவிடம் சென்று கேட்டபோது எவ்வித மறப்பும் இன்றி "ஆம்" என்றார். அவரின் சம்மதமே என்னை ஊக்குவித்து என் ஆசையை வெற்றிகரமாக நிறைவேறச் செய்ய வழிவகுத்தது.

"கல்லூரியின் விரிவுரையாளர்களிற்கு மட்டுமன்றி ஏனைய உத்தியோகத்தருக்கும், ஊழியர்களிற்கும் மரியாதை செலுத்த வேண்டும். அப்போது தான் அவர்களும் விருப்புடன் எமக்காக சேவை செய்வார்கள்" என்பது இவரின் இன்னுமொரு கூற்று. ஆம்! இது சத்தியமே. பீடாதிபதி கூறியது போல நான் விரிவுரையாளர்களிற்குமட்டுமன்றி அனைத்து ஊழியர்க ளிற்குமே காணும் இடங்களில் "Good Morning" சொல்லுவேன். ஒருநாள் எமது துப்பரவுப் பணியாளி மூர்த்தி அண்ணாவிடம் கோயில் குப்பையை அள்ள வண்டி வேண்டும் என்றேன். நானும் கூறிவிட்டு விடுதிக்கு வந்து விரிவுரைகளிற்கு தயாராகி சென்றபோது ஆலயத்தில் குவிக்கப்பட்டிருந்த குப்பைகள் அள்ளப்பட்டு இருந்தன. அப்போது அங்கே வந்த மூர்த்தி அண்ணா "குப்பையெல்லாம் அள்ளியாச்சு தங்கச்சி" என்றார். கேட்டதை முகம் சுளிக்காமல் அவர் செய்யக்காரணம் பீடாதிபதி சொன்ன அந்த மரியாதை அளிக்கும் பண்பே.

எம் பரமானந்தம் ஐயா, இடங்களிற்கு ஏற்ப தன்னை மாற்றிகொண்டு நீதியின் வழியில் மாணவ ஆசிரியர்களை வழிப்படுத்த அயராது உழைத்த ஒரு நங்கூரம் என்றுதான் கூறவேண்டும் சிரமதானமாக இருந்தாலும் சரி, போட்டி நிகழ்வுகளாக இருந்தாலும் சரி, அனைத்திலும் எம்மில் ஒருவராக களத்தில் இறங்கி செயற்படும் பண்பாளன் இவர். குருதீபம், குசேத்திரம் ஆகிய இரண்டும் இவரின் சிந்தனைகளே!. மாணவர்கள் சார்பாக நின்று அவர்களை உற்ற நண்பர்போல அணுகி அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பலவற்றிக்கும் மாற்றுவழி அமைத்துத்தந்தவர் இவர்.

வெள்ளிக்கிழமையில் ஆலயத்திற்கு வருகைதரும் பரமானந்தம் சேர், எம்முடன் இணைந்து காலைப் பிரார்த்தனையில் பங்கேற்று எம்மில் ஒருவராகவே மாறி திருவாசகம் பாடுவார். ஆசிரியன் எப்போதுமே முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே எம் ஐயாவே சிறப்பான ஒரு உதாரணம். இன்றும் என் கண்ணில் உள்ளது"ஆலயத்தில் பூஜை இடம்பெற்ற வேளையில் எவ்வித பராபட்சமும் இன்றி ஆலயமணிகளை அடித்து அவர் தொண்டு செய்தது". அதிகமாக பிரசாதம் கொடுத்தாலோ அல்லது ஏதேனும் உணவுப் பொருட்கள் அவரின் வீட்டில் இருந்தாலோ எம்மையும் தன் பிள்ளைகளாக எண்ணி எமக்கும் தந்து உண்ணுவார். யாருக்குதான் வரும் இந்த மனப்பாங்கு? யாம் அறிவோம் பராபரமே.


பரமானந்தம் ஐயாவின் சிந்தனையில் உதித்ததுதான் "Me too learn" என்ற ஆங்கிலப்பட்டறை. இலவசமாக ஆங்கிலக்கல்வியை அயற் சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்ற அவரின் எண்ணம் உயரியதே. அது மட்டுமன்றி பல்வேறு நிகழ்வுகளையும் நடத்தி அனைவரது திறமையையும் வெளிக்கொண்டு வந்த உயரிய பண்பாளன் இவர். எவ்வாறு கண்ணாடியானது விம்பத்தைக் காட்டுமோ அதைப் போலவே இவரும் எமக்குள்ளே உள்ள திறன்களை அறிந்து அதை சமூகம் அறியச் செய்கின்ற ஒரு மாசற்றவர் பரமானந்தம் சேர் என்றால் நீதிதான் என்று என்றமே நீதிவழி நகராமல் நியாயமாக இட்டபணியையும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மேல் தொட்ட பணிகளையும் தொன்மையுற நிறைவேற்றுகின்ற வீரனுக்கு அகவை அறுபது ஆயினும் சேவை இனியும் எம் கல்லூரி அன்னையின் எதிர்கால முத்துக்களுக்கு கிடைக்க நீண்ட ஆயுளும், சுகதேக ஆரோக்கியமும், சகல புகழையும் எம் வித்தகவிநாயகர் அருள வேண்டும் என வணங்குகின்றேன்.

*பரமானந்தம் என்பவர் இங்கு இவரேல்*
*மாணவ ஆசிரியர் எம் திறமை எங்கே*
*எம் ஆற்றல்களின் வெளிப்பாடுகள் எங்கே*
*ஊரவரும் புகழும் எதிர்கால ஆசிரிய பரம்பரைதானெங்கே!.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Param Means Power

21வது அணியினர்

சவால்களை சந்தர்ப்பங்களாக்கி
ஆற்றல்களால் உமை வெளிப்படுத்தி
சமூகத்தின் மாற்றமதை உம்மிலிருந்தே ஆரம்பித்த ஆளுமையே
தலைக்கனமில்லா தலைமகன் தாராளனாய் தலையெடுக்க
நல் மாதிரியாய் கல் சேவை புரிபவரே

ஏற்றத்தாழ்வு ஏதுமின்றி இயலுமை மிக்க
எம்மவர்க்கு ஏணியாய் நிற்கும் அற்புதமே
சமத்துவம் சமத்துவம் என வாய்ப்பேச்சில் மட்டுமல்ல
உம் உயிர் முச்சும் அதுவாச்சே



வளமான வாழ்வு வன்முறையால் கிட்டாதென்று
அஹிம்சை வழி நிர்வாகம் புரிபவரே
கடமையிலே கலங்கம் ஏதும் கண்டிடாமல்
கண்ணியமாய் செயற்படுவீர்

பீடத்தின் அதிபதி என்பதற்கப்பால்
பிள்ளைகளாய் எமை நடத்தி
பாரபட்சம் பார்த்திடா பரமானந்தம் உங்களிடம்
பேசுகையில் பெரானந்தமே எமக்கு

கல்விப்பணி கழுத்துவரை தொடர்ந்தாலும்
கணவனாய்க் காதலனாய் கனிவான தந்தையாய்
உம் உறவுகளை உயிராய் மதிப்பவரே
உருண்டோடும் உலகில் உமைப் போல வாழ்வதே
எம் இலக்கு ஆகையால் உயிர் உள்ளவரை
மறக்காது உம் பிறப்பு.

*Wishing you a fabulous birthday dr*
*President Sir!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் தலைமைத்துவத்திற்கான புதியதொரு மாதிரி "பரமானந்தரிஸம்"

# A New Model for Educational Leadership "Paramanantharism"

மகாலிங்கம் நிரேஸ்குமார்
கல்வியளாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

ஒரு நிறுவனத்தின் வெற்றியில், அந்நிறுவனத்தின் தலைவரின் வகிபங்கு அளப்பரியதாகும். நிறுவனத்தின் தலைவர் எந்தளவு தூரம் ஆற்றல் மிக்கவராக மிளிர்கின்றாரோ அந்தளவு தூரம் அந்நிறுவனத்தின் செயற்பாடுகள் சிறந்ததாக இருக்கும். நிறுவனமொன்றின் தலைவரின் செயற்பாடுகள் நிறுவனத்தின் பணியாளர்கள் தமது நிறுவனத்தில் தாம் பணியாற்றுவதை மறந்து, தமது பதவி நிலைகளை மறந்து, நிறுவனத்திற்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்கு தூண்டுவதாக இருக்க வேண்டும். பணியாளர்கள் நிறுவனத்தைக் 'காதலிப்பதற்கு' வழி காட்டுவதாக இருக்க வேண்டும். நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் தமது இயலளவையும் தாண்டியதான பங்களிப்புக்களை வழங்குவதற்கு ஒவ்வொருவரையும் முன் வரச் செய்வதாக இருக்க வேண்டும். நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் அல்லது பயன் பெறுனர்கள் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து அதியுச்ச திருப்தியடைபவர்களாவும், உயரிய மதிப்பளிப்பவர்களாகவும் மாற வேண்டும்.

அந்த வகையில் கடந்த 31.03.2019 அன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நான்காவது பீடாதிபதியாகப் பொறுப்பேற்று, பல உன்னதமான செயற்பாடுகள் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கீர்த்தியையும் புகழையும் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் உயர்த்தி, 12.01.2023 அன்று தனது உத்தியோக பூர்வமான கடமைகளிலிருந்து ஓய்வு பெறுகின்ற கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களால் பின்பற்றப்பட்ட தலைமைத்துவ அணுகுமுறைகள் அல்லது பாங்குகள் தொடர்பாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் கல்லூரியின் பீடாதிபதியாக பொறுப்பேற்ற நாளிலிருந்தான அவரது செயற்பாடுகள் - அதுவரை காலமும் நான் பின்பற்றி வந்த கொள்கைகள், கோட்பாடுகளை மாற்றி அல்லது மறந்து - எமது கல்லூரியை நேசிக்கவும்இ காதலிக்கவும் தூண்டின. எமது கல்லூரியின் நேரடிப் பயனாளர்களான மாணவ ஆசிரியர்களின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் பல்வேறு தளங்களில், பல்வேறு களங்களில் செயற்படத் தூண்டிய கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களால் பின்பற்றப்பட்ட தலைமைத்துவ அணுகுமறைகள் அல்லது பாங்குகளுக்கு "பரமானந்தரிஸம்' எனப் பெயரிட்டு, அவரால் பின்பற்றப்பட்ட கல்வித் தலைமைத்துவ நடவடிக்கைகள் சிலவற்றை விளக்க முற்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசீகர முகாமைத்துவத்திற்கான மாதிரி**



மலர்ந்த முகத்துடனும், புன்சிரிப்புடனும் பணியாற்ற வேண்டும். தனிப்பட்ட கோப தாபங்கள், விருப்பு வெறுப்புக்களை பணியாளர்கள் மீது காட்டக் கூடாது. சிரித்த முகத்துடன் பணியாளர்களை வரவேற்று, அவர்களது எதிர் பார்ப்புக்கள் மற்றும் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். நிறுவனத் தலைவரின் முகத்தில் இருக்கும் சிரிப்பானது பணியாளர்களின் அகத்திற்கும் பரிமாற்றம் செய்யப்படும். பணியாளர்கள் அனைவரும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் பணியாற்றத் தொடங்குவர்.

**மென்திறன் தலைமைத்துவம்**

மென்போக்கான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தல், மகிச்சியுடன் பணியாற்றுதல், மற்றவர்களை மகிழ்ச்சியுடன் வைத்திருத்தல், பணியாளர்களைப் புன்னகையுடன் எதிர் கொள்ளுதல், வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதல், பதட்டப்படாமல் விடயங்களைக் கையாளுதல், எப்போதும் உதவி செய்வதற்குத் தயாராக இருத்தல், பணியாளர்களது மனம் நோகாமல் நடத்தல் போன்ற மென்திறன் வெளிப்பாடுகள் அவசியமானவை.

**இலக்கு நோக்கிய தலைமைத்துவம்**

நிறுவனத்தின் பணிக் கூற்று, நோக்கக் கூற்று என்பவற்றைத் தாண்டி பல்வேறு புதிய இலக்குகளை வகுத்துச் செயற்பட வேண்டும். எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியானது 2019 தொடக்கம் ஒவ்வொரு வருடமும் 'மகுட வாக்கியம்' ஒன்றை பிரகடனம் செய்து, அதனடிப்படையில் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் எமது கல்லூரியானது 2019 - 2023 வரையான காலப்ப பகுதியில் பின் வரும் மகுட வாக்கியங்களைப் பிரகடனம் செய்து அதனடிப்படையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது.

'எனது சூழல் நானே பொறுப்பு' - 2019

'ஒரே இலக்கு ஒரே அணி' - 2020

'நல்லதே நடக்கும்' - 2021

'சவால்களைச் சந்தர்ப்பங்களாக்குவோம்' - 2022

'எனது ஆற்றல்களே என்னை வெளிப்படுத்தும்' - 2023

குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திலும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியானது மகுட வாக்கியத்திற்கு ஏற்ப சிறப்பான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பணியாளர்கள் அனைவருக்கும் மதிப்பளிக்கும் தலைவர்**

நிறுவனத்தில் பணியாற்றுகின்ற அனைத்துப் பணியாளர்களையும் மதித்து நடத்த வேண்டும். கௌரவிக்க வேண்டும். பதவி நிலை ரீதியிலோ, கல்வித் தகைமை ரீதியிலோ, தனிப்பட்ட ரீதியிலோ வேறுபாட்டைக் காட்டக் கூடாது. சுகாதாரத் தொழிலாளி தொடக்கம் உப பீடாதிபதி வரை அனைவரும் கல்லூரியின் இயக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் அவசியமானவர்கள் என்பதை உணர்ந்து நடப்பதுடன் அவர்களையும் உணரச் செய்ய வேண்டும். பணிநிலை அடுக்கில் கீழ் நிலைப் பணியாளர்கள் - அதாவது தொழிலாளர்கள் - மீது அதிக அக்கறையும் கரிசனையும் காட்ட வேண்டும். கல்லூரியின் அனைத்துப் பிரிவுகளினதும் செயற்பாடுகளுக்கு இவர்களின் ஒத்துழைப்பு முக்கியமானது என்பதை அனைவரையும் உணரச் செய்ய வேண்டும்.





**பணியாளர்களின் மனங்களில் இடம் பிடிக்கும் தலைவர்**

தனது மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்ற ஒவ்வொரு பணியாளர்களது மனங்களிலும் தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் தலைவராக செயற்பட வேண்டும். பணியாளர்களது தனிப்பட்ட நலன்களில் அக்கறை செலுத்துதல், பணியாளர்களின் இல்லங்களில் நடைபெறும் நல்லது - கெட்டதுகளில் பங்கு பற்றல் அவர்களவு தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அக்கறையுடன் செவிமடுத்தல் போன்ற செயற்பாடுகள் அவர்களது மனங்களில் தமது தலைவருக்கென ஓர் இடத்தைப் பெற்றுத் தரும். அத்துடன் அவர்களின் நம்பிக்கைக்குரிய தலைவராகவும் மாற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர்களை 'அவர்களாகவே' ஏற்றுக்கொள்ளல்**

குறைகள் அற்ற மனிதர்கள் என யாரும் இவ்வுலகில் இல்லை. ஒரு வேளை ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்ற குறைகளின் அளவுகள் மாறுபடலாமே தவிர, குறைகள் இல்லாத மனிதர்களைக் காண்பது கடினமானது. அந்த வகையில் ஒவ்வொரு பணியாளர்களையும் அவர்களது குறை நிறைகளுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களை அவர்களாகவே இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

மற்றவர்களைக் குறை சொல்வதையும், விமர்சிப்பதையும் தமது பிரதான பணியாகக் கொண்டவர்களின் சந்தர்ப்பங்களையும் மறுக்கக் கூடாது. ஆனால் அவர்களது கருத்து வெளிப்பாடுகளின் செல்வாக்கு, நிறுவனத் தலைவரின் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இருக்கக் கூடாது.

**நிறுவனத் தலைவர் – பணியாளர்கள் இடையேயான 'இடைவெளியை' குறைத்தல்**

நிறுவனத் தலைவர் என்பது ஓர் உயர்ந்த பதவி. பணியாளர்கள் அவரது கட்டளைகளை நிறைவேற்றுபவர்கள் அல்லது பின்பற்றுபவர்கள் என்ற சித்தாந்தத்தை உடைத்து, நிறுவனத் தலைவருக்கும் பணியாளர்களுக்குமிடையிலான இடைவெளியைக் குறைக்க வேண்டும். அந்த இடைவெளி குறையும்போது பணியாளர்களின் நிறுவனத் தலைவர் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். பணியாளர்கள் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்துச் செயற்படுவதுடன், தமது நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் உழைக்கத் தொடங்குவர்.

**புதிய சிந்தனைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அங்கீகரித்தல்**

நிறுவனத்தில் பணியாற்றும் ஒவ்வொருவரினது சிந்தனைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். 'நிறுவனத் தலைவர் மாத்திரமே அனைத்தும் அறிந்தவர்' என்ற சிந்தனையைப் புறந்தள்ளி, பணியாளர்களது சிந்தனைகளுக்கும் மதிப்பளித்து அங்கீகரிக்க வேண்டும். பணியாளர்கள் அப்புதிய சிந்தனைகளை அமுல்படுத்தவும் செயற்படுத்தவும் அனுமதியளிக்க வேண்டும்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பல புதிய விடயங்கள் இவரது காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. சர்வதேச சிறுவர் - முதியோர் தினமானது கல்லூரியின் அயற் சூழலில் வாழ்கின்ற சிறுவர்கள் மற்றும் முதியவர்களை இணைத்து மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. அயற் சூழலில் வசிக்கின்ற சிறுவர்களுக்கான ஆங்கிலக் கல்விப் போதனை மற்றும் பயிற்சிகள் சனி மற்றும் ஞாயிறு தினங்களிலும், விடுமுறை தினங்களிலும் மாணவ ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்லூரியின் வரலாற்றில் முதற் தடவையாக வர்ண இரவுகள், மகிழ்வரங்கம், இசைச் சங்கமம், யார் அடுத்த பேச்சாளர்? போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அது மாத்திரம் இல்லாமல் அனைத்துக் கல்லூரி மாணவ ஆசிரியர்களிடையேயான கட்டுரைப் போட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துச் சித்திரப் போட்டி, தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முன்வைப்புப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. நடத்தப்பட்டும் வருகின்றன.

**சுதந்திரமாக செயற்பட அனுமதித்தலும் தலையீடற்ற மேற்பார்வையும்**














பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்த பின்னர் பணியாளர்களைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும். 'அவர்களுக்கு எதுவுமே தெரியாது' என்ற எண்ணத்துடன் எல்லாச் செயற்பாடுகளிலும் தலையீடு செய்யவோ அல்லது அவர்களை வழிப்படுத்தவோ முயற்சி செய்யக் கூடாது. மாறாக தலையீடற்ற விதத்தில் மேற்பார்வை செய்வதுடன், தேவையான நேரத்தில் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

**வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் வாய்ப்பளித்தல்**

நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும், நிறுவனத்தின் நேரடிப் பயன்பெறுனர்களின் விருத்திக்காகவும் பல்வேறு புதிய வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்துபவர்களும்இ வாய்ப்புக்களைப் பயன்படுத்தத் தெரியாதவர்களும் நிறுவனத்தில் பணியாற்றக் கூடும். செயற்பாட்டாளர்களைத் தட்டிக் கொடுத்துச் செயற்படச் செய்வதுடன், ஏனையவர்களையும் செயற்பாட்டாளர்களாக மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அந்த வகையில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச அளவிலான பேச்சுப் போட்டியில் எமது மாணவ ஆசிரியர்கள் பங்கு பற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த மாணவ ஆசிரியர் செல்வன் அ.ர.ஜெயதீபன் இப்போட்டியில் ஒரு தடவை முதலாம் இடமும் இன்னுமொரு தடவை இரண்டாம் இடமும் பெற்றிருந்தார்.

சர்வதேச அளவில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் எமது மாணவ ஆசிரியர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. அது மாத்திரம் இல்லாமல் சர்வதேச அளவில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளிலும் எமது மாணவ ஆசிரியர்கள் பங்கு பற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

மேலும் 'டான்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வருகின்ற 'கவியின் குரல்' நிகழ்ச்சியில் எமது மாணவ ஆசிரியர்கள் பங்கு பற்றுபற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் அந்நிகழ்ச்சியானது தொடர்ந்தும் ஒளிபரப்பாகி வருகின்றது.

**தொழிநுட்ப தலைமைத்துவம்**

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் கல்லூரியின் ஏனைய செயற்பாடுகளில் புதிய தொழிநுட்பங்களை அறிமுகப் படுத்தல் அவசியமானது. தேவையான தொழிநுட்ப வளங்களைப் பெற்றுக் கொள்ளல், இருக்கின்ற வளங்களை அதியுச்ச அளவில் பயன்படுத்தல், தொழிநுட்ப ஆற்றல் மிக்கவர்களை இனங்கண்டு பொறுப்புக்களை வழங்குதல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

**இணைப்பாட விதான செயற்பாடுகள் மூலம் மாணவ ஆசிரியர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரித்தல்**

பல்வேறு விதமான இணைப்பாட விதான செயற்பாடுகள் மூலம் மாணவ ஆசிரியர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரிக்க முடியும். கல்லூரியின் பணியாளர்களையும் நேரடிப் பயன் பெறுனர்களான மாணவ ஆசிரியர்களையும் கல்லூரியை நேசிக்கச் செய்வதற்கான ஓர் உத்தியாக இணைப்பாட விதான செயற்பாடுகளை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியது.


நிகழ் நிலையிலும், நேரடியாகவும் பல்வேறு விதமான இணைப்பாட விதான செயற்பாடுகள் மாணவ ஆசிரியர்களால் ஒழுங்கமைத்து நடத்தப்பட்டன. அது மாத்திரம் இல்லாமல் ஆசிரிய கல்வியியலாளர்களின் வழிகாட்டல்களிலும் பல்வேறு இணைப்பாட விதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்றிட்டங்கள் மூலம் கல்லூரியை செழுமைப்படுத்தல்**

பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தியதன் மூலம் கல்லூரிச் சூழல் அழகும் செழுமையும் பெற்றது. அத்துடன் மாணவ ஆசிரியர்களின் ஆளுமை விருத்திக்கான செயற்றிட்டங்கள் பலவும் ஆசிரிய கல்வியியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்றிட்டங்கள் மூலம் பணியாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்கள் கல்லூரியை நேசிக்கவும் தொடங்கினர்.






**சவால்களைச் சந்தர்ப்பங்களாக மாற்றுதல்**

ஒரு நிறுவனத்தை வெற்றிகரமான நடத்திச் செல்லும் போது பல்வேறு சவால்களை எதிர் நோக்க வேண்டியேற்படும். அவ்வாறான சவால்களை எதிர்கொள்ளும் போது, அச்சவால்களைச் சந்தர்ப்பங்களாக மாற்ற வேண்டும். உலகப் பெருந்தொற்று நோய்க் காலத்தில் நாடு முடக்கப்பட்ட வேளையில், நிகழ்நிலை ரீதியிலான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. கல்வியமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள , - தக்ஷிலாவ கற்றல் முகாமைத்துவ முறைமையை மிக உச்ச அளவில் பயன்படுத்திய கல்லூரியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியமைச்சினால் இனங் காணப்பட்டது. நாட்டில் அமைந்துள்ள அனைத்து தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் எமது கல்லூரி ஒரு முன்னோடிக் கல்லூரியாக விளங்கியது. கல்வியமைச்சின் உயரதிகாரிகள் மற்றும் இலங்கையின் 19 தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகள் அடங்கிய குழாம் எமது கல்வியியற் கல்லூரிக்கு இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு எமது கல்லூரியின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொரோனா காலத்தில் பீடாதிபதியின் சிந்தனையில் உருவாகிய குருசேத்திரம் குழுமம் பல்வேறு செயற்பாடுகளை நிகழ்நிலையிலும் நேரடியாகவும் மேற்கொண்டது. குருசேத்திரம் குழுமத்தினால் நடத்தப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட அறிவுப் பகிர்வுத் தொடர் நிகழ்ச்சிகள் கல்லூரிக்கு சர்வதேச ரீதியில் பல அறிமுகங்களைப் பெற்றுத் தந்தது. சர்வதேச ரீதியில் அறியப்பட்ட பாரதி பாஸ்கர்இ பட்டிமன்றம் ராஜா, கவிதா ஜவஹர் போன்ற பிரபல்யமான பேச்சாளர்களையும்இ இந்தியா - இலங்கையைச் சேர்ந்த புகழ் பூத்த பல பேராசிரியர்களையும் நிகழ் நிலையில் இணைத்து பல்வேறு அறிவுப் பகிர்வு நிகழ்ச்சிகளை குருசேத்திரம் நடத்தியது. மாணவ ஆசிரியர்களும்இ உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களும் இதனூடாகப் பயன் பெற்றனர். இதன் விளைவாக ஏற்பட்ட அறிமுகங்களினால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும்இ கல்லூரியின் மாணவ ஆசிரியர்களுக்கும் மிகப் பெறுமதியான பல வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் தேடி வந்துள்ளன. அதன் பலா பலன்களை இன்றும் கூட மாணவ ஆசிரியர்கள் அனுபவித்து வருகின்றனர்.






**சூழல் நேயத் தலைவர்**


நிறுவனத்தின் சூழலை வளப்படுத்துவதில் அதீத அக்கறை காட்ட வேண்டும். நிறுவனத்தின் பணியாளர்களையும்இ அதன் வாடிக்கையாளர்களையும் சூழல் நேயச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் பல்வேறு சூழல் நேயச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.


கல்லூரியானது பிளாஸ்டிக் பாவனையற்ற பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. கல்லூரியின் சூழலை தூய்மையாகப் பேணுவதில் கல்லூரியின் பணியாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டனர். கல்லூரியிலும் அதன் அயற் சூழலிலும் ஏராளமான மரங்களை நாட்டியமைஇ மாணவ ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் உள்ளகப் பயிற்சிகளுக்காக விஜயம் செய்த பாடசாலைகளில் மரங்களை நாட்டியமை, இதன் உச்சக் கட்டமாக 20வது கல்லூரி தினத்தில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் எமது மாணவ ஆசிரியர்களால் மரங்கள் நாட்டப்பட்டமை போன்ற செயற்பாடுகள் எமது கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்டன.







**நிறுவனத்தின் செயற்பாடுகளை வெளிப்படுத்தல்**

நிறுவனத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் அறிக்கைப் படுத்த வேண்டும். நிறுவனத்தின் செயற்பாடுகளை பொதுமக்கள்இ வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் தெரியப்படுத்துவதுடன், நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பிரபல்யப் படுத்தவும் வேண்டும்.

2019 மே 02 கல்லூரி தினத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 'குருதீபம்' செய்திப் பத்திரிகையின் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது. தொடர்ச்சியாக 50 இற்கும் மேற்பட்ட செய்திப் பத்திரிகைகள் வெளி வந்துள்ளதுடன்இ 10 இற்கும் மேற்பட்ட மணிவிழா - கல்லூரியின் கல்விசார் பணியாளர்களின் - சிறப்புச் செய்திப் பத்திரிகைகளும் வெளி வந்துள்ளன. குருதீபம் செய்திப் பத்திரிகையானது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கீர்த்திஇ புகழ் மற்றும் செயற்பாடுகளை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்துவதற்கு மிகப்பெரும் பங்காற்றியுள்ளது. பங்காற்றி வருகின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

அந்த வகையில் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் காலப்பகுதி (31.03.2009 - 12.01.2023) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்றில் இன்னுமொரு பொற்காலமாக அமைந்தது. கல்வித் தலைமைத்துவத்திற்கான புதியதொரு மாதிரியாக அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன. அவருடன் இணைந்து பணியாற்றிய ஆசிரிய கல்வியியலாளர்கள் மற்றும் எதிர் காலத் தலைவர்களான மாணவ ஆசிரியர்களின் செயற்பாடுகளில் அவரால் உருவாக்கப்பட்ட - பின்பற்றப்பட்ட கல்வித் தலைமைத்துவ மாதிரியின் செல்வாக்கு நிச்சமாக இருக்கும்.

அவரை அல்லது அவரது கல்வித் தலைமைத்துவ மாதிரியைப் பின்பற்றுபவன் என்ற வகையில் அவரது கொள்கைகளையும்இ செயற்பாட்டு உத்திகளையும் ஒரு ஆவணமாக மாற்றும் முயற்சியாகவே இக்கட்டுரையை சமர்ப்பித்திருக்கின்றேன்.

**உசாத்துணைகள்**

கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்கள் மற்றும் அவதானங்கள் இக்கட்டுரைக்கான உசாத்துணைகளாக அமைந்திருந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடுடை வாழி

அ.ர.ஜெயதீபன் (மடுவன்)
2 ம் வருட மாணவ ஆசிரியர்



கல்விக் கோயிலாம் கல்லூரி கலையகத்தில்
கரையாக் கல்வியதை கரையிலாத் தந்து
இறையின் அடையாளம் ஏற்ற எம் தலைவா..

மாணவர் திறமையை மாண்புடன் அறிந்து
மாறாத அன்புடன் மேம்பட உயர்த்தி
மாறா மகிழ்ச்சியும் வெற்றியின் களிப்பும்
சிறந்த கோட்பாடும் மேன்மை கொள் நெறியும்
பல்கலை அறிவும் பன்நூற் புலமையும்
கைவர பெற்றவர் எம் பீடாதிபதியே

பருவம் சார் பலன்கள் நல்கிடு நிலமாய்
நடுநிலை தவறா நவின்றிடும் தராசாசை
பொய்யாமழையாய் நன்பெயல் அதுவாய்
பீடும் பெருக்கும் எதும் நோக்கார் கைமாறு கருதா
மழையாய் பொழிந்து மாணவர் வளர உரமாய் ஆவார்

வாழ்வியல் தன்னை வகுத்து அறிந்து நூலறிவதனால்
நுணுகிப்பருகி வலிமை பெருமை பொறுமை ஓங்க
நானிலம் தன்னில் நடந்து காட்டும்
நமக்கோர் தலைவன் இவரே என்போம்

ஏணியாய் ஏற்றி ஏற்றம் பெற்றிட பேணியே
ஊக்கம் பெருமை ஓங்க காரணமாகி அரணாக
எமக்கு அமைந்தவர் எங்கள் பீடாதிபதியே

சவால்கள் வரினும் சளையாது மண்ணில்
சான்றாண்மை மேவி சாலவும் உய்ய
பொன்றா புகழாம் ஆசிரியம் தன்னில்
குன்றா நின்றீர் குவலயம் போற்ற

நன்றிகள் தன்னை நவின்றிங்கு
நாமும் வாழியே என்று வளமுடன் வாழ்த்தி
வானதில் மீது மின்னிடும் மீனாய்
உம் பணி சிறக்க வாழ்துதும் மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்புலத்தின் ஆளுமை
# கலாநிதி சு.பரமானந்தம்

ச.துஸ்யந்தன்
நூலக உதவியாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

வன்னிப் பெரும்பரப்பில் வளமார்ந்த வவுனியாவில்
சுப்பிரமணியம் சரஸ்வதி தம்பதியினரின் மகனாய் அவதரித்த
பரமெனும் பரமானந்தப் பெருந்தகையெ நீவீர்.
தமிழுலகு வாழுங்காலம்வரை புகழுடனே வாழி!

வீழாத வளமாக ஆறாய்ப் பெருக்கெடுத்தே
மாளாத கல்வியினை மாண்புடன் வளர்த்தெடுத்தே
முற்றிய நெற்கதிர்களென முழுநிறை அறிவோடு
ஆளுமை மிகக்கொண்ட ஆசானாய் ஒளிர்ந்தீரே
வவுனியா கல்வியியற் கல்லூரியின் கல்வியாலராய்
கல்விப் புலதினுள் கருவியாய்ப் புகுந்தே

கல்வியின் பெருமையினைக் கருத்தோடு உணர்த்தியே
பதவியுயர்வு பெற்றீர் பீடாதிபதியாய் இங்கமர்ந்தீர்
புதுமைக்கும் பழமைக்கும் புத்துயிர் ஊட்டியே
ஆண்டவன் அடியினில் ஆன்மீகம் பெருக்கெடுக்க
ஆற்றல்மிகு ஆளுமையை நேர்த்தியாய் வளர்த்தெடுத்து
ஏற்றமிகு மாணவரை காத்திரமாய்க் கடைந்தெடுத்து
அகிலத்திலே நட்சத்திரங்களாய் மிளிர வைத்தீரே.

கோபங் கொள்ளாது பாசங் காட்டியே
பரிவோடு எம் கடமையினைப் பகிர்ந்தளித்து
கல்விசாரார் மனங்களிலே ஏற்றமாய் நின்றீரே
கல்விச் சமூகத்தின் காவிய நாயகரே
மணிவழாக் காணும் பரம ஆனந்தரே
நாட்டுக்கும் மக்களிற்கும் நற்சேவை புரிந்தே
பல்லாண்டு காலம் நிறைவோடு வாழிவாழி!

-சுபம்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனித நேயருக்கு மணிவிழா வாழ்த்து"

திரு. அம்பலவாணர் லோகநாதன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

சுப்பிரமணியம் + சரஸ்வதி தம்பதியினரின்
சுந்தரப் புதல்வன், கல்வித்தாயிற்கோர் "கலாநிதி"
எக்கணமும் எல்லாம் வல்ல இறைவனை மனதில்
நிறுத்தும் ஆத்மீக வாதி
பம்பரம்போல இயங்கும் பரமானந்தம். இவர்
நித்திரையிலும் கல்லூரியின் சிந்தனைதான்
எம் கல்லூரி பீடத்தின் அதிபதியாக கிடைத்தது
கல்லூரித்தாயின் மாதவமன்றோ
எல்லோரையும் அன்பினால் அரவணைத்து
சீறிச் சினக்காது நிர்வாகத் தேரை செவ்வனே
நகர்த்தும் பார்த்தசாரதி
யார் மனதையும் புண்படுத்தாது மென்திறனினால்
சேவையாற்றும் மேதாவி
பட்டங்கள், பதவிகளுக்கு அப்பால் மனிதனை
மனிதனாக நேசிக்கும் மானிட நேயன்
இவரைக்கண்டால் ஆனந்தம், கதைத்தால்
பரம ஆனந்தம்
வருடமொன்றிற்கு கருத்து நிறைந்த மகுடவாசகங்கள்
2019 ல் எனது சூழல் நானே பொறுப்பு
2020 ல் ஒரே இலக்கு ஒரே அணி
2021 ல் நல்லதே நடக்கும்
2022 ல் சவால்களை சந்தர்ப்பங்களாக்குவோம்
2023 ல் எனது ஆற்றல்களே என்னை வெளிப்படுத்தும்
2024 ல் நேர்மைத்திறனே எனது அடையாளமாக
ஏனைய கல்லூரிகளுக்கு முன்மாதிரியாக
பெயர் விளங்கி ஒளிர வைத்தவர்
கல்லூரி வரலாற்றில் பதிவு செய்த தடங்கள் பற்பல
இவை ஒவ்வொன்றும் சாதனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குருசேத்திரம்", "குருதீபம்" இவை உலகறிய வைத்தவை
முகப்பில் "இலட்சினை", "ஆய்வு மாநாடு" இன்னும் பல....
சூரிய சந்திரர் உள்ளவரை நின் நாமம் நிலைத்திருக்கும்
கல்வியின் அதிபதி சரஸ்வதி வீற்றிருக்கும் இவரின் உள்ளமும்
வெள்ளை, கையும் வெள்ளை.
அகவை அறுபதில் இளமை குன்றாத ஆணழகன்
அன்பின் குடும்பத்தீபம் மாலதியுடனும்
முத்தான மூன்று சிங்கங்களுடனும் இனிதே உடல், உள
நலமுடன், வளமுடன் என்றுமே நிறைவாக
வாழ்க, வாழ்கவென இறைவன் துணையுடன்
வாழ்த்தி வணங்குகின்றேன்.
வாழிய, வாழிய, வாழியவே !!!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் 1ம் அணி மாணவ ஆசிரியர்களின் இதயத்திலிருந்து

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி இருப்பத்தைந்தாவது ஆண்டை நோக்கி வீறுநடை போடும் இக்காலத்தில் எமது கல்லூரியை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திய பெருமை எமது பீடாதிபதி கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களையே சாரும். எமது கல்லூரியில் தகவல் தொழில் நுட்பத்துறையை முதன் முதலாக உருவாக்கிய சிற்பி அவர்தான். அவரது சிந்தனையின், செயற்பாட்டின் வெளிப்பாடாக நாம் இரண்டு வருடங்கள் கற்று தற்போது உள்ளகப்பயிற்சிக்காகப் பாடசாலைகளுக்கு செல்கின்றோம். எமக்கு ஆசிரிய தொழில் சார் வாய்ப்பளித்த பெருமகனார். யாழப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுக்கு எமது இதயபூர்டவமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பிரதேச பாடசாலைகளுக்கு மிக அவசியமான எதிர்கால தொழில் வாழ்க்கைக்குத் தேவையான இத்துறை துரிதமாக வளர்க்கப்பட வேண்டும் என்ற எதிர்காலவியல் சிந்தனையுடன் எமது யாழப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருக்கும் கல்வியியளாளர்கள் இவ்வாறான எமது சமுதாயத்திற்குத் தேவையான கொள்கையாக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த வகையில் என்றும் எமது நன்றிகளை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அவருடைய மணிவழா மிகச்சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம். ஓய்வு காலத்தில் தொடர்ந்து கல்விப்பணியாற்றுவதுடன் மனைவி, பிள்ளைகளுடன் மகிழ்வான வாழ்வு வாழ எமது வாழ்த்துக்ளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமானந்தம்

## இயல் மூன்று

## கட்டுரையியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் தோற்றம் பின்னணி

முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்,
ஸ்தாபக பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

சைவசமயத்தின் மேன்மையினை உலகறியச் செய்யவும், சைவ சமயத்தின் உயர்வான அனுட்டானங்களையும், நடைமுறைகளையும்,பழக்க வழக்கங்களையும் கடைப்பிடித்தலில் மக்களிடையே அறிவுடைநிலையைத் தோற்றுவிக்கவும்,சைவ சித்தாந்த தத்துவங்களை வளர்க்கவும் ஆதீனங்களும் மடங்களும் சைவமக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் சைவ நாயன்மார்களின் சமூக அசைவியமும் சமூகத்தில் அவர்களின் வகிபாகமும் மக்கள் வாழ்வியலுடன் நெருக்கமாக இணைந்திருந்த காலமதில் சைவ ஆதீனங்களும், சைவமடங்களும் தோற்றம் பெற்றனவென அறிய முடிகின்றது.

**தெனிந்தியாவில் இன்று 18 ஆதீனங்கள் சைவசமய சேவையில் ஈடுபட்டுள்ளன. அவை,**

1. திருவாவடுதுறை ஆதீனம் திருஆவடுதுறை
2. நீலப்பாடி ஆதினம் தஞ்சாவூர்
3. காஞ்சிபுரம் ஆதீனம் காஞ்சிபுரம்
4. சாராமுனிஆதீனம் திருச்சிராப்பள்ளி
5. தருமபுரம் ஆதீனம் தருமபுரம்.
6. சொக்கபுற ஆதினம் திருமாக்காளம்
7. சூசியனார் கோவில் ஆதீனம் - ஆடுதுறை
8. வேளாங்குறிச்சியாதீனம் திருவாரூர்
9. ஆகம சிவபிரகாசர் ஆதீனம் சிதம்பரம்
10. வளனலார் ஆதீனம் சீர்காழி
11. செங்கோலா ஆதீனம் திருநெல்வேலி
12. வருணை ஆதீனம் வேதாரணையர்
13. திருஞானசம்பந்தர் ஆதினம் மதுரை
14. நாய்ச்சியார் கோவிலாதீனம் கும்பகோணம்
15. திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி
16. திரம்பஅழகிய தேசிகராதீனம் மதுரைதுலார்
17. இராமேசவராதீனம் இராமேஸ்வரம்
18. தாயுமானசுவாமிகள் ஆதீனம் அன்னப்பன்பேட்டை

இங்குள்ள பதினெண் ஆதினங்களும் சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பணி யாற்றுகின்றன. இவற்றுள் திருவாவடுதுறை ஆதினம், தருமபுரம் ஆதீனம், மதுரை ஆதினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன பிரபலயம் வாய்ந்தவையாக முக்கியம் பெறுகின்றன. மேலும் மதுரை ஆதீனம் யாழ்ப்பாணத்தில் அமையப்பெற்ற நல்லூர் ஆதீனத்துடன் தொடர்பு கொண்டிருந்த பாங்கு பின்னர் கூறப்படும்.

**யாழ்ப்பாணத்தில் தோன்றிய நல்லை ஆதீனம்.**

யாழ்ப்பாணம் நல்லூரில் இது அமைந்துள்ளது "நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் என்பது அதன் முழு பெயராகும் யாழ்ப்பாண இராச்சியத்தின் இராசதானி அமைத்திருந்த நல்லூரில் சைவ ஆதீனம் அமைந்தமை பெருமைக்குரியதே, அதே நேரம் சைவ சமய எழுச்சிக்காய் பெரும் புரட்சி செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த நல்லூர் புனித பூமியில் ஆதீனம் அமைவதும் பெரிதும் வரவேற்கப் படவேண்டியதே.

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் மணி ஐயர்.**

மேற்படி ஆதீனத்தை யாழ் மண்ணில் ஸ்தாபித்தவர் பெரு மதிப்புக்குரிய செ.சிவசுப்பிர மணிய ஐயர் ஆகிய மணிஐயர் ஆகும். இவர் மணி பாகதவர் என்றும் அழைக்கப் பட்டார். இவர் 08.02.1918 இல் வண்ணார்பண்ணையில் செல்லையா ஐயர், கனகாம்பாள் தம்பதியினருக்குப் புதல்வராகப் பிறந்தார்.

சிறு வயதில் அவருக்குக் கதைகள் சொல்வதிலும், வாசிப்பதிலும் ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம் பின்னர் பிரசங்கம் செய்வதில் ஏற்பட்டது.நன்றாகப் பாடுவதிலும் மிகுந்த ஆற்றல் அவரிடம் காணப்பட்டது. இவ் ஆற்றல்கள் அவரை பிரசங்கத் துறையில் ஈடுபாடு கொள்ள வைத்தது. அத்துறையில் அவருக்கிருந்த ஆர்வம் அவரை உயர்தர பிரசங்கியாராக வளர்த்து நின்றது. நல்லூர்க் கந்தசாமி கோயிலிலும் வேறு யாழ்ப்பாணத்துக் கோயில்களிலும் அவர் பிரசங்கங்கள் இடம் பெற்றன.

நல்லூர்த் திருவிழாக் காலங்களிலும் கந்தசஸ்டிக் காலங்களிலும் மாலை வேளைகளில் வசந்தமண்டப பூசை நடைபெறுவதற்கு முன்னர் வைரவர் கோவில் முன்றலில், வேப்ப மரத்தின் நிழலில் அவர் பிரசங்கங்கள் ஆரம்பத்தில் நடைபெற்றுள்ளன. அவரது குரல் வளமும் பாரத,இராமாயணக் கதைகளை சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் எளிமையாகச் சொன்ன பாங்கும் அவரை மக்கள் நாட்டமுள்ள பிரசங்கியாராக உயர்த்தி நின்றது.

இதனை அவதானித்த நல்லூர்க் கந்தசாமி கோவிலின் ஒன்பதாவது அறங்காவலர் மதிப்புக்குரிய குகஸ்ரீ ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் (1945-1964) மணி ஐயர் அவர்களுக்கு சிறப்பான கௌரவம் வழங்க முன்வந்தார். நல்லூர்க் கந்தசாமி கோவிலின் பிரசாரகர் என்ற உயர் கௌரவம் வழங்கி உயர்வித்தார்.தீர்த்த உற்சவத்தின் போது தீர்த்தக் கேணியில் அமைந்திருந்த திருப்புகழ் மண்டபத்தில் முருகநாம பஜனை பாடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தார். ஐயரும் தனது கணீர்க் குரலில் முருகன் பாடல்களைக் கல்லும் கரையும் வண்ணம் பக்திச்சுவை சொட்டப் பாடி மகிழ்வித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் திருவிழாக் காலங்களில் இன்றுபோல் அன்றும் பக்தர் கூட்டம் அலை மோதிக் கொண்டேயிருக்கும்.அதன் காரணமாக அங்கே ஒருவித சலசலப்புக் காணப்படும்.அப்போது ஒரு கம்பீரமான குரல் முருகன் அடியார்களே!! என்று விளித்துப் பின்வருமாறு ஒலிக்கும்,

"பரம் பொருளின் பெரும் புகழைப் பாடிப் பணிதலன்றிப்
பிறவார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்துள்"

அந்த மந்திரக் குரலுக்குக் கட்டுப்பட்டு கோவிலுள் அமைதி நிலவும் அந்தக் குரலின் சொந்தக் காரர் மணி ஐயர் அவர்களே.

இக் காலகட்டத்தில், நல்லூர் கந்தசாமி கோயிலின் முன்னாள் அமையப்பெறும் "நல்லூர் முருகன் தண்ணீர்ப் பந்தலில்" மணி ஐயர் அவர்களின் பிரசங்கம் நடைபெற ஆரம்பித்தது. நல்லூர் முருகனின் சிறப்புக்களில் ஒன்று நேர முகாமைத்துவம் என்பது யாவரும் அறிந்ததே.அக்காலத்தில் இரவு 8.00 மணிக்கு வள்ளி, தெய்வானை சமேதரராய் வெளி வீதி உலா வரும் முருகப் பெருமான் சரியாக இரவு 9.00 மணிக்கு கோயிலுள் சென்று விடுவது வழமை. தொடர்ந்து கோயில் பூசைகள் அனைத்தும் முடிவடைந்த பின்னர் மணி ஐயர் அவர்களின் சங்கீத கதா காலாட்சபம் மேற்படி பந்தல் நிறைந்த பக்தர் கூட்டத்தில் ஆரம்பமாகும். இரவு 10.30 மணிவரை நடைபெறும் அந் நிகழ்ச்சியில் பக்தர்கள் ஆர்வத்துடன் பங்கு கொள்வர்.

ஆறுமுகநாவலர் பெருமானுக்குப் பின்னர் பெரிதும் புகழ்பெற்ற பிரசங்க விற்பனராக ஸ்ரீலஸ்ரீ மணிஐயர் அவர்கள் யாழ்மண்ணை அலங்கரித்தார். அவர் கதா பிரசங்கம் ஆற்றாத கோயில்களே யாழ்ப்பாணத்தில் இல்லை என்று சொல்லுமளவுக்கு சகல கோயில்களிலும் அவர் உரை இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து அவர் புகழ் இந்தியா, மலேசியா, சிங்கபூர் என்று பல நாடுகளுக்கும் பரவி அங்கெல்லாம் அவரது சங்கீத கதா பிரசங்கம் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 1936 ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டிற்கிடைப்பட்ட காலப் பகுதியில் ஏறத்தாழ 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கதாப்பிரசங்கங்களை ஆற்றிச் சாதனை படைத்தார். இந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அவர் ஆற்றிய சங்கீதகதாப் பிரசங்கம் அவருக்குப் பெரும் புகழ் தந்து உயர்த்தி நின்றது. இந்தளவுக்குத் தான் உயர்வடைவதற்கு ஊக்கம் தந்து வழிகாட்டி தன் பணியில் திருப்பு முனையை தந்து உதவியவர் மதிப்புக்குரிய குகஸ்ரீ ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் என்பதை ஸ்ரீலஸ்ரீமணி ஐயர் அவர்கள் என்றும் மறந்தாரில்லை. அன்று நல்லூர் கந்தசாமி கோயிலில் தனக்கு அவரால் தரப்பட்ட கௌரவம்தான் தன்னை இந்தளவுக்கு உயர்த்திற்று என்பது அவரது நன்றியுடனான சிந்தனையாக இருந்தது. அந்தச் சிந்தனையின் வெளிப்பாடாக மேற்படி மாப்பாணர் மறைவின் பின்னர் அவரது முழு உருவ பிரதிமை ஓவியமொன்றை (PORTRAIT) ஆதீன மண்டபத்தில் நிறுவி தினசரி அதற்கு தீபாராதனை, பூசைகள் செய்து வழிபாடு நடத்த ஏற்பாடு செய்திருந்தார். அவரது அந்த நன்றியுணர்வு என்றும் போற்றப் படவேண்டியதும் பின்பற்றப் படவேண்டியதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணி ஐயர் துறவறம் பூண்டார்**

மணி ஐயர் அவர்கள் ஒரு தடவை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தனது கதாப் பிரசங்கத்தினை முடித்துக்கொண்டு மதுரைஆதீனம் சென்றிருந்தார். அங்கே அவர் தியானத்தில் ஈடுபட்டிருந்த வேளை அவர் மனதில் புனிதமான எண்ணம் ஒன்று மின்னலடிதாற்போன்று உதித்தது.

நல்லையம்பதியில் புனிதம் நிறைந்த சைவ ஆதீனம் ஒன்று நிறுவி சைவப் பணியாற்ற வேண்டும் என்கின்ற நல்லெண்ணம் அவருக்குத் தோன்றியது.அ வ் வெண்ணத்தில் அவர் மனம் உறுதியுடன் திடம் கொண்டது.சிந்தனை வேறெங்கும் செல்லவில்லை. நல்லையம்பதி யில் ஆதீனம் அமைப்பதிலேயே சுழன்று நின்றது.

ஆழ்ந்து சிந்தித்து எடுத்த திடசிந்தனை முடிவுடன், அப்போதைய மதுரை ஆதீனகர்த்தா குரு மஹா சந்நிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளிடம் சென்று வணங்கி தனது உளக்கிடக்கையை வெளியிட்டார். தன்னை இல்லற வாழ்வினின்றும் விடுவித்து துறவற வாழ்வினை மேற்கொண்டு சைவப்பணி ஆற்றிட சீடனாக ஏற்று ஆற்றுப்படுத்துமாறு பணிந்து நின்றார்.

இதனைச் செவிமடுத்த சுவாமிகள் அகமகிழ்ந்து, அவரது தூய்மையான சிந்தனையையும் அப்பழுக்கற்ற பக்குவநிலையையும் உணர்ந்து அவரது விண்ணப் பத்தினை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார். 1966 ஆம் ஆண்டு ஆடிக்கார்த்திகை நந்நாளில் அவர் துறவறம் மேற்கொள்ளும் பொருட்டு, புனித கஷாயம் அருந்தக் கொடுத்துச் சீடனாக ஏற்றுக்கொண்டார். மணி ஐயரும் இல்லறம் நீங்கி, காவி உடை தரித்து, உருத்திராட்சம் அணிந்து துறவறம் மேற்கொள்ளலாயினார்.அவரது நாமம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் என்று அன்றிலிருந்து அழைக்கப்படலாயிற்று.தனது குருவிடம் மந்திரோபதேசம் பெற்றுயர்ந்த சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஆதீன குருமகாசந்நிதானமாக காவியுடை தரித்து புதிய தோற்றத்துடன் இலங்கை வந்தடைந்தார்.இலங்கையில், சிவபூமியான யாழ்ப்பாணத்தில் நல்லூரின்கண் ஆதீனம் அமைத்துக்கொள்வதற்கான நல்ல வாய்ப்பினை எதிர்பார்த்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார்.

**நல்லூரில் ஆதீனம் மலர்ந்தது**

அவர் பிரார்த்தனையின் பயனாக திருமதி. பாக்கியம் எனும் நல்லாள் நல்லூர், கோவில் வீதியில் - தற்போது கந்தன் கருணை என்ற கட்டடம் அமைந்துள்ள இடத்துக்கு அருகாமையில் தனது காணியை மனமுவந்து, ஆதீனம் அமைப்பதற்கு அன்பளிப்புச் செய்தார்.

அக்காணியில் தம்பிரான் சுவாமிகள் 1966 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 6 ஆம் திகதி சைவ ஆதீனத்தை அமைத்துக் கொண்டார். யாழ்ப்பாணத்தில், நல்லூரில் ஆதீனம் அமைந்தமை சைவத் தமிழ் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நல்லூரில் அமைந்த அவ் ஆதீனதுக்குப் பெயர் தீர்மானிப்பதில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் நிதானமாகச் சிந்தித்துச் செயற்பட்டார். "நல்லூர் ஆதீனம்" என பெயர் சூட்டின் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியல் ரீதியான சில குழப்பங்களை ஏற்படுத்தலாம் என்பதை உணர்ந்து ஆதீனத்தின் பெயரை "நல்லூர் திருஞனசம்பந்தர் ஆதீனம்" என்று தீர்மானித்துக் கொண்டார். நல்லூர் ஆதீனம் எனின் அது நல்லூர் கந்தசுவாமி கோவிலுடன் தொடர்புடையதோ என்ற குழப்பத்தையும், மயக்கத்தையும் தரலாம் என்பதையும், நல்லூர் கோயில் நிர்வாகம் என்றும் முருகன் பணியன்றி வேறெங்கும் அகலக்கால் வைப்பதை விரும்புவதில்லை என்பதையும் சுவாமிகள் நன்குனர்ந்திருந்தார். ஆதலால் எத் தவறும் ஏற்படாதிருக்க "நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்" என்றார் போலும்.

மேற்படி ஆதீனம் பல்வேறு அறப்பணிகளை தம்பிரான் சுவாமிகளின் நெறிப்படுத்தலுடன் சிறப்பாக ஆற்றிக்கொள்ள ஆரம்பித்தது.சைவ அடியார்கள் ஆர்வத்துடன் அப் பணிகளில் கலந்து கொண்டனர்.

இவ்வாறிருக்கையில் கிட்டத்தட்ட ஆறு வருடங்களின் பின்னர், ஆதீனத்தின் அமைவிடம் தொடர்பாக ஒரு முக்கியமான மாற்றம் நிகழ்ந்து அது தற்போதைய இடத்துக்கு இடம் மாறக்கூடிய சூழல் தோன்றிற்று அது தொடர்பாக விபரமாக அறிதல் நன்று.

**ஆதீனத்தின் தற்போதைய நிலையமும் பின்னணியும்.**

தற்போது நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைந்திருக்கும் காணி நல்லூர் மாப்பாணர் பரம்பரையினருக்கே உரித்துரிமை உடையதாக இருந்தது. அக்காணி "மாப்பாணர் வளவு" என்று அழைக்கப்பட்டது.அக்காணியில் மாப்பாணர் பரம்பரையில் மூத்தவரான சிறாப்பர் தொன்யுவான் குகஸ்ரீ 1ஆம் இரகுநாத மாப்பான முதலியார் (1734- 1750) பல அறைகளைக் கொண்ட அழகிய பெரியதொரு எண்சார் வீடொன்றை நிர்மாணித்திருந்தார். அவ்வீட்டில் மாப்பாணர் குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக காலங்காலமாக வாழ்ந்து வந்தார்கள். அந்த வீட்டிலேதான் அறங்காவலர் மதிப்புக்குரிய குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரும் பிறந்ததாகச் அறிய முடிகின்றது. பெரிய வளவில் அமைந்த அந்த விசாலமான வீட்டிற்கு இரண்டு வாயில்கள் இருந்ததாகவும், அவற்றுள் ஒரு வாயில் உள்ளே செல்வதற்கு மட்டும் பயன் படுத்தப்படுமென்றும் மறு வாயில் வெளிச் செல்ல மட்டும் உபயோகப்பட்டதாகவும், உள்ளே அரைவட்ட வடிவில், அவ்விரண்டு வாயில்களையும் இணைத்து பாதை போடப்பட்டு இருந்ததாகவும், அப்பாதையால் அக்காலத்தில் குதிரை வண்டில்கள் சென்று வந்ததாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. வாயில்களை இரும்பினால் செய்யப்பட்ட மிக அழகான புகுமுக வாயில் கதவுகள் அழகு படுத்தின வீட்டின் கதவுகள், யன்னல்கள் யாவும் கனதியானவையாக அழகுற வடிவமைக்கப்பட்டிருந்தன.

இது இவ்வாறிருக்க் பின்னர் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் அறங்காவலராக இருந்த ஏழாவது மாப்பாணர் குகஸ்ரீ 2ஆம் ஆறுமுக மாப்பாண முதலியார் ( 1915-1921) கோயிலின் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருந்தார். கோயில் முழுமையாக பக்திமார்க்கம் நோக்கி அடையாளங்கண்டது."கப்பலோட்டிய தமிழர்" என அழைக்கப்பட்ட குகஸ்ரீ ஆறுமுக மாப்பாண முதலியார் பர்மா, ரன்கூனுடன் வணிகத்தில் ஈடுபட்டு பெரும் செல்வம் ஈட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் செல்வந்தராக இருந்த அவர் தான் ஈட்டிய செல்வம் அனைத்தையும் நல்லூர் கந்தசுவாமியாரின் திருப்பணியில் செலவிட்டார். ஆலயக் கட்டடத் திருப்பணிக்காக ரங்கூனில் இருந்து கட்டடப் பொருட்களைக் கொண்டுவந்தார். ஷண்முகருக்கு தங்க ஆபரணங்கள் செய்வித்து, அணிவித்து அதன் அழகு கண்டு மகிழ்ந்தார். மேலும் குகஸ்ரீ ஆறுமுக மாப்பாண முதலியார் அவர்களால் யாழ்ப்பாணத்து ஆச்சாரிமார்களால் உருவாக்கப்பெற்ற எம்பெருமான் ஆறுமுக சுவாமியாருக்கு (ஷண்முகர்) இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட ஆச்சாரிமார்களால் வெள்ளியினால் சிங்காசனம் செய்வித்து அதில் அவர் ஆடிவரும் அழகு கண்டு மகிழ்ந்து நின்றார்.நல்லூருக்கு முதன் முதலாக மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றையும் ஸ்தாபித்தார். கோயிலைச் சுற்றி மதில் அமைத்து உள்வீதியினை உருவாக்கினார். இவ்வாறு இவர் காலத்தில் நல்லூர் பல வழிகளிலும் சிறப்புற்று வளர்ந்து நின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக அவரது கப்பல் விபத்துக்குட்பட்டு பெரும் நஷ்டதுக் குள்ளாகி பெரும் துன்பத்துக்குள்ளாக வேண்டியேற்பட்டது. தெளிந்த நீரோடையாகச் சென்றுகொண்டு இருந்த மாப்பாணர்கள் குடும்பம் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிக்கொண்டது போன்று நிலைமை உருவாகிற்று.

இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் புத்தூரில் வாழ்ந்த கொடைவள்ளலும் அறப்பணிகள் செய்தவருமான புத்தூர் மழவராயர் பற்றிச் சிலவிடயங்கள் கூறவேண்டியுள்ளது.அவர் புத்தூரில் வாழ்ந்த பிரபுக்களில் ஒருவர். இவர் இந்தியாவில் மலையாளத்துடன் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டுச் சொத்துச் சேர்த்து செல்வந்தராகத் திகழ்ந்தவர் யாழ்ப்பாணம் மிக அண்மைக்காலம் வரை புகையிலைச் செய்கையில் முன்னணியில் இருந்தமை யாவரும் அறிந்ததே. புத்தூர் மழவராயர் ஆரம்பத்தில் புகையிலைச் செய்கையில்ஈடுபட்டிருந்ததுடன் பின்னர் புகையிலை வியாபாரத்திலும் ஈடுபடலாயினர் புகையிலையினை மொத்தமாகக் கொள்வனவு செய்து பாளங்களாக அடுக்கி வைத்துக் களஞ்சியப் படுத்துவதற்கு வசதியாகப் புத்தூர், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பகுதிகளில் பல வீடுகளும் அவருக்கிருந்தது.

வியாபாரத்தின் மூலம் நல்ல வருமானம் கிடைத்ததால் அதன்மூலம் பல நல்ல அறக் காரியங்கள் அவராலும் பின்னர் அவர் மகன் புத்தூர் கந்தையா மழவராயராலும்(1887-1936) தொடர்ந்து ஆற்றப்பட்டுள்ளன. புத்தூர் சோமாஸ்கந்தா தமிழ் ஆங்கில சைவப் பாடசாலைகள்,புத்தூர் சிவன் கோவில், புத்தூரில் அன்ன சத்திரம் போன்றனவும் இன்னும் பல அறக்காரியங்களும் இவர்களால் உருவாக்கம் பெற்றதுடன் பிள்ளைகளுக்கு இலவசக்கல்வி வழங்கவும் சிறப்பாக வித்திட்டனர் எனவும் அறிய முடிகின்றது. அதேநேரம் மழவராயர் மகன் கந்தையா அவர்களால்அவர்களது சொத்துக்களைப் பராமரிக்கவும் நெறிப்படுத்தும் நோக்குடனும் அவர்கள் பெயரில் “தர்மகர்த்தா சபை” ஒன்றும் நிறுவப்பட்டது.

புத்தூர் மழவராயர், நல்லூர், குகஸ்ரீ ஆறுமுக மாப்பாண முதலியாருக்கும் ஏற்பட்ட பெரு இழப்பினைக் கேள்வியுற்ற மழவராயர் நல்ல மனதுடன் அவருக்குதவ முன்வந்தார். மழவராயரின் நல்ல நோக்கத்தினை வரவேற்ற குகஸ்ரீ ஆறுமுக மாப்பான முதலியார் அவர் உதவியை ஏற்றுக் கொண்டதுடன் அவர் பெற்ற உதவிக்குப் பொறுப்பாக தமது பரம்பரைச் சொத்தான “மாப்பாணர் வளவையும், வீட்டையும்” மழவராயருக்குச் சாட்டுதல் பண்ணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்திருந்தார். எதிலும்,எச் செயலிலும் நேர்மையையும், உண்மையையும் உணர்வுடன் கடைப்பிடிக்கும் மாப்பாணர் வம்சம், இங்கும் மழவராயர் செய்த உதவியைக் "காலத்தால் செய்த உதவி, ஞாலத்தில் மாணப் பெரிது" எனக் கருதி இக்காரியத்தினை செய்து கொண்டனர் போலும்.

குகஸ்ரீ ஆறுமுக மாப்பாண முதலியாரைத் தொடர்ந்து குகஸ்ரீ நான்காம் இரகுநாத மாப்பாண முதலியார் (1921- 1945) அவர்கள் நல்லூர் கந்தசாமி கோயிலின் எட்டாவதுஅறங்காவலரானார். இவர் ஒன்பதாவது அறங்காவலர் குகஸ்ரீ ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் (1945-1964) அவர்களதும், தற்போதைய பத்தாவது அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் (1964-இன்றுவரை) அவர்களதும் தந்தையாராவர். ஆழ்ந்த நிதானமான ஆனால் கடும்போக்குக் கொண்ட நிர்வாகி என்று அவரைக் கூறுவார்.

குகஸ்ரீ இரகுநாத மாப்பாண முதலியார் நல்லூரில் அறங்காவலராகப் பணியேற்பதற்குச் சிலகாலம் முன்பதாக தேரடியில் தியானத்தில் இருந்த "செல்லப்பா சுவாமிகள்" சடுதியாகக் கண்விழித்து தன்பாட்டில் "நல்லூருக்கு ஒரு வெள்ளைக்காரன் வரப்போகின்றான், எல்லாம் நல்லபடியாக நடக்கப்போகின்றது" என்ற அருள் வாக்கை உரக்கக் கூறினாராம். அவர் கூறியதற்கிணங்க குகஸ்ரீ இரகுநாதமாப்பாண முதலியாரிடம் தோற்றத்திலும் செயலிலும் நிர்வாக முறைமையிலும் வெள்ளைகாரத்தனம் மிக்கிருந்ததாக நம்முன்னோர் கூறக்கேட்டுள்ளோம். இவர் காலத்தில் நல்லூரில் பல வியத்தகு புரட்சிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன.அவை யாவும் நல்லூரின் புகழை ஒளிர்வித்துள்ளன என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. இவர் காலத்திலே 1922 இல் பிராமணப் பெருமக்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து பூசை செய்ய வருவதைத் தவிர்த்திருந்தனர். இவர் அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கையாண்ட நுட்பமுறை கண்டு யாவரும் வியந்து நின்றனர்.அர்ச்சனைக்கு சீட்டுப் பெற்று அர்ச்சனை செய்யும் முறை இவர் காலத்திலேயே முதன் முதலில் ஆரம்பிக்கப் பட்டது. பூசைநேரங்கள் போன்ற எல்லாச் செயற்பாட்டிலும் நேரந்தவறாமைக்கு முன்னுதாரணமாகத் திகழ்வது நல்லூர் என்பது யாவரும் அறிந்ததொன்று, அதற்கு வித்திட்ட பெருமை குகஸ்ரீ இரகுநாத மாப்பாண முதலியாரையே சாரும்.இவர் காலத்தில் பல திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. மேலும் இவரது காலத்தை நல்லூரின் பொற்காலத்துக்கான நிலைமாறு காலம் என்று புகழ்வாருமுளர்.

இவ்வாறாக இருந்தவேளை ஒரு நாள் குகஸ்ரீ ஆறுமுக மாப்பாண முதலியார் அவர்களால் புத்தூர் மழவராயர் தர்மகர்த்தா சபையிடம் முன்னர் பெற்ற பணத்தையும், சாட்டுதல் பண்ணிக்கொடுத்த "மாப்பாணர் வளவையும் காணியையும் வீட்டையும்" அவர்களிடமே அறுதியாக் குகஸ்ரீ இரகுநாத மாப்பாண முதலியார் அவர்களால் ஒப்படைக்கப்பட்டு அவ்வீட்டிலிருந்து உடனே மாப்பாணர் குடும்பங்கள் வெளியேறி, நல்லூர் கோயிலுக்கு முன்னால் இருக்கும் அவர்களது பேத்தியாரின் வசதிகள் மிகக் குறைந்த வீட்டில் குடியேறிக் கொண்டனர். எண்சார் வீடொன்றில் மிகவசதியாக, பகட்டாக வாழ்ந்த மாப்பாணர் குடும்பம் சாதாரண வசதிகுறைந்த வீட்டிற்கு குடியேறி வாழத் தொடங்கியமை பல அன்பர்கள் மனதில் பெரும்கவலையினை ஏற்படுத்தியது. ஆனால் மாப்பாண முதலியார் குடும்பத்தினர்," எங்கள் வாழ்வில் இந்த மாற்றத்தைக் கந்தசுவாமியார் ஏற்படுத்தியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைத் தன் முன்னால் தனது அருட் பார்வையில் வைத்திருக்கவும், மிக எளிமையாக வாழ்க்கை நெறியினை பின்பற்றப் பழகிக் கொள்ளவுமே" என்று கூறி அமைதியாவர். உண்மையில் அவர்களது எளிமை கண்டு நான் பலசமயம் வியந்ததுண்டு. தற்போதைய அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் சாதாரண வெள்ளை நூல் வேஷ்டி அணிந்து கொள்வதும், ஏனையவர்களும் சாதாரண எளிமையான உடையில் ஆலயம் வந்து பக்தர்களுடன் பக்தராகநின்று கந்தசுவாமியாரை பிரார்த்திப்பதும் அவர்களின் எளிமையான வாழ்வுக்கு சில உதாரணங்கள். அங்கே மேன்மக்கள் மேன்மக்கள் சிந்தனை கொண்டு அவ்வாறு உரைத்த போதும் இத் திடீர் மாற்றம் சடுதியாக ஏற்பட்டமைக்கான சரியான காரணம் யாருக்கும் தெளிவாகத் தெரியவில்லை. காலமறிந்து உதவிய பணத்தை வட்டியுடன் உரிய நேரத்தில் செலுத்த முடியவில்லை என்ற காரணத்தால்,ஏற்கெனவே குறிப்பிடப் பட்டதுபோல், எதிலும் நேர்மையை உணர்வுடன் கைக்கொள்ளும் மாப்பாணர் வம்சம் இவ்வாறான முடிவினை மேற்கொண்டது போலும் என ஒரு சாரார் கருதினர். இன்னொரு சாரார் பணம் ஒரு ஒழுங்கில் கொடுக்கப்பட்டு வந்த போதும், தொடர்ந்து "மழவராயர் தர்மகர்த்தா சபையினர்" தொடர்பு கொண்டமை குகஸ்ரீ இரகுநாத மாப்பாண முதலியாரால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாதிருந்ததால் அவ்வாறு நிகழ்ந்து என்றும் பேசிக்கொண்டனர்.

அது எவ்வாறு இருப்பினும் இச் சம்பவமும் இதன் பின்னர் மழவராயர் குடும்ப தர்மகர்தா சபையினர் மேற்கொண்ட முடிவும் எமக்கு உயர்ந்த வாழ்க்கை நெறியை புலப்படுத்தி நிற்கின்றது.மாப்பாணர் வளவும்,வீடும் பலகாலங்களாகப் பாவிக்கப்படாதிருந்து 1972 ஆம் ஆண்டு மழவராயர் தர்மகர்த்தா சபையினரால், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு, அங்கிருந்து ஆதீனப் பணிகள் முன்னெடுக்கப் படலாயின. மழவராயர் தர்மகர்த்தா சபையினரின் புண்ணிய செயல் கண்டு சைவ உலகம் மகிழ்ந்தது.

மேற்குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களையும் நோக்கும்போது

அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளவாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

என்ற ஔவைப் பிராட்டியாரின் மூதுரைத் தத்துவம் அங்கு செறிந்து உள்ளதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. நல்லை ஆதீனம் புதிய இடத்தில் சிறப்பாகச் செயற்பட ஆரம்பித்தது. சைவ சமய எழுச்சிக்கான பல்வேறு செயற்றிட்டங்கள் அங்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் பக்திபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன.கலை நிகழ்ச்சிகள் பல ஆதீனத்தில் இடம்பெற்றன.பல்வேறு சமய இலக்கிய விழாக்கள் அங்கு சிறப்பாக நடைபெற்றன. அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஆரம்பகால நிகழ்ச்சிகள் பல அங்கு ஒழுங்கு செய்யப்பட்டு மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்துடன் ஜனரஞ்சக நிகழ்ச்சிகளாக மக்களை மகிழ்ச்சிப் படுத்தின. சைவசமய வளர்ச்சியில் தேவாரப் பண்ணிசை வகுப்புகள்,சமயபாட வகுப்புக்கள், சமய அறிவுப் போட்டிகள் ஆகியன அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றன. உரிய முறையில் காலத்துக்குக் காலம் சமய தீட்சை வழங்கும் நற்கைங்கரியமும் நடைபெற்றன. மேலும் சிறப்பாக பிரதிவெள்ளிக் கிழமைகள் தோறும் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சிறு பிள்ளைகள், பெரியவர்கள் கலந்து, நல்லூர் வீதிவலம் வந்து பஜனை பாடுவார். தம்பிரான் சுவாமிகள் பண்ணுடன் தேவார புராணங்களைத் தாளம் இசைத்துச் சொல்லித்தர மற்றவர்கள் திரும்பப் பாடும் நிகழ்ச்சி மிக ரம்மியமானதாக பக்திசுவை சொட்டுவனவாக இருக்கும்.

திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலை வேளை தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சங்கு சேமக்கலம் இசைக்க திருவெம்பாவைப் பாடல்கள் பாடபெற்று நல்லூர் சுற்றாடல் புனிதமடைந்துள்ளது. நாயன்மார்களுக்குத் தவறாது குருபூசைகள் நடைபெற்றன. மற்றும் விசேட நாட்களில் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. தம்பிரான் சுவாமிகள் சைவ அனுட்டான விடயங்களில் மிக இறுக்கமான விதிகளை பின்பற்றி வலியுறுத்தி வந்தவராவர்.சிறப்பாக புலான் மறுத்தலை அனைவரும் கடைப் பிடிக்க வேண்டுமென பிரசாரங்கள் மேற்கொண்டு வந்தார்.

மேலும் சுவாமிநாதத் தம்பிரான் அவர்களிடம் மக்கள் வாழ்வியல் தொடர்பான ஆழமான சிந்தனைகள் பல தெளிவாக இருந்துள்ளன. சிறப்பாக நல்ல காரியங்களைச் செய்யும் போது அலட்சியம் இருக்கக்கூடாது என்றும்,அவற்றைக் காரணங்கள் காட்டிப் பிற்போடக்கூடாது, அன்றே செய்து முடித்தல் நன்று என்றும் வலியுறுத்துவார். மேலும் ஒரு "நல்ல கைங்கரியம் செய்கின்றபோது நான்குபேர் நன்மை செய்வார்கள்,ஊக்கம் தருவார்கள் அதேவளை நாற்பது பேர் இடைஞ்சல் தருவார்கள், தீமை செய்வார்கள். இது இயற்கை.இதைக் கண்டு மனம் சோர்வடையக் கூடாது. நல்ல காரியங்கள் நடைபெறுகின்றபோது அதற்கு ஒத்துழைப்புத் தராவிட்டாலும் உபத்திரவம் கொடுத்துக் கெடுக்காமல் இருத்தலே சிறந்தது என்பார்."

"பெண்மணிகள் ஆலயத் திருவிழாக்களுக்குச் செல்கின்றபோது பொன் நகைகளை அளவுக்கதிகமாக அணிந்து செல்வதைத் தவிர்த்து ஆண்டவன் கொடுத்துள்ள அச்சம், மடம், நாணம்,பயிர்ப்பு எனும் நல்லணிகளை அணிந்து தமக்கே உரிய சிறப்பு நகையான புன்னகை யுடன் செல்வது சிறப்பாகும்" என்பார்.

இவ்வாறு மக்களின் அன்றாட வாழ்வியலின் பல அத்தியாவசியங்களை யதார்த்த சிந்தனையுடன் தமது பிரசங்கங்களின் ஊடாகச் சைவசமய நெறிகளுடன் தெளிவுபடுத்திக் கொண்டவர் ஸ்ரீல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்களாகும். அவர் சைவசமயத்துக்கும், தமிழ் மொழிக்கும் மக்கள் வாழ்வியல் மேம்பாட்டுக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. காலத்தால் அழியாதவை.

நற்சைவப் பணிகள் பல ஆற்றி சைவசமய வளர்ச்சியை ஊக்கப்படுத்தி வந்த சுவாமிகள் 10.04.1981 இல் இவ்வுலகை நீங்கி இறையடி சேர்ந்தார். ஆதீனத்தின் அருகில் அவர் சமாதி அமைந்து அங்கு ஒரு சிவலிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்களைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,நல்லூர் திருஞான சம்பந்த ஆதீனத்தின் இரண்டாவது குரு மஹாசந்நிதானமாக முடிசூடிச் சைவப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார், சைவ சமயத்தின் உயர் அடையாளமாகத் திகழும் அவர் மலர்ச்சியான தெய்வீகத் தோற்றத்துடன் காணப்படுகின்றார். அவரின் சிறப்பான திட்டமிடலினாலும் வழிகாட்டலினாலும் ஆதீனம் இன்று அழகிய கட்டட வசதிகள் கொண்டு அமைந்துள்ளது. 1980 களிலும் அதற்குப் பின்னரும் மக்கள் வாழ்வில் ஏற்பட்ட அமைதியற்ற சூழல் ஆதீனச் செயற்பாடுகளையும் சற்று தாமதப் படுத்தியுள்ளமை தெளிவு. இந்த நிலை மாறி ஆதீனச் செயற்பாடுகள் முன்புபோல் மக்கள் மயப்பட்டு வளர எல்லாம் வல்ல நல்லூர் முருகப்பெருமானைப் பணிந்தேற்றுவோம்.

**துணை நின்றவை.**


1. ta.wikipedia.org>ஆதீனங்கள்
2. ta.wiktionary>org>ஆதீனங்கள்
3. www.puthiyathalaimurai.com
4. www.dinamani.com
5. www.noolaham.com
6. auvaiyarpadalgal.blogspot.com
7. நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்- ஸ்ரீதரன் இராசையா, 2004
8. சைவசமயக் கலைக் களஞ்சியம் - தொகுதி -9, 2013
9. சைவ ஆதீனங்கள் ஊரன் அடிகள். 2002
10. நல்லூர் கந்தசுவாமி பெருங்கோவில்-உமாச்சந்திரா பிரகாஷ், 2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று அவசியம் தேவைப்படும் பாடசாலை ஆசிரியர்களுக்கான உளவளத்துணை வகிபாகம்

திரு.S.K யோகநாதன்
ஓய்வு பெற்ற 2வது பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு வடிகால் அமைத்துக்கொடுக்கும் மிக முக்கிய நிறுவனமாக இன்று பாடசாலை உள்ளது. பாடசாலையின் உயிர்த்துடிப்பாளர்கள் ஆசிரியர்களே ஆவர். சமூகத்திற்கும் இவர்கள் வகைகூற வேண்டியவர்களாகவுள்ளனர்.

"ஆசிரியர்கள் தான் உலகின் முதன்மை அங்கத் தவர்கள் ஏனெனில் அவர்கள் பணி பூமியின் விதியைத் தீர்மானிக்கும்"- ஹலன் கல்டிகொற்

இவ்வாறு உலகிலேயே உயர்வாண்மையாக உள்ள ஆசிரியத்தொழில் வகிபாகங்கள் பல வாகவுள்ளன. கற்பிப்பவர். வழிகாட்டி, நண்பர். தலைவர். உதவுபவர். முன்மாதிரியாளர். சமூகத்தலைவர், கலைஞர் என இன்னும் பலவாகவுள்ளன. இவற்றுடன் இன்று உளவளத்துணையாளர் என்ற மிக முக்கிய பாத்திரத்தை உடனடியாகப் பெறவேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள். ஆசிரியர்கள் அனைவருமே உளவளத் துணையாளர் வகிபாகத்தை ஏற்று இன்றைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பொருத்தமான ஆலோசனைகளைப் பொறுப்புடன் வழங்க வேண்டியுள்ளது.

யுத்த விளைவுகள், வறுமை, சமூகச்சீர்கேடுகள். சமூகவன்முறைகள். கலாச்சாரச் சீர்கேடுகள், குடும்பப் பிரச்சினைகள், சமவயதுக் குழுப்பிரச்சினைகள், கட்டிளமைப்பருவ பாலியல் சார் குழப்பங்கள் எனப் பல விதமான நெருக்கீடுகளால் பாதிக்கப்பட்டு உளச்சக்தி தீய்ந்து போயிருக்கின்ற மாணவர்களைத் தயார்நிலைக்கு அழைத்துவர வேண்டிய பொறுப்பு இன்று ஆசிரியர்கள் மீது அவர்களை அறியாமலே சுமத்தப்பட்டுள்ளது. அதைப்புரிந்து தமது கற்பித்தல் கடமைகளுடன் உளவளத் துணையாளராக இருந்து வழிகாட்டப் பல்வேறு திறன்களை இன்றைய ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும்.

**உளவளத்துணை வகிபாகங்கள்.**

ஒருவர் தனது உள வளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்கின்ற பயணத்தில் அவர் தான் சந்திக்கின்ற தடைகளை வெற்றிகொள்ள அவருக்கு அளிக்கும் ஒரு உயிர்ப்பான தொடர் செயற்பாட்டு உதவியே உளவளத்துணையாகும். இன்றைய பாடசாலை மாணவர்கள் பல நெருக்கடிகள் மத்தியில் தமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது தவிக்கின்றார்கள், தற்கொலை செய்து கொள்கின றார்கள், தகாத உறவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்கின்றார்கள். போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுகின்றார்கள். ஆசிரியரையோ, அதிபரையோ. பெற்றோரையோ. பெரியோரையோ மதிக்காமல் செயலாற்றுகின்றார்கள். எனக்குற்றம் சுமத்தப்படுகிறது.

உளவளத் துணையில் பிரச்சினைகளோடு வரும் மாணவரை "அவரை அவராக ஏற்று மதித்தும் கசப்பான அனுபவங்களைப் பகிர" ஒத்த உணர்வு ஆசிரியருக்குத் தேவை மாணவரின் ஏக்கங்கள் தேவைகள், ஆசைகள் என்பவற்றை அறிந்து உணர்ந்து, அவரது பிரச்சினையின் உண்மை நிலையை அவரையே அறியச்செய்து அவரையே தீர்வுக்கான உதவும் சேவையாக உளவளத்துணைச் சேவை அமைகின்றது.

உதவி நாடி வரும் மாணவர்களின் உளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு உளவளத்துணைச் சேவை நின்று விடுவதில்லை. அதற்கு அப்பாலான தேவை ஏற்படுகின்றபோது மாணவரின் நடத்தையில் நேரான மாற்றத்தை ஏற்படுத்தல் புதியதான அகக்காட்சிகளைக் காணச்செய்தல், குடும்பம், பாடசாலை சமூகப் புறச்சூழல் மாயமதில் பாதகமான முறையில் தொழிற்படுகின்றபோது அவற்றினைச் சாதகமான முறையில் மாற்றி யமைத்தல், குடும்பமாக வைத்து குடும்ப உளவளத் துணையை வழங்குதல், ஒத்த பிரச்சினையுள்ள துணைநாடி மாணவர்களைச் சேர்த்து குழுவாக உளவளத் துணைச் சேவை செய்தல் என்பவையும் முன்னுரிமை பெறுகின்றன.

ஆசிரியர்கள் உளவளத்துணையாளராக செயலாற்ற முன்வரும்போது அவற்றிற்கான உரிய பயில்வுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் "ஆசிரியர்கள் வாண்மைசாரா உளவளத்துணையாளர்" என்ற வகையில் மாணவர்களை அன்புடன் அணுகி பாதுகாப்பை வழங்கி, அவர்கள் எவ்வாறான சூழ்நிலைகளில் இருந்து வருகின்றார்கள். எத்தகைய உளப்பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அவற்றிற்குரிய காரணங்கள் எவை? அவற்றை இனம் காண்பது எவ்வாறு? தீர்வுகளை எவ்வாறு பெறலாம்? எவ்வாறான உதவிகளை வழங்கலாம் ஆகிய விடயங்களுக்குத் தீர்வுகளைப் பெற பின்வரும் வகிபங்குகளை ஆசிரியர்கள் பெற வேண்டும்.

சிறந்த செவிமடுப்பாளர் (As a Active Listener)

நண்பர் (as a Friend)

வசதியளிப்பவர் (as a Facilitator)

வழிகாட்டுபவர் (as mediator)

சிகிச்சையளிப்பவர் (as a Premeditator)

தலைமைத்துவம் வழங்குபவர் (as a Leader)

தகவல் வழங்குபவர் (as a Information Provider)

பிரதிநிதி (as a Representative or Agent)

கட்டுப்பாட்டாளர் (As a Controller)

முற்பாதுகாப்புடன் செயற்படுபவர் (As a preventer)

சமூகநிர்மானி (Social Builder)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பரந்த ஆசிரியத்துவத்துக்கே உரித்தான வகிபங்குகளை உளவளத் துணையாசிரியர் கொண்டிருப்பதுடன் இரகசியம் காப்பவராக, நேர்மை யானவராக, மனிதத்துவம் பொதிந்த முதல்தர மனிதராக, நம்பிக்கைக்குரியவராகச் செயலாற்ற வேண்டும். எனவே உளவளத்துணை என்பது தகவல் கொடுப்பதல்ல. புத்திமதி கூறுவதல்ல, துணைநாடி வருபவரை மதிப்பீடு செய்வதல்ல. நம்பிக்கை களை மாற்றுவதல்ல, எச்சரிக்கை பயமுறுத்தல் விடுவதல்ல. தன் உளச்சக்தி மூலம் துணை நாடியினுடைய உளச்சக்தியைப் பொருத்தமாக அசைப்பதன் மூலம் துணைநாடி தனது சக்திகளை இனம் கண்டு அவற்றைப் பயன்படுத்தி தன் பிரச்சினைகளைத் தீர்க்க துணை புரிதலே உளவளத் துணை ஆசிரியரின் முக்கிய பணியாகும்.

நாடிவரும் மாணவர்களின் உளச்சக்தி அசையச் செய்வதற்கு,

- உடனிருத்தல்
- உற்றுக்கேட்டல்
- ஒத்துணர்வு
- துருவி ஆராய்தல்
- குவியப்படுத்தல்
- எதிர் கொள்ளல்
- பார்வை மாற்றம் செய்தல்
- இலக்கு நிர்ணயம் செய்தல்

ஆகிய நுண் திறன்களை மேற்கொள்ள வேண்டும்.

பிரயோக ரீதியில் இத்திறன்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்கு முறையில் வர வேண்டும் என்பதல்ல. உளவளத்துணையாசிரியர் உன்னத ஆளுமைப் பண்புடையவர்களாகக் காணப்பட வேண்டும்.

**உளவள ஆசிரியரின் ஆளுமை**

ஒருவரது ஆற்றல்கள், நம்பிக்கைகள், தனித்தன்மை கள், மனப்பாங்குகள், சமூக ஒற்றுமைத்தன்மைகள், கொள்கைகள், பழக்கவழக்கங்கள், உணர்ச்சித்தூண்டல் பேறுகள், மனப்பாங்குகள் ஆகியவற்றுடன் அவற்றிடம் காணப்படும் சக்தி மட்டங்கள், எண்ணங்கள், கனவுகள் ஆகிய அனைத்தையும் அவரது ஆளுமை உள்ளடக்கியிருக்கும். எல்லா மனிதர்களுமே தமக்கெனப் பிரத்தியேகமாக ஆளுமைக்கூறுகளைக் கொண்டிருக் கின்றார்கள். எனினும் தமது ஆற்றல்களை முழுமையாகத் தொழிற்படுத்துகின்ற நிலையில் மனிதர்கள் இருப்பது குறைவு, ஆனால் உன்னத ஆளுமையுடையோர் நேர் நிலையில் முழுமையாகத் தொழிற்படுகின்ற ஆளுமை உள்ள மனிதர்களாக இருப்பர். உளவளத்துணை ஆசிரியருக்கு இப்பண்புகள் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே தீர்ப்பிடுவர். அல்லது தீர்ப்பிடாமலே விடயங்களை நோக்குவர். இவர்கள் விடயங்களில் இருந்து மனிதர்களைப் பிரித்துப்பார்க்கக் கூடியவர்களாகவே இருப்பர். தம்மிலுள்ள குறை நிறைகளை முழுமையாக விளங்கிக் கொள்வதுடன் அவற்றை ஒரே தளத்தில் நின்று மனந்திறந்து பேசக்கூடியவர்களாக இருப்பர். தமது சுயத்தில் நின்று மனந்திறந்து பேசக்கூடியவர்களாக இருப்பர். தமது சுயத்தின் இருண்ட பக்கங்களை அல்லது தமது ஆலோசனை நாடியின் இருண்ட பக்கங்களைப் பார்க்கக்கூடிய ஆற்றல் உடையவர்களாக இருப்பர். ஆளுமைக்கூறுகள் முரண்பாடோ அல்லது பிளவோ இருப்பதில்லை. இவர்கள் தமது மறை எண்ணங்களை மற்றவர்கள் மீது புறத்தோற்றம் செய்ய மாட்டார்கள். அவர்களிடமிருந்து எப்போதும் நேரான எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகளே வெளிப்படும். இதனால் உன்னத ஆளுமையாளர்களுக்கு அருகிலிருப்பவர்களும் மேலான ஒரு உணர்வை அனுபவிப்பார்கள்.

இவர்கள் மனிதத்துவத்தை நிறைவாக அனுபவிப்பார்கள். உலகம் முழுவதும் பரந்து காணப்படும் அன்பை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும். இவர்கள் மகிழ்வு, இன்பம் ஆகியவற்றுடன் மட்டும் தம் வாழ்வைச் சுருக்கிக் கொள்ளாது தம் எதிரான உணர்வுகளையும் புரிந்து செயற்படுவர். ஏனையவர் களின் எதிர்மறையான செயற்பாடுகள் இவர்களை ஒரு போதும் பாதிக்காது. இவ் உன்னத ஆளுமை யுடையோர் சரி- பிழை, நல்லது கெட்டது எனத்தீர்பிடுவதில் காலத்தைச் செலவு செய்யாது ஆக்க ரீதியாக என்ன செய்யலாம் என்பதிலேயே கவனம் செலுத்துவர். தமது குறைகளைத் தொடர்ந்து திருத்திக் கொண்டே இருப்பர். இது ஏனையவர்களின் குறைகளைத் தீர்க்க முன்னுதாரணமாக அமையும். தமது செயல்களுக்குத் தாமே பெறுப்பேற்றுக்கொள்வர். தமது உள்ளத்தோடும் உடலோடும் உயிர்ப்பான தொடர்பு கொண்டிருப்பதால் தங்களைப்பற்றி யதார்த்தமான இலட்சியவாத விம்பங்களை வைத் திருப்பதில்லை.

உன்னத ஆளுமைப்பண்புடையவர்களின் பண்புகளில் பாரம்பரியக் கூறுகளும் தாக்கம் செலுத்த முடியாது. மற்றவர்களைக் குறை கூறுவதை இவர்கள் தவிர்த்துக் கொள்வர். தமக்கு ஏற்படுகின்ற துன்பங்களையும், கஸ்டங்களையும் கூட எப்படிப் பயனுள்ளதாக மாற்றலாம் என்பதில் ஆர்வம் காட்டுவர். மற்றவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற புண்படுத்தல், உதாசீனம் செய்தல்,பயன்படுத்தல் போன்றவைகளில் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். மேலும் இவர்கள் இன்னொருவர் போல் ஆகவேண்டும் என்ற விருப்பமின்றி தாம் தாமாகவே இருக்க விரும்புவர். இவர்கள் மற்றவர்களின் வளர்ச்சியிலும் சமூகத்தின் ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்ட வர்களாக இருப்பர். இவ்வாறான பண்புகள் அனைத்தும் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கிடைக்கும்போது அவர்கள் உளவளத் துணையாளர் என்ற உயர்ந்த வகிபங்கைப் பிரயோகிப்பவராகச் செயலாற்ற முடியும். இதற்கான பயிற்சிகளையும், எதிர்காலவியல் நோக்கிய திட்டங்களையும், செயலாற்று கைகளையும் விரைவாக எமது மண்ணில் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன் மூலமே கல்விப் பிரச்சினைகள் பலவற்றை நாம் தீர்த்துக் கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்விக்கூடங்களிலும் வாழ்க்கையிலும் ஆற்றப்படும்
பணியின் உள்ளார்ந்த நோக்கம் அதன் வழி
உளப்பூரிப்படைதலும் ஆனந்தம் அனுபவித்தலும்
மட்டுமன்றி அப்பணியின் பேற்றால் சமூகம் அடையும்
உன்னத நன்மைகள் பற்றிய அறிவு பெறுதலாகும்" அல்பேட் ஐன்ஸ்ரைன்-

என்ற வகையில் எமது பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் இடர்பாடுகள் கருத்தூன்றி மனிதத்துவ நோக்கில் கவனிக்கப்பட வேண்டும். மாணவர்களின் உடல் - உளப்பிரச்சினைகள் கல்விச் செயற்பாடுகளில் தடைகளையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தும் அதே வேளை விரும்பத்தகாத செயற்பாடுகளால் மாணவர்களின் கல்வி எதிர்கால வாழ்வு பாதிப்படை கின்றது. எனவே கல்வியை வழங்கும் உயர் சமூக நிறுவனமான பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரும் கல்வியின் விளைவாக மாணவர்கள் உச்சப்பயனை மகிழ்ச்சியான சூழலில் பெற தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் நவீன வகிபங்குப் பரிமாணமான உளவளத்துணையாளன் என்ற உன்னத வகிபங்குச் செயன்முறை வழிகாட்டி நிற்கின்றது. இன்று எல்லா ஆசிரியர்களுமே உளவளத் துணையாளர்களாக செயலாற்ற வேண்டும். இது தொடர்பான விழிப்புணவர்வு பெற்றோருக்கும் அவசியம் தேவையாகின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கல்வி சீர்திருத்தத்தின் தேவைகள் மீது ஒரு பார்வை

திரு.க.யேனாட்,
ஓய்வு நிலை பீடாதிபதி,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

**முன்னுரை**

இலங்கையின் கல்வி வரலாற்றில் கல்வி சீர்திருத்தம் கல்வி வரலாற்று தொடக்கத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டுள்ளமை தெளிவாக காணப்படுகின்றது. வெளிநாட்டார் இலங்கைக்கு வருவதற்கு முன்பே காணப்பட்ட கல்வி முறையிலும் அக்கால மக்களின் வாழ்க்கைத் தேவைக்கேற்ப குறுகிய அளவிலேனும் கல்வி முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்பட்டுள்ளமை காணப்படும் வரலாற்றுச்சான்றுகளாகும். அப்போதைய புராதன கல்வி முறைகளிலும் அப்போது காணப்பட்ட மக்களின் தேவைகளுக்கேற்ப அக்கால கல்வி முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முறையான கலைத் திட்டங்கள் எவையும் பாவிக்கப்படாதபோதும் தேவைகளுக்கேற்ப சாத்தியமான வழிகளில் கல்வி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பாக தொழில் கல்வி சுயதொழில் கல்வியாகவும் உளவியல் என்று அறியாமல் மக்களது உளச்சமநிலைகளுக்காக நாட்டியம்நடனம் இசை போன்ற அழகியல் செயல்பாடுகளாகவும் வழங்கப்பட்டு கால தேவை மாற்றங்களுக்கேற்ப அக்கல்வி துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வெளிநாட்டார் கால கல்வி**

இலங்கையில் வெளிநாட்டாரின் வருகை போர்த்துக்கேயர் பின்னர் ஒல்லாந்தர் தொடர்ந்து ஆங்கிலேயர்கள் என தொடர்ந்துவந்த காலத்தைக் குறிப்பிடலாம். இவர்களின் வருகை அடிப்படையில் வர்த்தக நோக்கமாக இருந்திருக்கின்றபோதும் காலணித்துவ ஆட்சியும் மெல்ல காணப்பட்டது.ஆங்கிலேயர் காலத்தில் காலனித்துவ ஆட்சி அரசியல் ஆட்சி அதிகாரம் மேலோங்கி காணப்பட்டமை தெளிவாகும்.

போர்த்துக்கேயர் முதலில் வியாபார நோக்கில் இலங்கைக்கு வருகை தந்தாலும் கூடவே தமது சமயமாகிய கத்தோலிக்க சமயத்தை வியாபிக்க செய்வதை நோக்கமாக கொண்டிருந்தனர். தமது வியாபார நோக்கிலும் சமயம் பரப்பும் நோக்கிலும் ஏற்கனவே காணப்பட்ட பிராமண, பௌத்த புராதன கல்வி முறைகள் போதுமானதாக இருக்கவில்லை.மக்களுடைய அறிவு நிலை அவர்களது நோக்கங்களை நிறைவு செய்ய போதுமானவையாக இருக்கவில்லை. அதனால் அப்போது காணப்பட்ட பண்டைய கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தனர். அவற்றைக் "கல்வி முறை மாற்றங்கள்" எனலாமே தவிர "கல்விச் சீர்திருத்தம்" எனக் கூறமுடியாது.

போர்த்துக் கேயரைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரும் தமது வியாபாரத்திற்கு உகந்தவர்களையும் தமது சமயமாகிய கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றக் கூடியவர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கும் நோக்கில் போர்த்துக்கேயரின் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

இவ்விருசாரும் தத்தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் தாய்மொழிக்கல்வி, அழகியல் கல்வி, தொழில் கல்வி, சமயக் கல்வி, அடிப்படைக் கணிதம் என அடிப்படையான பாடவிதானங்களில் கல்வி வழங்க அதற்கேற்ப கல்வி நிறுவனங்களை (பாடசாலைகளை உருவாக்கிக் கொள்ளவும், கல்விப் பொறுப்புக்களை மிஷனறிகளிடம் ஒப்படைத்துச் செயற்படவும் செய்தனர். இவ் அமைப்பில் ஆரம்பக்கல்வி, தொழில் கல்வி அடிப்படைக்கல்வி என்ற போக்குகளும் காணப்பட்டன.

ஆங்கிலேயர் காலத்தில் வியாபாரம் சமயம் அரசியல் ஆட்சி, நிர்வாக செயற்பாடு என விரிவடைந்த காரணத்தினால் அவற்றிற்கேற்றால்போல் போர்த்துக் கேயர் ஒல்லாந்தர்கால கல்வி முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இவர்களது ஆங்கிலேய கல்விமுறை அப்போது அறிமுகமாகியது. அதற்கேற்றால் போல் கல்வி பாடவிதானங்களும் பாடசாலை அமைப்பு முறைகளும் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, ஆசிரியர்கல்வி எனவும் கல்வி நிர்வாக போக்குகளும் மாற்றியமைக்கப்பட்டன. இம்முறைகளில் ஆங்கிலக்கல்விக்கு முக்கியம் தரப்பட்டன. இதன் போது பாரியளவிலான கல்விச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வெளிநாட்டார் காலத்தில் இலங்கையர்களின் கல்வி நோக்கு வெளிநாட்டவர்களின் தேவைகளையும் ஆட்சி அதிகாரங்களையும், வியாபாரம் சமய நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டே காணப்பட்டன.

ஆங்கிலேயர் காலத்தின் பின் பகுதியில் இலங்கையின் ஆட்சியதிகாரம் சுதேசிகளுக்கு மாற்றும் முயற்சிகளின் போக்கில் பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு அரசியல் சீர்திருத்தம் தொடர்பான சிபாரிசுகள்முன் வைக்கப்பட்டன. அவ்வாணைக்குழுக்களின் தமது சிபார்சுகளில் பெரும்பாலும் கல்விச் சீர்திருத்தம் பற்றி சிபார்சுகள் முக்கியம் பெற்றிருந்தன. குறிப்பாக,

கோல்புறூக் ஆணைக்குழு 1833
மோர்கன் ஆணைக்குழு 1865
டொனமூர் ஆணைக்குழு 1931 ஆகிய ஆணைக்குழுக்களின் சிபாரிசுகளில் காணமுடியும். இச்சிபார்சுகள் இலங்கையில் ஆங்கிலேயர் காலத்தின் பிற்பகுதியிலும் சுதந்திரத்திற்கு முன்னரான காலப்பகுதியிலும் பல கல்விச்சீர்திருத்தங்களாக்கப் பட்டிருத்தமையாக காணமுடிகிறது. அவ்வாறான சீர்திருத்தங்கள் பின்வரும் சீர்திருத்தங்களை முக்கியமாக கொண்டிருந்தன.

1. பாடவிதான உள்ளடக்க மாற்றங்கள்
2. பாடசாலை, கல்வி நிறுவனங்களின் அமைப்பு முறைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. போதனா மொழிகளில் குறிப்பாக ஆங்கில மொழி மூலமான, ஆங்கில மொழிக்கல்வி, தாய்மொழிக் கல்வியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்
4. ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வியில் பட்டப்படிப்புக்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்.
5.. கல்வி நிர்வாகத்தில், கல்விப் பொறுப்புக்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்.
6. கல்வி நோக்கங்களில் ஏற்படுத்தப்பட்ட நோக்கங்கள்.

இவ்வாறு பல மாற்றங்கள். அவை அடிப்படையில் ஆங்கிலேயர்களின் வியாபாரத்திற்கும் அரச பொது நிர்வாகத்துக்கும் பொருத்தமான மனித வளங்களை உருவாக்கும் நோக்கத்தை பிரதானமாக கொண்டிருந்தது. கூடவே அடிப்படை ஆரம்பக்கல்வியில் மொழியறிவு, ஆங்கில அறிவு, கணித அறிவு, தொழில்கல்வி பயிற்சி வழங்குவதையும் கொண்டிருந்தன. இதனால் இலங்கைக்கல்வியில் அடிப்படை சீர்திருத்தங்கள் தேவைக்கேற்ப ஏற்படுத்தப்பட்டன.

அவற்றைத் தொடர்ந்து சுதந்திரத்திற்கு முன்னைய மிக அண்மைய காலத்தில் முதல் கல்வி அமைச்சரான C.W.W கன்னங்கரா காலம் மிக முக்கியமான சீர்திருத்தக் காலமாகும். C.W.W கன்னங்கராவின் குழுவினர் இலங்கையின் கல்விச்சீர்திருத்ததிற்குப் பல முன்மொழிவுகளை சிபார்சுகளாக முன்வைத்தனர். அதுவே இலங்கையின் கல்வியில் பல மாற்றங்களை சீர்திருத்தங்களை ஏற்படுத்த அடிப்படையாக அமைந்து இன்று வரை அதன் தொடர்ச்சியான பல போக்கையும் காண முடிகிறது.

எனவே கன்னங்கராவின் சிபார்சுகளை இங்கு சுருக்கமாக குறிப்பிடுவது தேவையானதாகும்.

1. மத்திய பாடசாலைகள் நிறுவுதல்
2. இலவசக்கல்விமுறை நடைமுறைப்படுத்தல்
3. தாய்மொழி மூலமான கல்வி
4. கட்டாய சமயக்கல்வி
5. கட்டாயக் கல்வி
6. ஆசிரியர் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள்

இச்சிபார்சுகள் இலங்கையர்களுக்கான கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பதும் பரவலாக்குவதையும் அடிப்படை நோக்காக கொண்டிருந்தன. இச்சிபார்சுகள் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரும் தொடர்ந்து வெவ்வேறு வழிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. இதனடிப்படையில் சில நடவடிக்கைகளை இங்கு குறிப்பிடலாம்.

1. யாவருக்கும் கல்வி
2. கல்வியில் சம வாய்ப்பு
3. இலவச பாடநூல் விநியோகம்
4. இலவச சீருடை விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வறிய மாணவர்களுக்கு உதவி வழங்கவும் நகர்புற பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யவும் (தரம் 5ல்) புலமைப்பரிசில் பரீட்சை இதன் நோக்கம் இன்று மாறுபட்டுக் காணப்படுகின்றது.
6. மதிய உணவுத் திட்டம்.

இவ்வாறு இன்னும் பல திட்டங்கள் யோசனையில் உள்ளது. முக்கிய விடயம் யாதெனில் இத்திட்டங்களுக்கான அடிப்படை C.W.W கன்னங்கராவின் சிபார்சுகளே காணப்படுகின்றமையாகும். இலங்கையின் கல்விச் சீர்திருத்தங்கள் காலத்திற்குக் காலம் இன்று வரை தொடருகின்றன.

இலங்கையின் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்ந்து வந்த காலங்களில் முக்கியமாக
1972 கல்விச் சீர்திருத்தம்
1981 கல்விச் சீர்திருத்தம்

1997 கல்விச் சீர்திருத்தம் எனத் தொடர்ந்து C.W.W கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தத்தை தொடர்ந்து வந்திருப்பதைக் காணமுடிகிறது. எவ்வாறாயினும் பின்னர்வந்த கல்விச் சீர்திருத்தங்களுக்கு பல விமர்சனங்களும் முன்வைக்கப்படாமல் இல்லை. அதனால் அவற்றை சரிவர நடைமுறைப்படுத்துவதில் பல சவால்களும் தோல்விகளும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

**தொடரும் சில சவால்கள்**

அவ்வாறான முக்கியமான சில சவால்களையும் தடைகளையும் உதாரணமாக இங்கு பார்க்கலாம்.

1. ஆங்கிலேய கல்வி முறையில் தொடர்ச்சியும் எச்சசொச்சங்களும் அடையாளங்களும்
2. பரீட்சை மையக் கல்வி இலங்கையில் மாணவர்களிடம் கல்வியடைவை மதிப்பிடுவதற்கு எழுத்துப் பரீட்சைகளே காணப்படுகின்றன. இதில் மாற்றத்தை ஏற்படுத்த 1. தொடர்மதிப்பீடு 2. வகுப்பறை மட்ட மதிப்பீடு (CBA) என பல முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அவை எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தவோ பரீட்சை மைய மதிப்பீட்டிலிருந்து முழுமையாக விலகவோ இன்னும் முடியவில்லை.
3. உயர்தர வகுப்பு மதிப்பீட்டிலும் புதிய முறைகள் புகுத்தப்பட்டாலும் அவை பரீட்சை அடைவு மதிப்பீட்டிலிருந்து விலக இடமளிக்கவில்லை எனலாம்.
4. பாடசாலை மனிதவள, பௌதீகவள பங்கீட்டிலும் சமநிலையை ஏற்படுத்திக் கொள்ளமுடியவில்லை.
5. கல்வி நிர்வாகச் செயற்பாடுகளிலும் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தமுடியாமல் கைவிடப்பட்ட பல முயற்சிகளும் உள்ளன.

இவை போன்ற பல சவால்களும் தடைகளும் இலங்கையின் கல்விச் சீர்திருத்தங்களில் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்த தவறியுள்ளன. எவ்வாறாயினும் இலங்கையின் கல்விச் சீர்திருத்தம் நடைமுறையில் உள்ள பல காரணங்களால் வலியுறுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வி சீர்திருத்தத்தை அவசியமாக்கும் காரணிகள்.**

பொதுவாக கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிச் சிந்திக்கும் போது முதலில் வருவது மாறும் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகளே. வளர்ச்சியடைந்த நாடுகள் அதனூடாகவே கல்வியில் முன்னேற்றமடைந்திருக்கின்றன. அதனால் கல்வியியலாளர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் மற்றும் கல்வித்திட்டமிடலாளர்களும் கல்விக் கோட்பாட்டாளர்களும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு சென்று அங்கு நிலவும் கல்வி குறைகளையும், கல்விச் செயல்நெறிகளையும் புதிய தொழில்நுட்பமுறைகளையும் கற்றல் கற்பித்தல் தொழில் நுட்பங்களையும் கண்டுவந்து அவற்றை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதற்கு கல்விச் சீர்திருத்தங்களை முன்வைக்கின்றமை கண்கூடு.

ஆனால் அத்தகைய சீர்திருத்தங்கள் இலங்கைக்குப் பொருத்தமானவையா? இலங்கைக்குப் பொருத்தமானவையா? இலங்கையில் சாத்தியமானவையா? இலங்கை கல்விப்பிரச்சினைகளுக்கு சமூக அரசியல் பிரச்சினைகள் சவால்கள் எழுவினைகளுக்கு தீர்வு காண உதவக்கூடியவையா? போன்ற வினாக்களுக்கு முக்கியம் கொடுக்க தவறவிடப்படுகின்றது. இவ்வாறான சிந்தனைகளுடன் இலங்கை கல்விச் சீர்திருத்தங்களின் போது அவற்றை அவசியப்படுத்தும் முக்கிய காரணிகளை நோக்கலாம்.

1. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இன்றைய நிலையில் இலங்கையின் பொருளாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. கடனைத்தீர்க்க கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது மேலும் நிலைமையை சீர்கெடுக்கும். மாறாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து மொத்த தேசிய உற்பத்தியை உயர்த்தி ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கக் கூடிய ஆக்க சிந்தனைகளைத் தரக்கூடிய உற்பத்தியுடன் கூடிய கல்வி முறைகள் அறிமுகப்படுத்துவது அவசியம். வளர்ச்சியடைந்த நாடுகள் பல கல்வி முறையினூடாக கைத் தொழில் விவசாய உற்பத்தித்துறைகளை மேம்படுத்தி வெற்றி கண்டுள்ளமை நல்ல உதாரண முயற்சிகளாகும்.

2. கல்வித் தொழில்நுட்பங்களைப் பரவலாக்குதல் இலங்கையில் பல கல்வி சமமின்மைகள் காணப்படுகின்றன. புதிய கல்வித்தொழில் நுட்பங்கள் அறிமுகமாக்கப்படுகின்ற போதிலும் அவை வேறுபாடுகளின்றி சம வாய்ப்புகளுடன் பரவலாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் கல்வி முறையில் காணப்படுவது அவசியம். உதாரணம் மனித, பௌதிக, தொழில்நுட்ப, நிதி வளங்களின் சம பங்கீடுகள் கல்வி முறையினூடாக நடைமுறைப்படுத்தும் சீர்திருத்தங்கள்.

3. இலங்கையில் காணப்படும் சமூக எழுவினைகளுக்கு தீர்வு காணுதல்.
இலங்கையில் இன்று பல சமூக எழுவினைகள் சவால்களாக காணப்படுகின்றன. அவையாவன

அ. தொழில் வாய்ப்பின்மை

ஆ. உயர் கல்வி வாய்ப்பின்மை

இ. போதைப் பொருளின் பயன்பாடு வியாபாரம்

ஈ. பொருத்தமற்ற கலாசாரங்கள் (கொலை, களவு, அடவாடித்தனம் போன்றவை)

உ. சமூகப் பிறழ்வு சமூகப் பொருத்தப்பாடின்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்ற பல கல்வி குறையினூடாக இவ்வெழுவினைகளுக்கு தீர்வு காணக் கூடிய சீர்திருத்தங்கள் தேவை.

4. இன,மத, மொழி அரசியல் பேதங்களை நீக்கி தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய மனப்பாங்குகளை ஏற்படுத்தக் கூடிய கல்வி முறையின் தேவை. இன, மத, மொழி பேதங்களை உள்ளடக்காத பாடவிதானங்களைத் தவிர்த்து புரிந்துணர்வும் சந்தேகங்களும் அற்ற விடயங்களைப் பாடவிதானங்களை உள்ளடக்கக் கூடிய கல்விச் சீர்திருத்தம் தேவை.

5. பரீட்சை மையக் கல்வி முறையைக் குறைத்து திறன்களை தொழில் பயிற்சிகளை வழங்கக்கூடிய மரபு சார்பற்ற, செயற்பாட்டுடன் கூடிய கல்விச் சீர்திருத்தங்களின் தேவை புதிய மதிப்பீட்டு முறைகளின் அறிமுகம்.

6. மனித முதலீட்டு வளங்களை பொருளாதார அறிவு வளங்களை வழங்கக்கூடிய கல்விச்சீர்திருத்தங்களின் தேவை எல்லா நிலைகளிலும் பாடசாலை விட்டு இடைவிலகுவோர் சான்றிதழ் தகைமையுடன் மட்டும் செல்பவர்களாக அன்றி தொழில் தகைமையுடன், சுயதொழில் வாய்ப்பு எண்ணக் கருவுடன் செல்லக் கூடியகல்விச் சீர்திருத்தம் தேவை திறன்சார்ந்த கலைத்திட்டங்களின் அறிமுகம்

7. அறியாத உலகுக்கு மனித வளங்களாக்கும் கல்வி முறைச் சீர்திருத்தத்தின் தேவை. மிக வேகமாக மாறி வரும் விஞ்ஞான தொழில் நுட்பமாற்றங்கள் எதிர்காலத்தில் புதிய விரைவான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் நடைமுறைத்தேவைகளை நிறைவு செய்யக் கூடிய மனித வளங்களாக மட்டும் அன்றி எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய மனித வளங்களை உருவாக்கக் கூடிய கல்விச் சீர்திருத்தம் தேவை.

8. ஆக்கத்திறன்களை, புத்தாக்கங்களை உருவாக்கக்கூடிய கல்விச்சீர்திருத்தத்தேவை. வெறுமனே ஏட்டுக்கல்வியாக அன்றி புதிய கண்டு பிடிப்புக்களை, புத்தாக்கங்களை, ஆக்கத்திறன்களை சுய செயற்பாடுகளை ஊக்குவிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை வழக்கக் கூடிய கல்விச் சீர்திருத்தம் தேவையானவையாகும்.

9. பொதுக் கல்வி முறையிலிருந்து வெளியேறும் போது உயர் கல்வி வாய்ப்புக்களை வாண்மைத் தொழில் வாய்ப்புக்களை தொடர் தேர்ச்சியாக வழங்கக்கூடிய கல்விச் சீர்திருத்தத்தின் தேவை. வெவ்வேறு துறைகளில் கல்வி பெற்று பயிற்சி பெற்று மேல் நோக்கி இடையீடற்ற வாய்ப்புப் பெறக் கூடிய கல்விச் சீர்திருத்தம் தேவை.

10. கல்வி நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் கல்வி நிர்வாகத்திலும் வினைத்திறன், விளைதிறன் உள்ள மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய கல்விச் சீர்திருத்தங்களின் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பல்கலைக்கழக கல்வியிலும், தொழில் நுட்பக்கல்வியிலும், தொழில் கல்வியிலும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய கல்விச்சீர்திருத்தம் மேற்கொள்ளக்கூடிய நிறுவனங்களில் இருந்து வெளியேறுவோர் நாட்டின் எதிர்காலத்திற்கு தேவையான மனித வளங்களாக உருவாக்கக்கூடிய கல்விச் சீர்திருத்தம் தேவையாகும்.

12. ஆங்கிலம், பொது அறிவு, வேறுபட்ட நுண்ணறிவுகளை உணர்வு சார்ந்த நுண்ணறிவு பல்வகைமை நுண்ணறிவு பொதுநுண்ணறிவு, இயற்கைசார்ந்த நுண்ணறிவு, செயற்கை நுண்ணறிவு போன்ற விடயங்களை ஏற்படுத்தக் கூடிய உள்ளடக்கங்களை பாட விதானங்களின் சேர்த்துக் கொள்ள முடியுமான கல்விச் சீர்திருத்தங்களின் தேவை.

13. பல்கலைக்கழக கல்வியிலும் புதிய சிந்தனைகளை நாட்டின் தொழில் முயற்சிகளுக்கு உதவக்கூடிய ஆய்வு முடிவுகளை தரக்கூடியகல்விச் சீர்திருத்தங்கள் தேவையாகும். பட்டம் வழங்கும் நிறுவனங்களாக அன்றி நாட்டிற்கு பொருத்தமற்ற மனித வள பட்டதாரிகளை உருவாக்கும் அமைப்புக்களாக அன்றி நாட்டன் தொழில் துறைகளுக்கு (விவசாயம், கைத்தொழில், வியாபாரம், உற்பத்தி நிர்வாகம்) பொருத்தமான தேவைகளை நிறைவு செய்யக் கூடிய மனித வளங்களை உருவாக்கும் கல்விச் சீர்திருத்தம் தேவையாகும்.

14. சர்வதேச தொடர்புகளுடனாக சர்வதேச தொழில், உற்பத்தித்துறைகளுக்கு இட்டுச் செல்லக் கூடிய கல்விச் சீர்திருத்தத்தின் தேவை.

15.. புதிய நூற்றாண்டிற்கான 21ம் நூற்றாண்டிற்காக தேவைகளை நிறைவு செய்ய உதவும் கல்விச் சீர்திருத்தம் தேவை

16. கல்விப்பயனாளிகளின் பல்வகைமை நன்மைகளை நோக்காகக் கொண்ட கல்விச் சீர்திருத்தத்தின் தேவை. கல்விப் பயனாளிகளின் எதிர்பார்க்கைகள் நிறைவு செய்யக் கூடிய கல்வி முறை, கல்விச் செயற்பாடுகளை உள்ளடக்கக்கூடிய கல்விச் சீர்திருத்தம் தேவையாக உள்ளது. அவ்வாறான எதிர்பார்கைகள் பல உள்ளன. அவற்றில் சில

1. கடினம் குறைந்த பரீட்சை திசைமுகம்
2. கடினம் குறைந்த கல்விசார் திசைமுகம்
3.. உடல்நலம் மகிழ்வு உடை மனிதம்
4. உற்பத்தித் தன்மை கொண்ட தனியாள்
5. முன்னேற்ற கரமான கற்போன்
6. மதிப்பும் நம்பிக்கையும் கொண்ட ஆள்
7.. கலாசார அடிப்படையான தூதவல் /பிரதிநிதி
8. பிரதிபலிப்பு கற்போன்
9. நாட்டுப் பற்றுடைய பிரசை
10.. மீளும் தன்மையுடைய தனியாள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் கல்விப் பயனாளிகளால் எதிர்பார்க்கப்படுகின்றன. கல்விச் சீர்திருத்தங்கள் எவையாயினும் அவை மேற்படி விடயங்களை மேற்படி தன்மை உடையவர்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன. இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னரான காலம் தொட்டு இக்காலம் வரை மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களை சீர்தூக்கிப் பார்த்து அறிய முடியும்.

**முடிவுரை**

எமது நாட்டின் கல்வி முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது அவை இலங்கையின் சமூக பொருளாதாரதேவைகளையும் இலங்கை எதிர்நோக்கும் சவால்களுக்கும் எழுவினைகளுக்கும், தடைகளுக்கும் தீர்வு காணக் கூடியவையாக அமைவதாக காணப்படவேண்டும். வளர்ந்த நாடுகளின் கல்வி முறைகளை நுட்பங்களை தீர்வு வழிமுறைகளை அவற்றின் அடிப்படை மாற்றங்களை கண்டு அறிந்து அவற்றை அப்படியே அல்லாமல் தேவையான பொருத்தமான விடயங்களை தெரிவு செய்து சாத்தியமான மாற்றங்களை சீர்படுத்தல்களுடன் இலங்கையின் கல்வி சீர்திருத்தங்களை உள்வாங்குவது வெற்றிகரமான விளைவுகளைத் தரும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்ஸ் வெபரும் கல்வியியற் கல்லூரிகளும்...

திருநானந்தம் ஜெயகாண்டீபன்
உயர்டாதிபதி – நிதி நிர்வாகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

ஜேர்மன் நாட்டு சமூகவியலாளரான Max Webber முதன் முதலாக பணிக்குழுவாட்சிக்கான மாதிரிகையை முன்வைத்ததார். இத்தகைய ஆட்சி முறையானது அரசாங்க கைத்தொழில் சமய மற்றும் விஞ்ஞான நிறுவனங்களில் செயற்படக்கூடிய தொன்றாகும். இத்தகைய நிருவாக அமைப்பானது ஆகக்கூடிய வினைத்திறனைப் பெற்றுக்கொள்ள உதவக்கூடியது என்றும் ஊழியர்கள் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கான பகுத்தறிவின் அடிப்படையிலான ஓர் ஏற்பாடு என்றும் அவர் கருதினார்.

Max Webber எடுத்துக்கூறிய பணிக்குழுவாட்சியில் பல்வேறு அம்சங்கள் சகல நவீன சகல நிறுவனங்களிலும் காணப்படக்கூடியவை அவர் எடுத்துக் கூறிய பண்புகள் பின்வருமாறு

1. தொழிற் பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்
2. ஆட்தொடர்பற்ற நோக்கு
3. அதிகாரம் படிமுறை வரிசையில் அமைந்திருத்தல்
4. விதிகளும் பிரமாணங்களும்
5. வாழ்தொழில் நோக்கு.
6. வினைத்திறன்

தொழிற்பிரிப்பும் சிறப்புத்தேர்ச்சியும் என்பதை நோக்கும்போது பணிக்குழுவாட்சியின் அடிப்படையில் செயற்படும் நிறுவனத்தின் நாளாந்தப் பணிகள் உத்தியோகபூர்வக் கடமைகள் என்ற முறையில் ஊழியர் மத்தியில் பிரித்துவழங்கப்படுவதை இது குறிக்கும். பெரும்பாலான நிறுவனங்களில் காணப்படும் பல்வகைப்பட்ட பணிகள் சிக்கலானவை என்பதால் அவற்றை ஒரு தனியாள் மேற்கொள்ள முடியாது. இதன் காரணமாக நிறுவனத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் முகமாகத் தொழிற்பிரிவு முறை பரிந்துரைக்கப்பட்டது. இதனால் நிறுவனங்கள் குறிப்பான தகுதிகளைக் கொண்டோரை வேலைக்கமர்த்த முடிகின்றது.

ஆட்தொடர்பற்ற நோக்கு என்ற வகையில் பணிக்குழுவாட்சி வழங்குகின்ற வேலைச்சூழலானது நிருவாகி ஊழியரைப்பொறுத்த வரையில் விருப்பு வெறுப்பற்றவராகவும் தனிப்பட்ட உற்சாகம் அல்லது ஆதரவு எதுவுமின்றி செயற்பட வேண்டுமென Max Webber எடுத்துக் கூறினார் நிருவாகிகள் உணர்வுகளின் அடிப்படையின்றி சரியான தரவுகள் தகவல்கள் என்பனவற்றின் அடிப்படையிலேயே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற அம்சமும் வலியுறுத்தப்படுகின்றது. நிருவாகிகளும் இவ்வாறு ஆட்தொடர்பற்ற முறையில் பணியாற்றும் போது யாவரும் சமமாக நடாத்தப்பட வாய்ப்பு ஏற்படுவதோடு தீர்மானங்கள் பகுத்தறிவின் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படவேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது.

படிமுறை வரிசையிலான அதிகாரம் அமைந்திருத்தல் என்ற பண்பின் அடிப்படையில் ஒவ்வொரு கீழ்மட்ட பதவியும் மேல்மட்டப் பதவியாளரால் கட்டுப்படுத்தப்பட்டு மேற்பார்வைக்கு உள்ளாகின்றது. காலம், சக்தி, அறிவு என்பனவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை காரணமாக பிரதம நிருவாகியானவர் ஒருசில கீழ்நிலை நிருவாகிகளையே மேற்பார்வை செய்ய முடியும் இவர்கள் தமக்கு அடுத்து கீழ் நிலையில் உள்ள பிற அதிகாரிகளை அல்லது ஊழியர்களை மேற்பார்வை செய்வர் இவ்வாறு ஒரு மேலதிகாரி சிலரை மட்டுமே மேற்பார்வை செய்ய முடியும். இதன்படி மூன்று தொடக்கம் பன்னிரண்டு வரையான நபர்களையே இவ்வாறு கட்டுப்படுத்த முடியும். இதன் விளைவாக நிறுவனம் பிரமிட் போன்ற அமைப்பினைக் கொண்டதாக வினங்குகின்றது. ஆக உயர் மட்டத்தில் இருப்பவரிடம் முழு அதிகாரமும் குவிக்கப்பட்டாலும் அதிகாரமானது அவ்வுயர் மட்டத்தில் இருந்து கீழ் மட்டங்களுக்கு கட்டங் கட்டமாகப் பரந்து செல்கின்றது.

இவ்வாறான பணிக்குழுவாட்சிப்பண்பு தேசிய கல்விக் கல்லூரிகளின் ஒழுங்கமைப்பு அட்டவணையில் தரப்படுகின்றது உதாரணமாக பீடாதிபதி, உபபீடாதிபதிகள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், பதிவாளர், கல்விசாரா ஊழியர்கள். எனப்பலரும் அட்டவணையில் காட்டப்படுகின்றனர். நவீன நிறுவனங்களில் எதுவித விதி விலக்குமின்றி உயர்மட்ட நிருவாகிகள் முதல் கீழ்மட்ட ஊழியர்கள் வரையிலான ஒரு முறையான ஒழுங்கமைப்பு திட்ட வட்டமாக வடிவமைக்கப்படுவதுண்டு. இதனால் நிறுவனத்தின் பல்வேறு பணிகளைச் செயற்படுத்த தேவையான ஒரு கட்டளை முறைமை உருவாக்கப்படுவது இலகுவாகின்றது. இவ்வாறான ஏற்பாட்டின் பயன்களாவன.

ஒரு தனி நிர்வாகி குறிப்பிட்ட ஒரு நோக்கினை அடைய பிறருடன் கலந்தரையாடலுமின்றி அதற்கான வளங்களின் மீது கட்டுப்பாட்டைச் செலுத்த முடியும் துரிதமாகத் தீர்மானங்களை மேற் கொள்ள முடியும் பொதுமக்களைப் பெறுத்தவரையில் இது ஒரு திருப்தி கரமான எற்பாடு அவர்கள் வழிமுறைகளைப்பறிறிச் சிந்திப்பவர்கள் அன்று பெறுபேறுகளையே கருத்தில் கொள்பவர்கள் என்பதால் இந்த ஏற்பாடு பயனுடையது. குறிக்கோள்கள் பற்றிய புரிந்துணர்வு ஊழியர்கள் மத்தியில் அதிகரிக்கவும் அவர்களது முயற்சியும் விசுவாசமும் மேம்பட வாய்ப்புண்டு.

Max Webber இன் கருத்துப்படி ஒவ்வொரு பணிக்குழுவாட்சி முறைமையிலும் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட விதிகளும் பிரமாணங்களும் இருக்கும் இந்த விதிகள் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதற்கான சட்ட விளக்கங்களும் உருவாக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பதவி நிலைக்குமுரிய உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியதாக இவ்விதிகள் அமையும் அத்துடன் பணிக்குழுவாட்சி அமைப்பின் செயற்பாடுகளுக்கிடையே இயைபாக்கத்தை ஏற்படுத்தவும் இவ்விதிகள் உதவும் ஊழியர்கள் மாறிச்சென்றாலும் நிறுவனத்தின் பணிகளில் தொடர்ச்சியைக் காணவும் ஊழியர்களின் பணிகளில் ஒருமைப்பாடு ஸ்திரத்தன்மை என்பவற்றை உறுதி செய்யவும் விதிகளும் பிரமாணங்களும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்தொழில் நோக்கு என்ற அடிப்படையில் பணிக்குழுவாட்சியைக் கொண்டுள்ள நிறுவனங்களில் கல்வித்தகுதிகளின் அடிப்படையிலேயே தொழில்வழங்கப்படுவதன் காரணமாக ஊழியர் தமது பணியை வாழ்தொழிலாகக் கருதுகின்றனர். இவ்வாறான வாழ்தொழில் நோக்குக் காணப்படும் பொழுது நிறுவனங்களில் சேவைமூப்பு, வேலை அடைவு சித்திகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பதவிஉயர்வு ஏற்பாடு காணப்படும் என்றும் அவ்வாறான பதவி உயர்வானது உயரதிகாரிகளினால் தீர்மானிக்கப்படும் என்றும் ஆயஒ றுநடிநச எடுத்துக் கூறினார். விசேட திறன்களைக் கொண்ட தனியாட்கள் நினைத்த மாத்திரத்தில் பதவியில் இருந்து விலக்கப்படுதல் பதவிஉயர்வு மறுப்பு என்பவற்றை பொறுத்தவரையில் பாதுகாக்கப்படல் வேண்டும். மேலதிகாரிகள் பக்கஞ்சாராது விதி முறைகளுக்கு அமையத் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

Max Webberஇன் கருத்துப்படி பணிக்குழுவாட்சியானது பகுத்தறிவுப் பாங்கான தீர்மானம் மேற் கொள்ளும் செயற்பாட்டுக்கும் நிர்வாக வினைத்திறனுக்கும் உதவும். அனுபவத்தின்படி சரியான பணிக்குழுவாட்சி அமைப்பாளது மிக உயர்ந்த அளவிலான வினைத்திறனைப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றலுடையது என Max Webber தெரிவித்ததார்.

**தொழிற் பிரிப்பும் சிறப்புத்தேர்ச்சியும்**

இங்கு பிரதானமாக பணியாளர்களின் தன்மைக்கு ஏற்ப ஆசிரிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் நேரடியாக பங்காற்றுவோர் கல்விசாரா ஊழியர்கள் எனவும் ஏனையோர் கல்வி சாரா ஊழியர்கள் எனவும் வகுதியாக்கப்பட்டுள்ளனர். கல்வி சார் ஊழியர்கள் மேற்பார்வை மற்றும் அதிகாரங்கள் பொறுப்பக்களின் அடிப்படையில் உயர்மட்ட அதிகாரங்களைக் கொண்ட பீடாதிபதி அதற்குக் கீழே கல்வியும் தரமேம்பாடும், நிதி நிர்வாகம். தொடருறுகல்வி என்ற துறைகளிற்காக ஒதுக்கப்பட்ட பணிகளை ஆற்றும் மூன்று உபபீடாதிபதிகள் உள்ளனர்.

பீடாதிபதி கல்வியியற் கல்லூரியின் சகல செயற்பாடுகளுக்கும் வகைகூற வேண்டியவராக உள்ள அதேவேளை கல்வியியற் கல்லூரிகளின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அவர்களது ஆளுமைகளில் தங்கியுள்ளதாக காணப்படுகின்றது. இன்றைய கல்விக்கல்லூரிகள் வளர்ச்சிப்போக்கினை காட்டுகின்றனவா அல்லது வீழ்ச்சிப்போக்கில் உள்ளனவா என்பது வாதப்பிரதி வாதங்களுக்கு உட்படுவதாகும்.

உபபீடாதிபதிகளைப் பொறுத்தவரையில் கல்வியும் தரமேம்பாடும் எனும் தலைப்பின் கீழான உபபீடாதிபதி ஆசிரியமாணவர்களின் கல்வியின் உயர் தரத்தைப் பேணுவதற்கான உயர் பொறுப்பினையும் இதற்காக ஏனைய கல்விசார் பணியாளர்களின் உயர் ஒத்துழைப்பைப் பெறவேண்டியவராக உள்ளார். நடைமுறையில் மாணவர் அனுமதி தொடக்கம் தொடர்ச்சியான கல்விச் செயற்பாடுகள், கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகள், கல்விசார் பணியாளர்களின் விடுமுறைகள், அவர்களின் செயலாற்றுகைத் தரங்கணிப்பு, இன்னும் ஆசிரியமாணவர்கள் பயிற்சியை முடித்து கல்லூரியை விட்டு வெளியேறும் வரையிலான பெருமளவிலான பணிகள் இவர் முன்னே குவிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. பணிப்பகிர்வு பொருத்தமாக இல்லையெனின் அல்லது கல்வி சார் பணியாளர்கள் பொருத்தமான ஒத்துழைப்பை வழங்கவில்லையெனின் இவரது பணிகளை செவ்வனே நிறைவேற்றுதல் பாரிய சவால்களுக்குட்பட்டதாகும்.

இவரது பணிகள் கல்வியில் தரமேம்பாட்டினை மையப்படுத்தியதாக அமைய வேண்டின் இணைப்பாளரின் உதவியுடன் தொடர்ச்சியான கல்வி தரமேம்பாட்டின் தரவு சேகரிப்புக்களும் பிரதிபலிப்புக்களும் மீளாய்வுகளும் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய தேவை எழுகின்றது.

அவ்வாறே உப பிடாதிபதி நிதி நிர்வாகம் கல்லூரியின் நிதிமுகாமையை சரியான வகையில் வழிப்படுத்துபவராக நோக்கப்படுகின்றார் அது மட்டுமல்லாது மாணவர்களின் காலைச் செயற்பாடுகள் , இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் முதற்கொண்டு வசதிகள் விடுதி ஒழுங்குகள் ,கல்விசாராப்பணியாளர்கள் தொடர்பான சகல விடயங்களையும் ஒழுங்குபடுத்தும் பாரிய சவால் மிக்க பணியை ஆற்ற வேண்டிய நிலையில் உள்ளார்.

உபபீடாதிபதி தொடருறு கல்வி ஆசிரிய மாணவர்களின் கட்டுறு பயில்வை ஒழங்கு படுத்தும் பணியை மேற்கொள்ளவேண்டியுள்ளதோடு கல்லூரியுடன் இணைந்துள்ள பாடசாலைகளுடன் சிறப்பான தொடப்பினைபேணி ஆசிரிய மாணவர்களின் வாண்மைவிருத்தியில் பாடசாலைகளின் விளைதிறன் மற்றும் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைப்பாட்டினைக் கொண்டுள்ளார்.

இவர்களுக்கு கீழ் முறையே மூன்று இணைப்பாளர்கள் பணியாற்றுகின்றனர் அவர்களும் கல்வியும் தரமேம்பாடும், நிர்வாகம். தொடருறுகல்வி போன்ற துறைகளில் உபபீடாதிகன் மற்றும் விரிவரையாளர்களின் பணிகளை இணைப்பவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுக்கு கீழே விரிவுரையாளர்கள் பாடரீதியாக காணப்படுகின்றனர். பொதுவாக தொழில்சார் பாடங்கள், விசேட பாடங்கள். பொதுப்பாடங்கள் என்ற பிரிவுகளில் சிறப்புத்தேர்சசி கொண்ட விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கொண்டுள்ள சிறப்புத் தகுதிகளின் அடிப்படையில் குறிப்பிட்ட பாடங்களைக் கற்பிக்கின்றார்கள்.

கல்விசாரா ஊழியர்கள் பதிவாளரினதும் நிர்வாகத்திற்கு பொறுப்பான உபபீடாதிபதியினதும் அதிகாரத்தின் கீழ் பல்வேறு பணிகளுக்காகவும் தொழிற்பிரிப்புச் செய்யப்பட்டுள்ளனர். நூலகர். அலுவலக லிகிதர்கள். சுத்திகரிப்புத் தெழிலாளர்கள். காவலாளிகள் சமையற்பணியாளர்கள். விடுதி மேற்பார்வையாளர்கள். என்ற பல்வேறு பணிகளுக்காகவும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றுகின்றனர். அவர்கள் தத்தமது பணிகளில் தொடர்ந்து பணியாற்றுவதால் அவற்றில் சிறப்புத்தேர்ச்சி பெற்றும் காணப்படுகின்றர்கள். இங்கும் மேலிருந்து கீழான அதிகாரப் பரவலாக்கம் காணப்படுகின்றது. கூம்பு வடிவிலான பணிக்குழுவாட்சி நிலமையும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான ஒழுங்கு முறையான வேலைப்பட்டியல் ஒவ்வொரு பணிக்கும் சுற்று நிருபங்களினூடாக நிச்சயிக்கப்பட்டு காணப்படுவதனாலும் தரங்கணிப்பு நடைமுறை கைக்கொள்ளப்படுவதனாலும் ஒவ்வொரு ஊழியரும் தத்தமது பணிகளை வருடத் தொடக்கத்திலேயே நிறுவனத் தலைவரடன் ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். இதனால் பணிகளுக்கிடையே மேற்பொருந்துகை காணப்படுவதில்லை. இதனால் சிறப்பான தொழிற்பிரிப்பு நிலமை காணப்படகின்றது.

**ஆட்தொடர்பற்ற நோக்கு**

இங்கு ஆட்தொடர்பற்ற நோக்கு என்ற வகையில் பணிக்குழுவாட்சி வழங்குகின்ற வேலைச்சூழலானது நிருவாகி ஊழியரைப்பொறுத்த வரையில் விருப்பு வெறுப்பற்றவராகவும் தனிப்பட்ட உற்சாகம் அல்லது ஆதரவு எதுவுமின்றி செயற்பட வேண்டுமென Max Webber எடுத்துக் கூறினாலும் அவ்வாறான ஆட்தொடர்பற்ற நோக்கு நிலமையை இங்கு குறைவாகவே நடைமுறைப்படுத்தமுடிகின்றது நிருவாகிகள் உணர்வுகளின் அடிப்படையின்றி சரியான தரவுகள் தகவல்கள் என்பனவற்றின் அடிப்படையிலேயே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற அம்சமும் வலியுறுத்தப்படுகின்றது. நிருவாகிகளும் இவ்வாறு ஆட்தொடர்பற்ற முறையில் பணியாற்றும் போது யாவரும் சமமாக நடாத்தப்பட வாய்ப்பு ஏற்படுவதோடு தீர்மானங்கள் பகுத்தறிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது.

பீடாதிபதி, உபபீடாதிபதிகள் தமது பணிகளை உணர்வுகளின் அடிப்படையின்றி சரியான தரவுகள் தகவல்கள் என்பனவற்றின் அடிப்படையிலேயே தீர்மானங்களை மேற்கொள்ளுகின்றனர். அவர்கள் தமக்கு கிழ் பணிபுரியும் ஊழியர்களை உற்சாகப்படுத்தவதிலும் ஆதரவு வழங்குவதிலும் பின்னிற்பதில்லை நூலகர். அலுவலக லிகிதர்கள். சுத்திகரிப்புத் தெழிலாளர்கள். காவலாளிகள் சமையற்பணியாளர்கள். விடுதி மேற்பார்வையாளர்கள். ஏன்ற பல்வேறு பணிகளுக்காகவும் காணப்படும் பணியாளர்கள் சமமாக நடாத்தப்படுகின்றனர்.


பீடாதிபதியினாலும் உபபிடாதிபதிகளினாலும் விரிவுரையாளர்களும் ஆரிசிர மாணவர்களும் சமமாக நடாத்தப்படுகின்றனர். அவர்கய் எந்த வகையான பேதங்களுக்கும் உட்படுத்தப்படுவதில்லை.

**அதிகாரம் படிமுறை வரிசையில் அமைந்திருத்தல்**

பணிக்குழுவாட்சியின் பண்புக்கமைய பீடாதிபதி உயர் அதிகாரங்களைக் கொண்ட அதிகாரியாகக் காணப்படுகின்றார். அவரது பணிகள் முறையான சுற்று நிருபங்களினூடாக ஏனைய கீழ்மட்ட நிருவாகிகளுக்கு பரவலாக்கம் செய்யப்பட்டு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேறகாடடபபடடவகையால அதகாரபபரவலாககம படிமுறை வரைசையில் காணப்படுகின்றது.

**விதிகளும் பிரமாணங்களும்**

இங்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட விதிகளும் பிரமாணங்களும் காணப்படுகின்றது இந்த விதிகள் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதற்கான சட்ட விளக்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு பதவி நிலைக்குமுரிய உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியதாக இவ்விதிகள் அமைந்துள்ளன. அத்துடன் பணிக்குழுவாட்சி அமைப்பின் செயற்பாடுகளுக்கிடையே இயைபாக்கத்தை ஏற்படுத்தவும் இவ்விதிகள் உதவுகின்றன ஊழியர்கள் மாறிச்சென்றாலும் நிறுவனத்தின் பணிகளில் தொடர்ச்சியைக் காணவும் ஊழியர்களின் பணிகளில் ஒருமைப்பாடு ஸ்திரத்தன்மை என்பவற்றை உறுதி செய்யவும் விதிகளும் பிரமாணங்களும் உதவுகின்றன.

**வாழ்தொழில் நோக்கு.**

தேசிய கல்விக் கல்லூரிகளில் கல்வித்தகுதிகளின் அடிப்படையிலேயே தொழில்வழங்கப்படுவதன் காரணமாக ஊழியர் தமது பணியை வாழ்தொழிலாகக் கருதுகின்றனர். இவ்வாறான வாழ்தொழில் நோக்குக் காணப்படும் பொழுது தேசிய கல்விக் கல்லூரிகளில் சேவைமூப்பு , வேலை அடைவு சித்திகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பாவிஉயர்வு ஏற்பாடு காணப்படுகின்றது அவ்வாறான பதவி உயர்வானது உயரதிகாரிகளினால் தீர்மானிக்கப்படுகின்றது விசேட திறன்களைக் கொண்ட தனியாட்கள் நினைத்த மாத்திரத்தில் பதவியில் இருந்து விலக்கப்படுதல் பதவிஉயர்வு மறுப்பு என்பவற்றை பொறுத்தவரையில் பாதுகாக்கப்படும் நிலமையும் காணப்படுகின்றது மேலதிகாரிகள் பக்கஞ்சாராது விதி முறைகளுக்கு அமையத் தீர்மானங்களை மேற்கொள்ளும் தன்மை இதனால் ஏற்படுகின்றது. இவ்வாறான தன்மைகளின் காரணமாக தெசிய கல்விக் கல்லூரிகளில் வினைத்திறன் மிக்க செயற்பாட்டு நிலமைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

**உசாவுகை**


1. Hanson.M.E,(1979) Educational administration and organizational behavior ,Allyn bacon,InC.Boston,London
2. சந்திரசேகரன்.சோ,கருணாநிதி.மா,(2008) முகாமைத்துவக் கொள்கைகள், சேமமடு பதிப்பகம். கொழும்பு 11
3. தேசிய கல்விக் கல்லூரிகள் சுற்றுநிருபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசிரிய மாணவர்கள் கற்பதற்கு பயன்படுத்தும் முறைகள்

சதாசிவம் பவானந்தன் (பீடாதிபதி),
தர்காநகர்,
தேசிய கல்வியியற் கல்லூரி

அரச பாடசாலைகளில் கற்பித்தற் தொழிலைப் புரிவதற்கான பயிற்சி, பயில்வு ஒரு முறைசார்ந்த அமைப்பினூடாக பெற்றுக்கொள்ள, தகுதி அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்ட அணியினரே ஆசிரிய மாணவர்கள் ஆவர்.

உடலாலும், உள்ளத்தாலும், முதிர்ச்சியாலும், சுய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு செயற்படும் ஆற்றல், திறன், கலாசார தனித்துவம் மிக்கவர்களாகவும் உயர்கல்வி பெறும் பருவத்தினராகவும், சுதந்திரத்தை விரும்புவர்களாகவும், ஆக்கத்திறன் வெளிப்பாடு கொண்டவர்களாகவும், தர்க்கிக்க கூடியவர்களாகவும் இந்த ஆசிரிய மாணவர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

GEOFFEY SQUIRES (ஜொவ்பிஸ் கியூரஸ்) என்பவர் (1993) இப்பருவ வயதினரைப் பற்றிக் கூறுகையில் சமவயதுக் குழு உறுப்பினராக இருந்து அனுபவம், செயற்றிறன் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பருவ காலத்தினர் என்றும், இவர்கள் தனித்துவ வாழ்க்கைப் பாணி மிக்கவர்களாகவும் காணப்படுவர் என்றும் அறிவு, ஆற்றல், சுயவெளிப்பாடு என்பவற்றை உணரக்கூடியவர்களாக உள்ளவர்கள் என்றும் விளக்குகிறார். இவரது கருத்தின் அடிப்படையில் ஆசிரியர் மாணவர்களின் வளர்ச்சி வேகத்தினை பின்வரும் வரைபு மூலம் விளங்கிக் கொள்ளலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பருவ வயதினரை பற்றி Melcolm Knowles (மக்லம் நோலஸ்) என்பவர் சுய எண்ணக்கரு விருத்தியும் சுயமாக தன்னை வழிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களாகக் காணப்படுவர் என்றும் அனுபவ குவியலும் அதனை கற்பதற்கு வளமாக கொண்டவர்கள் என்றும் கற்பதற்கு ஆயத்தமாக இருப்பவர்கள் சுய அனுபவ கற்றலில் தம்மை ஈடுபடுத்தி தேடி கற்கக் கூடியவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் சமூகப் பிரச்சனைகளில் தங்களை ஈடுபடுத்தி செயற்படுபவர்களாகவும், பிரச்சனைகள் மத்தியில் வாழ்பவர்களாகவும், சுய ஊக்கல் மிக்கவர்களாகவும், ஒழுங்கமைக்ககூடிய வல்லமையுள்ளவர்களாகவும் இவர்கள் உள்ளனர்.

கார்ல் ரோஜர்ஸ் (CARLE ROGERS) இப்பருவ வயதினரைப் பற்றி குறிப்பிடுகையில் மனித தத்துவ உளவியல் நோக்கில் செயற்படுபவர்கள் என்றும், அழுத்தம் இல்லாத சூழ்நிலையில் சுதந்திரமாகக் கற்கும் விருப்பத்தைக் கொண்டவர்கள் என்றும், செயற்பாட்டு கற்றல், பொறுப்பேற்று கற்றல், பங்குபற்றிக் கற்றல் போன்ற பண்புகளைக் கொண்டவர்கள் என்றும் கூறுகிறார். இதன் மூலம் ஆசிரிய மாணவர்கள் தமது கற்றல் செயல்பாடுகளில் மேற்கூறிய பண்புகளை உள்வாங்கி தொடர்புபடுத்தி கற்க முனைவதனைக் காணலாம்.

இந்த வகையில் ஆசிரிய மாணவர்கள் தமது மூன்று வருட கற்கைநெறி காலத்தில் பெற்றுக் கொள்ளும் பயிற்சி அல்லது பயில்வு என்பவற்றை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.




எனவே மேற்கூறப்பட்ட வரைபடத்தின் மூலம் முதல் இரண்டு வருட கல்லூரிக் காலம். விசேட பாடம், தொழில் சார் பாடம், பொதுப்பாடம் என்பவற்றுடன் கற்பித்தல் பயிற்சியையும் உள்ளடக்குகிறது. அடுத்துவரும் ஒரு வருட கட்டுறு பயில்வுக் காலம், செயற்றொடர் ஆய்வு, செயற்றிட்டம் வகுப்பறை கற்பித்தல் என்பவற்றை உள்ளடக்கியது. இங்கு தனியாகவும் கூட்டாகவும் கற்றல் பயிற்சிகளில் ஈடுபடுவதை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பாட அறிவினையும், திறனையும், மனப்பாங்கையும், பயிற்சியையும் பெறும் பொருட்டு பின்வரும் முறையினைப் பயன்படுத்தி ஆசிரிய மாணவர்கள் கற்பதனைக் காணலாம்.

- ஒப்படைகள்
- குழு முறை
- கள முறை

- சுய கற்றல்
- பரிசோதனை முறை
- மனனம் செய்தல் முறை
- செயற்றிட்ட முறை
- கண்டுபிடித்துக் கற்கும் முறை
- பிரச்சினை தீர்க்கும் முறை

போன்றன. ஒப்படை முறை மூலம் கற்பதனை ஆராய்வோமெனில் "ஆசிரியரிடம் எழும் எண்ணத்தின் அளவைவிட கற்க வேண்டும் என்ற ஆர்வம் மாணவரிடம் அதிகமாகத் தோன்றுவதே இக்கற்றல் முறையில் அடிப்படையாகும்" என்பது ஹெலன் பார்க்ஹெர்ஸ்ட் அம்மையாரின் சிந்தனையாகும். இது ஒப்படைக்குரிய தகவல்களைத் தேடிப் பெறுவதன் மூலம் மாணவனின் சிந்தனையைத் தூண்டுவதாகவும் மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளில் ஆசிரியர் மாணவர்கள் ஈடுபட்டு கற்றல் நடைபெறுவதோடு பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய திறன்கள், கண்டறி முறைத்திறன்கள், குழு அங்கத்தவனாக செயற்படும் திறன்களையும் ஆற்றல்களையும் விரித்தியடையச் செய்கின்றது.

ஆசிரியர் மாணவர்கள் கற்பதற்குப் பயன்படுத்தும் குழுமுறை கற்றலானது சுதந்திரமான செயற்பாடுகளுக்கு வழி வகுப்பதோடு கலந்துரையாடி கருத்துக்களை முன்வைத்தல், ஆளுமையை ஏற்படுத்தி உறுதிப்பாடான விடைகளை முன் வைத்தல், குழுக்களுக்கு இடையே கலந்துரையாடலில் ஈடுபடுவதன் மூலம் அறிவு, திறன் விருத்தியை ஏற்படுத்திக் கற்றலில் பங்கு கொள்ளச் செய்தல், தேடலும் முன்அனுபவத்தை புதுப்பித்தல் ஊடாக ஆர்வமுடன் செயற்பட வைத்தல் ஆகிய கற்றல் அனுபவங்களை குழுமுறைக் கற்றலானது விருத்தி செய்கின்றது.

உதாரணமாக :- மாணவர்களை குழுக்களாகப் பிரித்து தலைப்புகளை வழங்கி சுயமான தேடலுக்கும் சிந்தனைக்கும் வழிவகுத்து கருத்துப் பரிவர்த்தனை செய்து தெளிவு பெற வழிவகுத்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கள முறையின் மூலம் கற்பதனால் பல்வேறுபட்ட பாடங்களுடன் தொடர்புடைய விடயங்களை நேரடியாக அவதானிக்கலாம், கூடுதலான விளக்கத்தினை பெறலாம், மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளின் மூலம் கற்க வாய்ப்பளிப்பதோடு அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியான விருத்தியையும் இக்கற்றல் முறை மூலம் ஏற்படுவதைக் காணலாம்.

உதாரணமாக :- வரலாறு, சமூகக் கல்வி போன்ற பாடத்துடன் தொடர்புடைய நிலவுறுப்புகள் புராதன நகரங்கள், கட்டிடங்களை பார்வையிட்டு கற்பனை குறிப்பிடலாம்.

அடுத்து சுயகற்றல் முறையினை நோக்கினால் கற்ற விடயங்களை ஓய்வு நேரங்களிலும் கற்பித்தலுக்கு புறம்பான வேலைகளிலும் மீட்டல் செய்து கொள்ளலாம். மற்றும் நூலகம், விடுதி, வகுப்பறை, கணினி ஆகியவற்றைப் பயன்படுத்தி சுயகற்றலில் ஈடுபடும் போது தன்னம்பிக்கை, பாட விடயங்களை மனதில் நிலை நிறுத்திக் கொள்ளல், மனனம் செய்தல், ஆய்வுகள் ஒப்படைகள் தயாரித்தல் போன்றவற்றை விருத்தி செய்து கொள்ள சுயகற்றல் முறை உதவுகிறது.

உதாரணமாக :- பரீட்சைக்கு முன் ஆயத்தம் செய்தல், கற்பிக்கப்பட்ட விடயங்களை மீட்டல், ஓய்வான நேரங்களில் கணினியைப் பயன்படுத்துதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பரிசோதனை முறை ஆசிரிய மாணவர்கள் கற்பதற்கு பயன்படுத்தும் முறைகளில் ஒன்றாகும். இதன் மூலம் விஞ்ஞானம், விவசாயம், சித்திரம் போன்ற பாடநெறி இம்முறை கற்றலுக்கு பெரிதும் உதவுவதைக் காணலாம் பாட அறிவின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களைக் கொண்டு ஆய்வுக்கூடம் வெளிக்களச் செய்முறை, பொருத்தமான கருவிகளையும் பொருட்களையும் தகவல்களையும் கொண்டு பரிசோதனை செய்தல் என்பன இதில் அடங்கும். இதன் மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி ஏற்படுவதோடு ஆசிரிய மாணவர்களின் பயிற்சியும் விரிவடையும்.

உதாரணமாக :- பயிர்களுக்கு ஏற்படும் நோய்களை கண்டுபிடித்தல், இரசாயன பதார்த்தங்களை சேர்க்கையால் உருவாகும் பக்க விளைவுகளை அறிதல்.

அடுத்து ஆசிரிய மாணவர்கள் கற்கும் முறைகளில் மனனம் செய்து கற்கும் முறையில் நோக்கின் கோட்பாடுகள், கொள்கைகள், வரைவிலக்கணங்கள், பாடல்கள் போன்றவற்றை மனனம் செய்து கற்பதன் மூலம் ஞாபக சக்தியை அதிகரிக்கின்றது. பொருத்தமான இடங்களில் கோட்பாடுகள் கொள்கைகளை எடுத்துக் கூறவும் முடிகிறது.

உதாரணமாக :- தமிழ் இலக்கிய பாடல் வரிகளை மனனம் செய்தலைக் குறிப்பிடலாம்.

ஆசிரிய மாணவர்கள் கற்பதற்கு பயன்படுத்தும் முறைகளில் கண்டுபிடித்து கற்றல் முறையானது குறியீடுகள், சமன்பாடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விடயங்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் கற்றல் நடைபெறுவதை உறுதிப்படுத்தி நிற்கிறது. பொருட்கள், கருவிகள், நோய்கள், மருந்துகள் போன்றவற்றை கண்டுபிடிப்பதன் மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சி அடைந்து சுய ஆற்றல் மேம்படுகிறது.

உதாரணமாக :- கணினி மூலம் புதிய விடயங்களை கண்டுபிடித்து கற்றல் இயற்கையில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி புதிய உற்பத்திகளை ஏற்படுத்தல்.

அடுத்து பிரச்சனை தீர்க்கும் முறையினை நோக்கின் ஆசிரிய மாணவர்கள் கற்றலின் போது பிரச்சினை ஒன்றை முன்வைத்து பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதற்குரிய அல்லது அதனை விடுவிப்பதற்குரிய வழிவகைகளை இது சிந்திக்க வைக்கிறது. தர்க்கிக்கக் கூடிய திறனையும், பிரச்சனைகளில் இருந்து விடுவித்துக் கொள்ளும் ஆற்றலையும், சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து அவற்றை எதிர்கொண்டு வாழ்வதற்கான ஆற்றலையும் இம்முறை செய்கின்றது.

உதாரணமாக :- பாடம் அல்லது மாணவருடன் தொடர்புடைய பிரச்சினை ஒன்றினை இனங்கண்டு கருதுகோள்களை உருவாக்கி அவற்றினை வாய்ப்புப் பார்ப்பதன் மூலம் பிரச்சினைக்கான தீர்வை காணுதல் என்பதனைக் குறிப்பிடலாம்.

எனவே ஆசிரிய மாணவர்களின் அறிவையும், திறனையும், மனப்பாங்கினையும் விருத்தி செய்து விசேட பொதுப்பாடங்களையும், தொழிற்சார் பாடங்களையும், கற்பித்தல் பயிற்சி செயற்றொடர் ஆய்வு செயல்திட்டம் போன்றவற்றையும் கற்பதற்கு மேற்கூறப்பட்ட முறைகள் ஆசிரிய மாணவர்களின் கற்றலுக்கு உதவுவதோடு மட்டுமன்றி, ஆசிரிய வாண்மையினையும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டையும் வினைத்திறன் உள்ளதாக ஆக்குவதற்கு இவை பொருத்தமானவை எனக் கூறலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விம்பங்கள்

கலாநிதி குணரத்தினம் கமலகுமார்,
பீடாதிபதி,
வவுனியா தே. க. க

இவ் உலகில் வாழும் உயிர்களில் முதன்மையானதும் மேன்மையாகவும் வாழத்தக்கவன் மனிதன். எனவே இவ் உலகில் உள்ள எல்லா உயிர்களுடனும் இணைந்து வாழ்வதற்கான பக்குவத்தையும், பகுத்தறிவினையும் கொண்டவனாக மனிதன் வாழ்கிறான். இதனாலேயே அவன் வாழ்வதற்காக பலகோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் கட்டமைப்புக்கள் உருவாகியிருந்தன. இவற்றுள் முக்கியம் பெறுபவை கடவுள் கோட்பாடு, இயற்கை கேட்பாடு, வாழ்வியல் கோட்பாடு, மற்றும் மனிதநேயக் கோட்பாடு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இக் கோட்பாடுகள் யாவும் இப் பூவுலகில் மனிதனுடன் ஏனைய அனைத்து உயிரினமும் வாழ்வதற்காகவே தோற்றம் பெற்றன. இவற்றுள் முக்கியம் பெறுபவையாக ஒவ்வொரு உயிரும் பிறந்து அவை இறக்கும் வரையும் தனக்கும் மற்றையவற்றுக்கும் பயனுள்ளவகையில் வாழ்வதற்காகவே சட்டதிட்டங்கள் உருவாகியிருந்தன. அதனூடாக தானும் தான் சார்ந்த சூழலிலுள்ள உயிரியும் வாழ்வதற்கான கட்டமைப்புக்கள் உருவாகியிருந்தன. ஆயினும் தொழில்நுட்பவளர்ச்சி இதை மேம்படுத்துவதாகவும் சிலசந்தர்ப்பங்களில் இடர்பாடுகளையும் ஏற்படுத்திவிடுவதாக அமைந்துவிடுகின்றன. உலகில் எவ்வகையான மாற்றங்கள் வந்தபோதும் குடும்பம் என்ற சிறு அலகில் பாரியமாற்றங்கள் ஏற்படவில்லை. அதுமட்டுமின்றி சமூகவெற்றிடத்தை அதன்மூலமே நிரப்பமுடியும் என்பதையும் விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

“அறம் செய்துவாழ்வதேவாழ்க்கை மற்றெல்லாம்
வெறும் பேழைதாழ்க்கொள் இயந்து” (திருக்குறள்)

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு, மற்றவர்களின் வாழ்விற்கும் வழிவகை செய்யும் வகையில் வாழ்தல் வேண்டும் என்பதுடன் அதில் “அறம்” சாராத எந்த முயற்சியும் முதலில் இன்பமாக இருந்தாலும் அவை நிலைத்து நீடிக்கமுடியாது. இவை கலியுககலமாக இருப்பது அதன் வெளிப்பாட்டை விரைவாககாட்டும். தம்முடைய சொந்த நலன்களைமட்டும் பேணிநிறைவு செய்துவருகின்ற இவ் வாழ்க்கையானது உள்ளே எதும் இல்லாத பெட்டியை பூட்டிவைப்பதற்குச் சமமாகும்.

இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு அதற்கான கடமைப் பொறுப்புக்களை முறையாக ஆற்ற வேண்டும் காலம் கடந்தபின்னர் அவைபற்றிச் சிந்திப்பதிலே கவலைப்படுவதிலோ எவ்விதபயனுமில்லை. ஒவ்வொரு வாய்ப்பும் இயற்கை எமக்களிக்கும் சந்தர்ப்பங்களாகும். அவை முறைப்படுத்தப்படாமல் செயற்படுத்துவதோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியமாக செயற்படுத்துவதோ அவரவரின் உணர்வு, உளம் சார்ந்ததாக இருக்கும். கடவுளின் படைப்பில் விந்தைகளோ ஆயிரம். ஆயினும் மனிதன் அதை விஞ்சுவதுபோன்று நடந்து கொண்டாலும் அதற்கு ஓர் எல்லை உள்ளது என்பதை மறந்துவிடுகின்றான். அண்மையில் ஏற்பட்ட கோவிட்- 19 கூட ஒரு கட்டத்தில் வீழ்ச்சிநிலைக்குசென்றுவிடும். அதற்கு மருந்துகண்டுபிடித்தால் என்ன கண்டுபிடிக்காவிட்டால் என்ன மாற்றம் வருவது இயல்பனது. (இயற்கையின் தடைகள்)

**மனிதவிழுமியங்கள்**

சமூகக் கூட்டம் ஒன்று நீண்டகாலம் தனது இனம் நிலைத்துநிற்கப் பின்பற்றி அல்லது பேணிவருகின்ற பல்துறைசார் செயற்பாடுகள், மதிப்பளித்தல் மற்றும் அடுத்த சந்ததிக்கா கடத்துகின்ற விடங்களாகும். இவை வாழ்வியல், அரசியல், சமூகச் சூழல் மற்றும் விழாக்கள், பழக்கவழக்கங்கள் என்றவாறு வியாபித்துச் செல்கின்றன. இவையும் அறத்தின் பால் வாழ்வதற்கு வழிசமைக்கின்றன. கீழைத்தேய மனிதவிழுமிய செயன்முறையில் வரலாற்றுரீதியாக நோக்குகைகளில் ஆரியரின் வருகையின் பின்னரே அதிகளவிலான சம்பிரதாயவிழாக்கள் தோற்றம் பெற்றதாக குறிப்பிடப்படுகின்றது. இவர்களே சமூக இணைப்பை வலுப்படுத்தும் வகையில் விழாக்கள், கொண்டாட்டங்கள் உருவாக்கப்பட்டு இருந்தன. இவை இன்றைய சூழலில் தொழில் நுட்பம் மற்றும் அறிவுப் பிரவாகத்தால் அவற்றை மறுதலிப்பது அல்லது மீறுவது இயல்பாகிச் செல்கின்றது. மேலும் மேற்குலக விழுமியங்களும் தற்போது இதனுள் நுழைந்துவருவதையும் தவிர்க்கமுடியாதுள்ளது.

**மனிதமரபு**

உலகில் வாழும் உயிரியில் மேன்மையான உயிரி மனிதன் என்பதைமறுக்க இயலாது. அத்துடன் ஏனைய உயிரினமும் வாழ்வதற்கு மனிதன் வாய்ப்பளிக்க வேண்டும். அதுவும் நல்லறமே. கடவுள் ஒவ்வொரு உயிரியையும் படைக்கும்போது அவை ஒவ்வொன்றுக்கும் ஏதாவது ஒரு சிறப்பை அல்லது இயலுமையை வழங்கியுள்ளார். இந்தவகையில் மூளை மற்றும் கைகளை சிறப்பாக வழங்கியுள்ளமையே அவன் ஏனைய உயிர்களிலும் பார்க்க உயர்ந்தவனாக புதியசாதனை, தேடல்களை நோக்கியவனாக காணப்படுகின்றான். ஆனால் அவற்றை சகமனிதனுக்கும் மற்றும் உலகவாழ் ஏனைய உயிரியட்கும் எதிராக பயன்படுத்த முனைவதுதான் உலக அழிவிற்கு வழியமைத்து விடுகின்றது. மனிதனைத் தவிர ஏனைய எந்த உயிரியும் தனக்கு சொத்து சேர்ப்பது கிடையாது. அதைப் போலவே ஒரு உயிரி இன்னொரு உயிரியை நம்பியும் வாழமாட்டாது. மனிதனுக்குத் தான் முதியோர் இல்லம் தேவையாக உள்ளது.

**நல்லசிந்தனை**

சிந்தித்து செயலாற்றும் அதிகூடிய வல்லமைகொண்ட உயிரி மனிதன் மட்டுமே என்றால் மிகையாகாது. சிந்தனைகள் நேர் மனப்பாங்குடன் தனக்கும் சமூகத்திற்கும் பயன்தரும் வகையில் அமைவதே நல்ல சிந்தனையாகும். இதையே Win Win கோட்பாடு என்பர். (வெற்றிக் கோட்பாடு) சிறுவயதுமுதலே நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதே மனிதவாழ்வுமேம்பட வாய்ப்பாகும். உலக வாழ்க்கையில் கடவுள் மனிதனுக்கு அளித்த ஒரு சந்தர்ப்பமே வாழ்க்கை. அவற்றை உணர்ந்து, புரிந்துவாழ்வாராயின் இறுதிக் காலத்தில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிறைவை அவனால் அடையமுடியும். வாழ்க்கை கொஞ்சக் காலம் அதில் வாலிபம் கொஞ்சநேரம் எனவே எமக்குகிடைத்தவாய்ப்புக்களை முறையாகப் பயன்படுத்திதானும் தன்சார் சமூகமும் வாழவழிவகுப்பதே நல்வாழ்வாகும்.

**கடமையும் பொறுப்பும்**

சமூகத்தின் பணிகளைக் கடமைஎனவும் அதற்கான அதிகாரம் பொறுப்பாகவும் கொள்ளமுடியும் சமூகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பிரிவினருக்கும் கடமை, பொறுப்புக்கள் காணப்படும் அதை அவர்கள் இரசித்துருசித்து உணர்ந்து செயற்படும்போதே அவை மேன்மைபெறுவதுடன் சமூகத்தாலும் வரவேற்கப்படும். ஆனால் தற்போது கடமைகளை கடமையாகசெய்யவே பெரும்பாலானவர்கள் முயன்றுவருகின்றனர். பொறுப்பும் வெறுப்பாகவே செயற்படுத்தப்படுகின்றது.

தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏமாற்று, நம்பிக்கையின்மை, மோசடி என்பவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவற்றில் உளவியல் ஆதிக்கமும் கணிசமானஅளவு காணப்படுகிண்றன. ஒரு மனிதனை எவ்வவு ஏமாற்றமுடியும் என்பதை அவனிடம் இருந்துபெறும் தரவு, தகவல்கள் ஊடாக அறிந்து ஏமாற்றப்படுகின்றனர். இதனால் பெரும்பாலான ஏமாற்றுகள் வெளிவருவதில்லை. பெரிய உந்தல்களை வழங்கி சிறிய சலுகையொன்றைப் பெற்றுக் கொள்வதைக் குறிப்பிடலாம்.

**முடிவு**

உலகிற்கு வரும்போது எதையும் கொண்டுவராமல் அவை அனைத்தும் இங்கேயே எடுக்கப்பட்டு அனுபவித்துவிட்டு மீண்டும் ஒன்றுமில்லாமல் செல்வதே நியதி. அதுமட்டுமல்ல எம்மால் எதையும் பெறமுடியாது நாம் பெறுவது அனுபவிப்பது அடுத்தவர் கொடுத்ததே. உடல் கொடுத்தவர் தாய் உயிர் கொடுத்தவர் தந்தை கல்விகொடுத்தவர் ஆசிரியர் பொருள் கொடுத்தவர் அடுத்தவர். இறப்பின் போதுஎடுத்துச் செல்பவர்,அடக்கம் செய்பவர் யாரோ? எனவே எல்லாம் அடுத்தவராலேயே நமக்கு கிடைக்கின்றது. எனவே அடுத்தவரை மதிப்போம், கண்ணியப்படுத்துவோம்.

நன்றி,

**உசாவியவை :-**


- சோமசுந்தரம். கு, (1995) மனிதவிழுமியங்கள், சஜி வெளியீடு, கொழும்பு.
- கைலாசபதி. க, (2001), ஈழத்து இலக்கிய முன்னோடிகள், முன்னுரை, குமரன் வெளியீடு, சென்னை.
- கணேசையர். சி, (2006) ஈழநாட்டு தமிழ்புலவர் சரித்திரம், இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களம், முன்னுரை, கொழும்பு.
- Slavin Robert. E, (2010), Educational Psychology (Theory and Practice), tenth edition, Boston Pearson.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் தற்கொலைகளுக்கான காரணங்களும் தீர்வுகளும்

திருமதி.சுகந்தினி அன்ரனி தவச்செல்வம்,
ஆசிரிய கல்வியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உலக சுகாதார அமைப்பின் கணிப்பின் படி ஆண்டுக்கு எட்டு லட்சத்திற்கும் அதிகமானோர் தற்கொலை செய்து கொள்வதுடன், ஒவ்வொரு 40 வினாடிகளுக்கும் ஒருவர் தற்கொலை செய்கிறார் என உலக சுகாதார அமைப்பு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதிலும், பதினைந்து முதல் இருபத்தி ஒன்பது வயதுடையவர்களிடையே இது அதிகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று தற்கொலை என்பது உலகளாவிய பொதுப் பிரச்சினையாகும், இது உளநலத் துறையில் பணிபுரியும் அனைவரும் கவனத்தில் எடுக்க வேண்டியது கட்டாயமாகும். தற்கொலையைத் தடுப்பதற்கும், பொதுமக்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்து வதற்கும், உத்திகளை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை உருவாக்குவது இவர்களின் பொறுப்பாகும். இவர்கள் மட்டுமன்றி விஞ்ஞானத்துறை மற்றும் தொழில் நிறுவனங்கள்,தொடர்பு சாதனங்கள், சமூக, குடும்பங்களுக்கான அமைப்புகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பனவற்றிற்கும் முக்கிய பங்குண்டு.இதனைத் தேசியரீதியில் கவனம் செலுத்த வேண்டியதும் அவசியமாகும். தற்கொலை எண்ணங்களும், நடத்தைகளையும் கொண்டவர்கள் பெரியவர்கள் மட்டுமே என்று பெரும்பாலும் நம்பப்படுகிறது, ஆனால் வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், கொடுமைப்படுத்துதல் புறக்கணிப்பு மற்றும் இணைய அச்சுறுத்தல் ஆகியவற்றின் விளைவாகவும் பல குழந்தைகளும் இளைஞர்களும் இந்த வகையான தற்கொலை நடத்தைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், தற்கொலை நடத்தை என்றால் என்ன? மிகவும் பிரபலமான வரையறை ஒன்றைக் குறிப்பிடலாம். பாதிக்கப்பட்டவரின் நேர்மய அல்லது எதிர்மறையான செயலிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் அனைத்து மரணநிகழ்வுகளுக்கும் இது பொருந்தும்.

**உலக சுகாதார நிறுவன ஆய்வுகள்**

உலக சுகாதார அமைப்பின் ஆய்வுகளின்படி, உலகளாவிய ரீதியில் தற்கொலைக்குரிய புள்ளிவிபரம் பின்வருமாறு காணப்படுகிறது.

- ❖ ஆண்டுக்கு 800,000 க்கும் அதிகமானோர் தற்கொலை செய்து கொள்வதுடன், ஒவ்வொரு 40 வினாடிகளுக்கும் ஒருவர் தற்கொலை செய்கின்றார்.
- ❖ 78% வீதமான தற்கொலைகள் குறைந்த அல்லது நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளிலேயே நடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ சுமார் 0.5% முதல் 1.4% மக்கள் தற்கொலை மூலம் இறக்கிறார்கள். ஓர் ஆண்டிற்கு 100,000 நபர்களில் 12 பேர் இத்தகைய முடிவுக்கு ஆளாகிறார்கள்.
- ❖ உலகில் மூன்றில் இரண்டு தற்கொலைகள் வளர்முக நாடுகளில் ஏற்படுகின்றன.
- ❖ தற்கொலை செய்து கொள்ளும் பெண்களின் எண்ணிக்கையைக் காட்டிலும். ஆண்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.
- ❖ 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து இறப்பது பொதுவாகக் காணப்படுகிறது.
- ❖ சில நாடுகளில் 15 முதல் 30 வயதிற்குட்பட்டவர்களும் இச்செயலில் ஈடுபடுகின்றனர்.
- ❖ ஒவ்வோர் ஆண்டும் 10 முதல் 20 மில்லியனுக்கும் அதிகமான உயிரிழப்புகள் தற்கொலை மூலமாக நிகழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது.
- ❖ தற்கொலைகள் அதிகமாகச் செய்பவர்கள் ஆண்கள்
- ❖ தற்கொலை முயற்சிகளில் அதிகமாக ஈடுபடுபவர்கள் பெண்கள்
- ❖ தற்கொலை செய்து இறப்பவர்களில் பெரும்பாலானோர் 18. 30 வயதினர். அடுத்த கட்டம் 30 - 50
- ❖ இளைஞர்கள் கூடுதலாகத் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.
- ❖ இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் கூடுதலாகத் தற்கொலைகள் நிகழ்கின்றன.
- ❖ நெருக்கீடுகளில் இருந்து தற்காலிகமாக விடுபடுவதற்கு பலர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றார்கள்.

**தீர்மானம் செய்ய முக்கியமாக அறிந்திருக்க வேண்டியவை**

1. எதைக் குறித்துத் தீர்மானம் செய்வது என்று அறிய வேண்டுமென்றால் முன்னிருக்கும் அறைகூவலை அறிய வேண்டும்.
2. மாற்று வழிகளைச் சோதித்து அறிந்து, எது நல்வழி என்று சிந்தித்து செய்ய வேண்டும்.
3. விளைவுகளைச் சீராக்கிப் பார்த்துத் தீர்மானம் செய்ய அறிந்துகொள்ள வேண்டும்.
4. தீர்மானம் செய்தபின் துணிந்து நிறைவேற்ற அர்ப்பணம் தேவை
5 செயற்படுத்திக்கொண்டிருக்கும்போது வருகின்ற வேதனைகளையும், விமர்சனங் களையும், மனதை வருத்துகின்ற சுட்டிக்காட்டுதல்களையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் தேவை.
6. தீர்மானித்துச் செயற்படுத்துவதை நிறைவேற்ற மனஉறுதி தேவை. தீர்மானத்திற்கு "நாம் தானே பொறுப்பு எடுத்திருக்கின்றோம் என்று உணர்ந்தால் நாமே நல்ல தீர்மானத்தை நிறைவேற்றலாம். இதற்கு எவ்லோரக்கும் இன்று உதவிகள் தேவையாகவுள்ளன. ஆதரவு தேவையாகவுள்ளது.
7. தற்கொலை எண்ணத்துடன் உதவி தேடி அலையும்போது உதவிக்கரம் நீட்ட யாராவது இருந்தால் அவர் இறக்க வாய்ப்பில்லை
8. தற்கொலை செய்ய வேண்டும் என்ற உணர்வின் உச்சநிலை மிகச்சொற்ப நேரமே நீடிக்கும். அதைத் தாண்டினால் சரி.
9. ஒரு மனிதன் குடும்பத்துடனும், சமூகத்துடனும் நல்ல உறவை வைத்து வாழ்ந்தால் தற்கொலைக்கு வாய்ப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. குறித்த நெருக்கடி நிலையைப் புரிந்து வெற்றி கொள்ளும் நம்பிக்கை தற்கொலையைத் தவிர்க்கும். நம்பிக்கையைச் சரியாகக் கட்டியெழுப்ப வேண்டும்

11. பிரச்சினையை நெருக்கடியான நிலையை சந்திக்க மாற்று வழிகள் உண்டு என்பதைப் புரிய வைத்தல் உணர்ச்சி வசப்பட்டுத் தீர்மானம் எடுத்தலைத் தவிர்த்தல்.

12. உரிய ஆலோசனை வழிகாட்டல் சேவையை வழங்குதல்.

13. அதிக மனச்சோர்வு ஸ் இருப்பவர்களுக்கு மருத்துவ ஆலோசனையை வழங்குதல்.

14. துன்பம் வாழ்யின் ஒரு பகுதி என்பதை உணர வைத்தல்

சுய புரிந்துணர்வு (Self Understanding), தன்மதிப்பு (Self Esteem) தன்னம்பிக்கை (Self - Confidenence), சுய எண்ணக்கரு (Self Concept) தன்னிறைவு பெறல் (Self - Confidence) சுய இயக்கம் (Self Reation) தற்காப்பு உத்திகள் (Defence Mechanism) என்பவை தொடர்பான அறிவியல் வழிகாட்டலை பாடசாலை மாணவர்களுக்கும் இளைஞர் - யுவதிகளுக்கம் சமூகத்தவர்களுக்கும் வழங்குதல் இன்றைய தேவையாகும். ஆனால் இன்று எமது தமிழ்ப்பகுதிகளில் அதிகமான படித்த இளைஞர் யுவதிகள் கூடுதலாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதற்கு

- தாக்குப்பிடிக்க முடியாத சூழ்நிலையில் இருந்து தப்பிக்கக் கருதுவது விரக்தி, காதல் தோல்வி
- தான் விரும்புபவர்களில் கவனத்தைத் தன்மீது திருப்ப நினைப்பது.
- மற்றொருவருக்காகத் தான் தண்டனை அனுபவித்துக் கொள்ள நினைப்பது.
- தண்டனையில் இருந்து தப்பிக்க நினைப்பது.
- தான் மற்றவருக்குத் துன்பமாக இருப்பதாகக் கருதுவது
- தாங்க முடியாத மாறாத நோயின் வலிகளிலிருந்து தப்பிப்பது.
- தியாகி என்ற பட்டத்தினைப் பெறுவது.
- மற்றவர் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துவது.
- நடைமுறைக்கு ஒத்துவராத கருத்துக்களைக் கொண்டு இருப்பது.
- தற்கொலைகள் அல்லது வன்முறை உள்ள குடும்பப் பின்னணி
- பாலியல் அல்லது உளலரீதியான பாதிப்புககள். கணவல் மனைவி வேறு பாலியல் தொடர்புகள்.
- நெருங்கிய தண்பர் அல்லது குடும்ப உறுப்பினரின் மரணம்
- விவாகரத்து அல்லது பிரிவு உறவு முறிதல்,
- தனிமை.
- படிப்பில் தோல்வியை எதிர் கொள்ளப் போகும் தேர்வுகள், தேர்வு முடிவுகள்
- வேலை இழப்பு
- பணிபுரியுமிடத்தில் பிரச்சனை
- சட்ட நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தற்கொலைகளுக்கான அறிகுறிகள்

- ❖ முக்கிய எச்சரிக்கையாக அடிக்கடித் தற்கொலை பற்றி பேசுவதும் இனிமேல் யாரும் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்பர்.
- ❖ அடுத்து உயிலோ, அல்லது தன்னுடைய பொருட்களை மற்றவர்களுக்குக் கொடுப்பதோ தன்னைச் சார்ந்தவர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்வதோ அல்லது முன்னேற்பாட்டுடன் திடீரென்று வெளியூர் செல்ல ஏற்பாடு செய்வர்.
- ❖ பழக்கம் அல்லது இடமாற்றம் அவர்களுடைய வழக்கமான செயல்களில் மாறுபாடு ஒரு மாதிரியான தோல்வி உணர்வுகளையே அதிகமாக எதிரொலிப்பர்.
- ❖ மன அழுத்தமடைதல் அல்லது பிடிப்பில்லாதிருப்பர்.
- ❖ கவலையற்று நடந்து கொள்ளுவர்.
- ❖ உறவுகளைச் சந்தித்தல் மற்றும் மதிப்பு வாய்ந்த பொருட்களை ஒப்படைப்பர் நடத்தை, மனப்பான்மை, தோற்றத்தில் குறிப்பிடத் தகுந்த மாற்றத்தைக் காட்டுவர்
- ❖ அளவுக்கதிகமாக மது அருந்துதல் அல்லது போதை மருந்து பயன்படுத்துவர். மிகப்பெரிய இழப்பு அல்லது வாழ்க்கை மாற்றத்தால் பாதிக்கப்படுவர்.

### செயற்பாடுகள்

- ❖ அழுதல்,
- ❖ சண்டையிடுதல்.
- ❖ சட்டத்தை மீறுதல்
- ❖ உணர்ச்சி வசப்பட்ட செயல்கள்.
- ❖ தன்னையே காயப்படுத்திக் கொள்ளல்,
- ❖ மரணம் மற்றும் தற்கொலை பற்றி எழுதுதல்.
- ❖ முன்பு தற்கொலைக்கு முயற்சித்திருத்தல்.
- ❖ ஒத்தமையாத மற்றும் அதீத நடத்தைகள்.

### அறிகுறிகள்

- ❖ பலவீனம்.
- ❖ அதிகமாக அல்லது குறைவாக உறங்குவது.
- ❖ பசியின்மை
- ❖ உடல் நிறை கூடுதல் / குறைதல்,
- ❖ சிறு உடல் உபாதைகள் அதிகரித்தல்,
- ❖ பாலுறவு விருப்பத்தில் மாற்றம்.
- ❖ உடல் தோற்றத்தில் திடீர் மாற்றம்.
- ❖ தோற்றத்தைப் பற்றிய அக்கறை இன்மை
- ❖ அறிகை ரீதியான அறிகுறிகள்
- ❖ தற்கொலை எண்ணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தனித்திருத்தல்.
- தன்னம்பிக்கைக் குறைவு.
- விலகல், ஒதுக்கப்பட்டதாக
- நினைத்தல்.
- ஆழ்ந்த கவலை குற்ற உணர்ச்சி.
- குறுகிய வட்டத்தைத் தாண்டிச் சிந்திக்க இயலாமை,
- மனஅழுத்தம்.
- உதவி மற்றும் ஆதரவு கிடைக்காமை பற்றி எண்ணுதல்,
- சுயமதிப்பை இழத்தல்.

தற்கொலைக்கு முயற்சிப்பவர்கள் அனைவரும் அதில் வெற்றி பெறுவதில்லை. ஏனென்றால் பலர், மற்றவர் கவனத்தை ஈர்ப்பதற்கே அவ்வாறு செய்கின்றனர். ஆனால், துர்அதிருஷ்டவசமாக, மூளை பாதிக்கப்படுதல், உறுப்புகள் பாதிக்கப்படுதல் போன்ற துன்பங்களுக்கு ஆளாகின்றனர். ஆராய்ச்சியாளார்களது முடிவுகளின்படி அவர்கள் வாழ்க்கையை எந்த அளவு வெறுக்கிறார்களோ, அதே அளவு இறப்பையும் வெறுக்கிறார்கள், அதனால்தான், தற்கொலை முயற்சியில் இறங்கிய பின் உதவிக்கு மற்றவர்களை அழைப்பதுண்டு, இம்முயற்சியில் ஈடுபட்டுக் காப்பாற்றப்பட்டவர்கள். எப்போதும், இறப்பைப் பற்றியே பேசுகிறார்கள். அவர்களுடைய நினைவு, இறப்புக்கும் வாழ்வுக்கும் இடையிலேயே சுற்றிக் கொண்டிருக்கும். சிலர் தற்கொலை முயற்சியைத் திருப்பு முனை என்று வர்ணிப்பர். ஏனென்றால், அதன் பின்னர் தான் அவர்கள் மற்றவர் கவனத்தைக் கவர்ந்திருப்பர்.

இங்கே மேற்காட்டிய முன்னாயத்த நிலைமைகளை உறவினர்கள் அவதானிக்கு மிடத்துத் தற்கொலையைத் தடுக்கலாம். அனைவரதும் முயற்சிகள் மற்றும் பொதுக் கொள்கைகள் அனைத்தும் இவ்வாறான தற்கொலைகளைத் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

**தற்கொலையைத் தவிர்த்தல்**

தம்முடன் இருக்கின்ற ஒவ்வொருவரதும் செயல்களையும் பேச்சுக்களையும் கவனிக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் எப்படியும் அடுத்தவரது கவனத்தை ஈர்க்க முயற்சிப்பார். எனவே, அடிக்கடி அவர்களைக் கவனித்து வர வேண்டும்.

அவர்கள் தற்கொலை செய்வதற்கெனப் பொருட்களையோ மருந்துகளையோ வாங்கினால், ஏன்? என்று விசாரித்து அறியுங்கள். அவர்களுடைய கருத்துகளுக்கு மதிப்புக் கொடுத்துச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஒரு சமயம் அது அவருடைய தற்கொலைக்குக் காரணமாகக் கூட இருக்கலாம். அவர்களுக்கு ஆதரவு கொடுங்கள். அவர்களுடைய தனிமையைத் தவிர்த்து விடுங்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகுங்கள். அவர்கள் உங்களிடம் உதவி கேட்கும் வரை காத்திருக்க வேண்டாம். உங்களால் எப்போதெல்லாம் முடிகிறதோ அப்போதெல்லாம் உதவுங்கள். அவர்களுடைய சுற்றுப்புறத்தை நம்பிக்கை உடையதாய் மாற்றுங்கள். அது அவர்களுடைய தன்னம்பிக்கையை வளர்க்க உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கண்களில் படும் இடங்களில் உயிரைமாய்க்கக் கூடிய ஆயுதங்களையோ அபாயகரமான மருந்துகளையோ அகற்றி விடுங்கள். ஒருவர் தற்கொலை மனப்பாங்கு உடையவராய் இருப்பது தெரிந்தால் அதை இரகசியம் என்றெண்ணிப் பாதுகாக்க வேண்டாம். உங்களால் அதற்கு உதவ முடியாவிட்டாலும், மற்றவர் மூலமாக உதவிக்கரம் நீட்டலாம். அவர்களிடம் "அவர்களால் எதுவும் செய்ய முடியாது" என்று எக்காரணம் கொண்டும் கூறாதீர்கள். அதுவே கூட உடனடிக் காரணமாக அமையலாம்.

உங்களால் உதவ முடியாவிட்டால் தொழில்முறை உளவளத்துணையாளர்கள், ஆலோசகர்கள், சமயத் தலைவர்கள், சமூகசேவகர் ஆகியோரை அணுகவும். அடிக்கடி அவரது குணாதிசயங்கள் மாறுவதைத் துல்லியமாகக் கவனித்து ஆலோசனை அளிக்கவும். எக்காரணம் கொண்டும் உங்கள் வெறுப்பை வெளிக்காட்ட வேண்டாம். இதற்குத் தகுந்த ஆலோசனை முறைகளால் தீர்வு காணலாம் என்பதை அவரிடம் நம்பிக்கையுடன் கூறவும் எம்மைச் சூழ உள்ளவர்களுடன் சிறந்த மனிதத் தொடர்பைப் பேணுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CORRELATION ANALYSIS IN SPSS

**N.Ampihaipahan**
Teacher Educator.

The bivariate Pearson Correlation measures the strength and direction of linear relationships between pairs of continuous variables.

**Pearson Correlation**

The bivariate Pearson Correlation produces a sample correlation coefficient, r, which measures the strength and direction of linear relationships between pairs of continuous variables.

The bivariate Pearson Correlation is commonly used to measure the following:

- Correlations among pairs of variables
- Correlations within and between sets of variables

**The bivariate Pearson correlation indicates the following:**

- Whether a statistically significant linear relationship exists between two continuous variables
- The strength of a linear relationship (i.e., how close the relationship is to being a perfectly straight line)
- The direction of a linear relationship (increasing or decreasing)

**Data Requirements**

To use Pearson correlation, your data must meet the following requirements:

1. Two or more continuous variables (i.e., interval or ratio level)
2. Cases must have non-missing values on both variables
3. Linear relationship between the variables
4. Independent cases (i.e., independence of observations)
5. Bivariate normality

- Each pair of variables is bivariately normally distributed
- Each pair of variables is bivariately normally distributed at all levels of the other variable(s)
- This assumption ensures that the variables are linearly related; violations of this assumption may indicate that non-linear relationships among variables exist. Linearity can be assessed visually using a scatterplot of the data.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Random sample of data from the population

**Hypotheses**

Two-tailed significance test:

H0: $\rho = 0$ ("the population correlation coefficient is 0; there is no association")

H1: $\rho \neq 0$ ("the population correlation coefficient is not 0; a nonzero correlation could exist")

**One-tailed significance test:**

H0: $\rho = 0$ ("the population correlation coefficient is 0; there is no association")

H1: $\rho > 0$ ("the population correlation coefficient is greater than 0; a positive correlation could

OR

H1: $\rho < 0$ ("the population correlation coefficient is less than 0; a negative correlation could

Correlation can take on any value in the range [-1, 1].


- -1 : perfectly negative linear relationship
- 0 : no relationship
- +1 : perfectly positive linear relationship

The strength can be assessed by these general guidelines

- $.1 < |r| < .3$ … small / weak correlation
- $.3 < |r| < .5$ … medium / moderate correlation
- $.5 < |r|$ ……… large / strong correlation

**Run a Bivariate Pearson Correlation**


To run a bivariate Pearson Correlation in SPSS, click Analyze > Correlate > Bivariate.




The Bivariate Correlations window opens, where you will specify the variables to be used in the analysis. All of the variables in your dataset appear in the list on the left side. To select variables for the analysis, select the variables in the list on the left and click the blue arrow button to move them to the right, in the Variables field.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**A Variables:** The variables to be used in the bivariate Pearson Correlation. You must select at least two continuous variables, but may select more than two. The test will produce correlation coefficients for each pair of variables in this list.

**B Correlation Coefficients:** There are multiple types of correlation coefficients. By default, **Pearson** is selected. Selecting Pearson will produce the test statistics for a bivariate Pearson Correlation.

**C Test of Significance:** Click **Two-tailed** or **One-tailed**, depending on your desired significance test. SPSS uses a two-tailed test by default.


**D Flag significant correlations:** Checking this option will include asterisks (**) next to statistically significant correlations in the output. By default, SPSS marks statistical significance at the alpha = 0.05 and alpha = 0.01 levels, but not at the alpha = 0.001 level (which is treated as alpha = 0.01)

**EOptions:** Clicking **Options** will open a window where you can specify which **Statistics** to include (i.e., **Means and standard deviations**, **Cross-product deviations and covariances**) and how to address **Missing Values** (i.e., **Exclude cases pairwise or Exclude cases listwise**). Note that the pairwise/listwise setting does not affect your computations if you are only entering two variable, but can



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

make a very large difference if you are entering three or more variables into the correlation procedure.




**Example: Understanding the linear association between weight and height**

*Syntax*

CORRELATIONS
 /VARIABLES=Weight Height
 /PRINT=TWOTAIL NOSIG
 /MISSING=PAIRWISE.

OUTPUT

***Tables***

The results will display the correlations in a table, labeled **Correlations**.

**Correlations**

| | | Height | Weight |
|---|---|---|---|
| Height | Pearson Correlation | 1 | .513** |
| | Sig. (2-tailed) | | .000 |
| | N | (A) 408 | (B) 354 |
| Weight | Pearson Correlation | .513** | 1 |
| | Sig. (2-tailed) | .000 | |
| | N | (C) 354 | (D) 376 |

**. Correlation is significant at the 0.01 level (2-tailed).

Correlation of Height with itself (r=1), and the number of nonmissing observations for height (n=408).

**B** Correlation of height and weight (r=0.513), based on n=354 observations with pairwise nonmissing values.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**C** Correlation of height and weight (r=0.513), based on n=354 observations with pairwise nonmissing values.

**D** Correlation of weight with itself (r=1), and the number of nonmissing observations for weight (n=376).

The important cells we want to look at are either B or C. (Cells B and C are identical, because they include information about the same pair of variables.) Cells B and C contain the correlation coefficient for the correlation between height and weight, its p-value, and the number of complete pairwise observations that the calculation was based on.

The correlations in the *main diagonal* (cells A and D) are all equal to 1. This is because a variable is always perfectly correlated with itself. Notice, however, that the sample sizes are different in cell A ($n$=408) versus cell D ($n$=376). This is because of missing data -- there are more missing observations for variable Weight than there are for variable Height.

If you have opted to flag significant correlations, SPSS will mark a 0.05 significance level with one asterisk (*) and a 0.01 significance level with two asterisks (0.01). In cell B (repeated in cell C), we can see that the Pearson correlation coefficient for height and weight is .513, which is significant ($p < .001$ for a two-tailed test), based on 354 complete observations (i.e., cases with nonmissing values for both height and weight).

DECISION AND CONCLUSIONS

Based on the results, we can state the following:

- Weight and height have a statistically significant linear relationship ($r$=.513, $p < .001$).
- The direction of the relationship is positive (i.e., height and weight are positively correlated), meaning that these variables tend to increase together (i.e., greater height is associated with greater weight).
- The magnitude, or strength, of the association is approximately moderate ($.3 < |r| < .5$).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசிவந்திடப் பத்தும் பறந்து போம்

செ. மாவிரதன் B.A.
முகாமைத்துவ சேவை அலுவலர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இந்த உலகில் வாழும் மாந்தரை எண்ணில்லாத நோய்கள் அடிக்கடி வந்து வருத்துகின்றன. ஆனால் அவற்றுக்குரிய மருந்துண்டதும் மாறிவிடுகின்றன. எல்லா நோயும் எல்லாருக்கும் வருவதில்லை. எல்லார்க்கும் எல்லா நாட்களும் வரும் நோய் ஒன்று உண்டு. அது மாறாத நோய். அந்த நோயைப் போக்குவதற்காகவே மக்கள் பாடுபட்டுழைக்கிறார்கள். விலங்குகள் பறவைகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. அதுதான் பசி என்கிற நோய். இதனை இலக்கியங்களே பசிப்பிணி எனப்பாடுகின்றன. பசிப்பிணி பற்றிப் பாடாத இலக்கியங்களே இல்லை எனலாம்.

மகாகவி பாரதியார் கூட

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்"

என்று சொன்னது மட்டுமல்ல

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்தச் சகத்தினை அழித்திடுவோம்"

என்றும் ஆவேசமாகப்பாடுகின்றாள். பசிப்பிணி அவ்வளவு கொடியதா. இது என்ன தான் செய்யும் என்று ஔவையாரிடம் கேட்டுப்பார்க்கலாம். ஏனெனில் தமிழ்ப் புலவர்களில் ஔவையார் தான் பசிப்பிணியாலே பெரிதும் துன்பப்பட்டவர். இந்த உலகிற்குக் கல்வி அறிவுபுகட்ட வேண்டும் என்பதற்காகத் தனது இளமைக் கோலத்தையே துறந்து முதுமைக் கோலம் பெற்று ஔவைக்கிழவியாகி ஊரூராகச் சென்று தமிழுக்கு அரும்பணி யாற்றியவர்.

ஔவைக்கிழவி பசியாற் பட்ட அவமானங்கள் பல. தன் பசி தீர்க்க நாவற் பழத்திற்காக - சுட்ட பழத்திற்காகப் பாடினார். தவிட்டுக் கூழுக்காகப் பாடினார். பல இடங்களில் பாடியபோதும் பசிதீர உணவு கிடையாமல் ஏமாற்றமுற்றார். அப்படிப்பட்ட ஔவையார் தனது பட்டறிவைக் கொண்டு பசியின் கொடுமை பற்றிப் பாடிய பாடலொன்று எங்கள் பட்டி தொட்டியெல்லாம்

"பசிவந்திடப் பத்தும் பறந்திடும்"

என்னும் பழமொழி யாகவே வழங்கி வருவதைக் காண்கின்றோம்.

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல்
பசிவந்திடப் பறந்து போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் அழகிய வெண்பாவால் பசிவந்திடப் பத்தும் பறந்து போம் எனப் பாடுகின்றார். பசிவந்தால் பிறரிடம் உணவுக்காக இரக்க வேண்டி வரும், அதனாலே தன்மானம் போய்விடும், குலப் பெருமை குன்றிவிடும், எவ்வளவு கல்வியால் பெரியவரானாலும் கல்விப் பெருமையும் கலைந்துவிடும். வாண்மையாகிய ஈந்து உவக்கும் இன்பம் தொலைந்துவிடும். பொறுமை நம்மை விட்டுப் போய்விடும். செய்ய வேண்டிய தானதர்மங்கள் தவறிவிடும், தவம் கூடச் சித்திக்காது. வாழ்வில் காணவேண்டிய உயர்ச்சிகள் தவறித் தாழ்வடைய வேண்டிவரும், செய்ய வேண்டிய முயற்சிகள் எல்லாம் தவறிவிடும் மனதுக்கு இன்பம் தரும் மகளிர் மீது கொள்கின்ற காதல் கூடக் கைகூடாது என்கின்றார்.

மனிதர் மனிதராக மாண்புடன் வாழ்வதற்குரிய பண்புகள் ஒன்றிரண்டல்லப் பத்தையுமே பசி பறக்கடித்துவிடும் என ஔவைக் கிழவி சொல்லும் பட்டறிவுப் பாடல் எம்மை விழிப் படையச் செய்கிறது.

அப்படியானால் இந்தப்பத்து மனித விழுமியங்களையும் காப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ நினைக்கக் கூடாது. இதனையே வள்ளுவர்

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

என்கின்றார் பழிக்கு அஞ்சி அறநெறி நின்று பாடுபட்டுழைத்து அதனை இல்லாதோர்க்குப் பகுத்துக் கொடுத்து வாழ்ந்தால் பசி மட்டுமல்ல இந்தத் துன்பப்பிறவியே இல்லாமல் இறையின்பம் பெறலாம் என்கின்றார்.

ஔவைக் கிழவி பசியின் கொடுமை பற்றி இவ்வளவும் சொன்ன பட்டறிவையும் பார்த்தல் பயன்தரும். தனக்கென ஒரு ஊரோ, வீடோ, உறவோ இன்றி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர் நெறியில் ஊருக்கு உபகாரியாக வாழ்ந்த ஔவையார் ஒரு நாள் வழிநடந்து களைத்துப் பசியால் வருந்திப் போம் போது ஒரு குடிசை கண்ணுக்குப்பட்டது. அங்கு ஏதாவது பெற்றுப் பசியாறலாம் என்று உள்ளே போகிறார். அங்கு ஒரு மெலிந்த பெண் கண்ணுக்குப்படுகிறாள். அம்மா, பசிதாங்க முடியவில்லை ஏதாவது தருவாயா என்று கேட்கின்றார். அந்தப் பெண் என்னிடம் தவிட்டுக் கூழ்தான் இருக்கிறது. அதுவும் போதியது இல்லை அதிற் கொஞ்சம் உனக்கும் தருகிறேன் என்கிறாள். ஔவையார் ஆறியிருந்து அவளுடைய வீட்டுச் சுவரைப் பார்க்கிறார். அங்கு ஒரு அழகான பாடல் இரண்டு அடிகள் எழுதியிருக்கு. இன்னும் பாட்டுப் பூர்த்தியாக்கப்படவில்லை. புலவர் அல்லவா இந்தப் பாடல் ஔவையைக் கவஉந்து விடுகிறது. பாடலைப் படித்துப் பார்க்கிறார்.

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே - பெண்ணாவாள்

என்று பாடல் குறையில் நிற்கிறது ஔவையார் அந்தப் பெண்ணைப் பார்த்து அம்மா நீயும் ஒரு புலவரா அழகான பாடல் எழுதியிருக்கிறாயே. ஏன் அதை முடிக்கவில்லை என்று கேட்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பெண்ணோ அம்மா நான் புலவர் அல்ல ஒரு பேராசையால் செல்வம் எல்லாம் இழந்து தவிட்டுக் கூழுக்கும் வழியில்லாமல் தவிக்கும் ஏழையாகிவிட்டேன் என்கிறார். என்ன நடந்தது விபரமாகச் சொல் என ஔவையார் ஆவலுடன் கேட்க அந்தப் பெண் சொல்கிறாள். என்பெயர் சிலம்பி "புலவர் பாடும் புகழுடையார்" என்று பெருமையாகச் சொல்கிறார்களே அந்தப்புகழில் எனக்கும் ஆசை வந்தது. கம்பர் வாயால் பாடப்பட வேண்டும் என்ற ஆசையுடன் அவரிடம் போனேன். அவர் என்னைப் பாடச் சம்மதித்தார். ஆயிரம் பொன் தரவேண்டும் என்று கேட்டார். பொன்னைத் தேடிவை உன் வீட்டுக்கு வந்து உன்னைப் பாடுகிறேன் என்று சொன்னார். சொன்னபடி வந்தார் நான் அவர் வருமுன் என்னிடமிருந்த நகைநட்டு, பொருள்பண்டம் எல்லாம் விற்றும் ஐந்நூறு பொன் தான் தேறியது கம்பர் வந்தார், பொன்னைக் கேட்டார் நான் உள்ளதைச் சொல்லி ஐந்நூறு பொன்னையும் கொடுத்தேன். அவர் ஐந்நூறு பொன்னுக்கு அரைப்பாட்டு என்று சொல்லிவிட்டு இந்தச் சிவரில் இரண்டு வரி எழுதிவிட்டுப் போய்விட்டார். என் பொன்னும் போனது பாதிப் பாட்டின் பொருளும் தெரியவில்லை. பாட்டில் என்பெயரையும் காணவில்லை. இப்போ தவிட்டுக் கூழுக்குத் தவிக்கிறேன். என் நிலை யாருக்கும் வரக்கூடாதம்மா என்று அழுதாள்.

நீ அழாதே என் பசிக்கு கூழ்தந்தால் போதும் இதோ அந்த மீதிப் பாட்டை நானே எழுதிவிடுகிறேன் என்று சொல்லிக் கூழைக்குடித்துவிட்டுப் பாட்டைப் பூர்த்தி செய்தார் ஔவை.

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே - பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத்தாள் அணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

தண்ணீரிலே தலை சிறந்தது காவிரி நீர். மன்னர்களில் சிறந்தவன் சோழமன்னன், மண்டலங்களிலே சிறந்தது சோழ மண்டலம், அதுபோல பெண்களுக்குள்ளே சிறந்தவள் இந்த சிலம்பி தான் என்று சரஸ்வதியின் காலில் உள்ள பொற்சிலம்பே நீ இந்த உலகமெல்லாம் சொல் என்று ஔவையார் பாடலின் பொருளையும் சொல்லி முடித்தார். சிலம்பியின் மகிழ்வுக்கு எல்லையில்லை நான் ஆசைப்பட்டது போலக் கம்பரும் ஔவையும் சேர்ந்து பாடும் புகழ் கிடைத்ததே இனி இறந்தாலும் பறவாயில்லை எனக்கூறி அம்மா என்னிடம் தரப் பொன்னில்லை இந்தத் தவிட்டுகூழ் முழுவதையும் நீங்களே குடியுங்கள் என்று கொடுத்தாள்.

சிலம்பிக்கு மகிழ்ச்சி, ஔவையாருக்கோ கம்பன் ஐந்நூறு பொன்னுக்குப் பாடினான், நான் அரைவயிறு கூழுக்கு பாடும் நிலைக்கு இந்தக் கொடியபசி ஆளாக்கிவிட்டதே என மனதுக்குள் அவமானத்தால் துவண்டாள். இவ்விதமான பட்டறிவுதான். பசிவந்திடப் பத்தும் பறந்து போம் என்ற உண்மையைப் பாட வைத்தது.

இவ்விதமான காட்சிகளை எமது தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். இரட்டைக் காப்பியங்கள் எனப் போற்றப்படுபவற்றுள் ஒன்றான மணிமேகலை பசிப்பிணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பதையே இலக்காகக் கொண்ட காப்பியம். மணிமேகலா தெய்வம் கோவலன் மாதவி மகளாகிய மணிமேகலைக்குக் கொடுத்த அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் எனும் அமுதசுரபி கொண்டு பசி தீர்த்த வரலாறு உண்டு. புறநானூற்றிலே குடபுலவியனார் எனும் புலவர்

நீர் இன்றியமையா யாக்கைக்கெல்லாம்
உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டிமுதற்றே உணவின்பிண்டம்

எனப்பாடுகின்றார். நீரும் உணவும் இன்றி வாழ முடியாத இந்த உடலுக்கு உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர். உணவு இன்றேல் உயிர் உடலைவிட்டுப் போய்விடும். ஆதலால் உணவின் பிண்டமாகிய இந்த உடலுக்கு உணவு கொடுத்தல் உயிர் கொடுத்தல் ஆகும். எனக் கூறுகின்றார். இதன்மூலம் பசித்தோர்க்கு உணவளித்தலின் உயர்வை உணரவைக்கின்றார்.

இதனால் தான் நம்மவர் பசித்தோர்க்கு உணவளித்தலைத் தலையாய தர்மமாகக் கொண்டனர். மகாபாரத யுத்தத்தின் போது சேரமன்னன் சேரலாதன் பாண்டவர் கௌரவர் சேனைகளுக்கு யுத்தகளத்திலே சோறிட்டான். இதனால் அவன் பெயர் பெருஞ்சோற்றுச் சேரலாதன் என்று இன்றும் புகழுடன் நிலைக்கிறது.

திருமூலர் கூடத்தனது திருமந்திரத்தில் "ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்" என்கின்றார் பசித்தவரை இன்னார் இனியார் என்று ஆராயாது உணவளித்து அவர் உயிர் காக்க வேண்டும் என்கின்றார்.

சேக்கிழார் பெருமானும் "மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்" என்கிறார். இந்தப் பூமியில் பிறந்த பயனே அடியவர் பசிதீர்க்கத்தான் என அறுதியிட்டுச் சொல்கின்றார்.

புறநானூற்றிலே இன்னும் ஒரு புதுமையான பாடல் நாம் ஒவ்வொருவரும் பசிப்பிணி மருத்துவர்களாக இருக்க வேண்டும் எனச் சொல்கிறது. வழமையாக அரசர்களை வள்ளல்களை புலவர்கள் பாடுதல்தான் மரபு இங்கு பசித்தோர்க்கு உணவளிக்கும் பசிப்பிணி மருத்துவனாகிய சிறுகுடிக்கிழான் பண்ணனைச் சோழன்குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் எனும் அரசனே பாடுகின்ற புதுமையைக் காண்கின்றோம்.

பசியால் வருந்திய பாணர்கள் இங்கே பசிப்பிணி மருத்துவர் ஒருவர் இருக்கிறாராமே அவர் வீட்டுக்குப் போகும் வழியாதோ எனக் கேட்கின்றனர். அதோ மழைக்காலத்தில் முட்டை கொண்டு திட்டை ஏறும் எறும்புக் கூட்டம் போன்று ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் வரிசையாகச் சோற்றுப் பொதியுடன் போவதைப் பாருங்கள் அதுதான் பசிப்பிணி மருத்துவன் பண்ணன் வீட்டுக்கு வழி எனப்படுகிறது.


முட்டை கொண்டு வன்புலம் சேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநுண் எறும்பின் இல்ஒழுங்கு ஏய்ப்ப
சோறுடைக்கையர் வீறுவீறு இயங்கும்
இருஞ்சினைச்சிறார்க் கண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றென
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே
என்பது அப்புநானூறு.

பசிப்பிணிமிகக் கொடியது அது உயிரை மட்டுமல்ல மானம் குலங்கல்வி முதலான மனித விழுமியங்களையே போக்கடிக்கக்கூடியது. ஆதலால் நாம் ஒவ்வொருவரும் வள்ளுவர் வாக்கை நோக்கி "இல்லார்க் கொன்றீவதே ஈகை" என உணர்ந்து பசிப்பிணி மருத்துவர்களாகப் பகுத்துண்டு வாழ்ந்து வாழ்வின் பயனைப் பெறுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆசிரியர்களின் ஒழுக்கம்

திரு.கு.யோதிரட்ணராஜா,
ஆசிரிய கல்வியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

ஒரு நாட்டின் முன்னேற்றத்தை பல தரவுகளின் அடிப்படையில் கணக்கிடும் போது அதில் கல்வியே முதன்மையாக அடையாளப்படுத்தப்படுகிறது. கல்வியும் கல்வி சார்ந்த ஒழுக்க நெறியுமே மனிதனை பண்புள்ள மனிதனாக செதுக்குகிறது. இத்தகைய வாழ்வியல் விழுமியங்களை உலகில் தோன்றிய மூத்த தமிழினம் கடைப்பிடித்து ஒழுகியது மட்டுமல்லாது உலகிற்கும் வழிகாட்டியது என்றும் கூறப்படுகின்றது.

மனிதர் வாழ்வியல் சிறந்த இலக்கணம் வகுத்தளித்த திருவள்ளுவர் ஒழுக்க நெறியை பின்பற்றி வாழாதோர் எவ்வளவு கற்றிருப்பினும் அவர்கள் அறிவில்லாதவர்கள் என்று கூறுகிறார். சிறப்பாக தமிழர் தங்கள் உயிரினும் மேலானதாக கருதி போற்றி வருகின்ற இவ்வொழுக்கநெறி இன்றைய உலகத்தில் தெய்வத்திற்கு மேலாக வைத்து போற்றப்படுகின்ற ஆசிரியர் சமுதாயத்திடம் குன்றி வருவதன் விளைவினை ஆசிரியர் சிலர் சமீப நாட்களாக அவ்வப்போது அரங்கேற்றுகின்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

இவற்றை நாம் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமாயின் முதலில் நாம் பின் வருகின்ற சில விடயங்கள் தொடர்பான தெளிவான விளக்கங்களை பெற வேண்டும். அவையாவன ஒழுக்கம் என்பது யாது? ஆசிரியர் எனப்படுபவர் யார்? ஒழுக்கத்திற்கும் ஆசிரியருக்கும் இடையில் இருக்கின்ற தொடர்பு..? போன்றவற்றில் ஒழுக்கம் பற்றி நோக்கும்போது ஒழுக்கம் என்பது ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய உயரிய குணமாகும். மேலும் நீதி நூல்களில் சொல்லப்பட்ட விதிகளின்படியும் பெரியோர் நடந்து காட்டியபடியும் ஒழுகுவது. மற்றும் நல்லொழுக்கம் என்பது நன்னடத்தையை குறிக்கும். இவ்வாறு ஒழுக்கம் பற்றி பல்வேறு விளக்கங்கள் காணப்படுகின்றன.

மேலும் ஆசிரியர் யார் என்பது பற்றி அறிய வேண்டிய தேவை இருக்கிறது. ஆசிரியம் என்பது பணி அல்ல அது ஒரு தொண்டு. அதாவது மாணவர்களிடம் காணப்படுகின்ற அறியாமை என்னும் இருளை நீக்கி அவர்களது வாழ்வில் ஒளி ஏற்றுபவர் ஆசிரியர் ஆவார்.

அடுத்து ஆசிரியருக்கும் ஒழுக்கத்துக்கும் இடையில் உள்ள தொடர்பை பற்றி நோக்கினால் ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுகிறது என்பது உண்மையாகும். தாய் தந்தையை விட ஆசிரியரிடம் தான் ஒரு குழந்தை அதிக நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவழிக்கிறது. எனவேதான் ஆசிரியர்கள் இரண்டாவது பெற்றோர் என அழைக்கப்படுகின்றனர். தன்னிடம் கல்வி கற்கும் மாணவனை சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் மாற்ற வேண்டிய கடமை ஆசிரியருக்கு உண்டு. ஒழுக்கமுள்ள மற்றும் சமூகத்திற்குப் பயன்படுகின்ற மாணவர்களை சமூகத்திற்கு வழங்குவதே ஆசிரியரின் வெற்றியாகும். இவ்வாறு ஆசிரியர் வெற்றி பெற வேண்டுமாயின் மாணவர்களுக்கு கல்வியுடன் இணைந்த ஒழுக்கத்தையும் அவர்களுக்கு புகட்ட வேண்டிய தேவை இருக்கிறது. மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தை போதிக்க வேண்டுமாயின் ஆசிரியர் தான் முதலில் ஒழுக்கம் பற்றிய பூரண விளக்கத்தைப் பெற வேண்டியது அவசியமானதொன்றாகக் காணப்படுகிறது.

ஒழுக்கம் பற்றி நன்கு அறிந்து நம்முடைய வாழ்க்கையிலும் அதனை கடைப்பிடித்து மாணவர்களுக்கு முன்மாதிரியாக செயற்படும் பட்சத்தில் மாணவர்களின் மனதிலுள்ள மாசுக்களை நீக்கி அறிவு என்னும் ஒளியை ஏற்றி இவ்வுலகத்திற்கு அறிவுஇ திறன்இ மனப்பாங்கு என்பன விருத்தி பெற்ற சிறந்த ஒழுக்க விழுமிய பண்புள்ள நற்பிரஜையாக மாணவர்களை உருவாக்க முடியும்.

இவ்வாறு ஒழுக்கங்களைக் கடைபிடிக்க வேண்டுமாயின் ஒழுக்க கோவை என்பது பற்றி அறிய வேண்டிய தேவை இருக்கின்றது. ஒழுக்க கோவை என்பது எந்தவொரு தொழிலுக்குமான சிறப்பான பணிகள், நடத்தைகள், பொறுப்புக்கள் ஆகிய மூன்று அம்சங்களும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட நியமங்கள் அத்தொழிலுக்குரிய ஒழுக்க கோவையாக கொள்ளப்படுகின்றது. அதற்கு அமைவாக நாம் குறிப்பாக ஆசிரியர் ஒழுக்கத்துக்குரிய ஒழுக்கக்கோவை பற்றிய விளக்கத்தை பெற வேண்டிய தேவையும் எமக்கு இருக்கிறது. ஆசிரியர் ஒழுக்கக்கோவை என்பது தம்மால் தமக்காக விதிக்கப்பட வேண்டிய நேர்மை, பொறுப்பு மற்றும் முன்மாதிரி, சமூகப் பொறுப்புக்கள் மற்றும் சமூகம் எதிர்பார்க்கும் ஆசிரியர்களின் சிந்தனைகள், பொறுப்புக்கள், பழக்கவழக்கங்கள் என்பன ஆசிரியர் ஒழுக்க கோவை எனப்படும்.

இவ்வொழுக்க கோவை கல்வி தொடர்பான பொறுப்புக்கள் கொண்ட பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறையில் உள்ள கல்வி சார் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உரியதாகின்றது.

அதன் அடிப்படையில் ஆசிரியருக்கு ஏன் ஒழுக்கக்கோவை அவசியமென்ற கேள்வி எழுகின்றது. அதைனை நோக்கும் போது

i. ஆசிரியரது தொழில் கௌரவத்தை பாதுகாப்பதற்கு
ii. பாடசாலையின் பண்பாட்டை பேணுவதற்கு
iii. தொழிலின் பொறுப்பேற்றலையும் வகை கூறலையும் பாதுகாப்பதற்கு
iv. ஆசிரியர் இளஞ்சந்ததியினரை உருவாக்குபவர் என்ற வகையில் முன்மாதிரியாக இருப்பதற்கும் தொழில் தொடர்பில் அதிக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும் போன்ற விடயங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு ஆசிரியருக்கு ஒழுக்க கோவை அவசியமானதாக காணப்படுகிறது. இவ்வாறு ஒழுக்கக்கோவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கும் முக்கியமான விடயங்களை அறிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அவை

i. ஆசிரியர் உடையில் பகடில்லாத தன்மையையும் அவற்றின் பொருத்தத் தன்மையையும் வெளிக்காட்டுதல்.

ii. ஆசிரியர் சொல்லாலும் செயலாலும் நேர்மையானவராய் இருத்தல்

iii. சாதி, இனம், சமூக அந்தஸ்து போன்ற எதனையும் கருதாது எல்லா மாணவரையும் நியாயமாகவும் சமமாகவும் கணித்தல்

iv. ஆசிரியர் தமது நடத்தையூடாக எல்லோரது கவனத்தை மதிப்பையும் பெறல்

v. தொழிலுக்குப் பங்கம் விளைவிக்கத்தக்க துர்ப்பழக்கவழக்கங்களில் இருந்து ஆசிரியர் விலகியிருத்தல்

போன்ற விடயங்களை கூற முடியும். இவற்றுடன் ஆசிரியர் தொழிலுடன் இணைந்த சில ஒழுக்கங்களும் காணப்படுகின்றது.

i. மாணவரது கௌரவத்தை பாதுகாப்பதற்கு ஆவண செய்தல்

ii. நேர முகாமைத்துவத்தை சரியாக கடைபிடித்தல்

iii. மாணவரது தனிப்பட்ட தகவல்கள் பிரச்சினைகளை அவர்களுக்கு பங்கம் விளைவிக்காத வகையில் பயன்படுத்துதல்

iv. மாணவர் முன்னிலையில் நிர்வாகத்தை விமர்சிக்காதிருத்தலும் நிர்வாகத்திற்கு எதிராக மாணவரைத் தூண்டாதிருத்தலும்

v. மாணவரை சுய கற்றலின்பால் வழிப்படுத்துதல்

போன்ற சில ஆசிரியத் தொழிலுடன் இணைந்த ஒழுக்கங்கள் பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது ஆசிரியருக்கு ஏன் ஒழுக்கம் மற்றும் ஒழுக்கக்கோவை அவசியமென்பது பற்றிய ஒரு பூரண விளக்கத்தை பெற முடிகின்றது. இதன் அடிப்படையில் ஆசிரியர்களின் ஒழுக்க நிலைமைகள் தொடர்பாக சுற்று நிருப இலக்கம் 2009/26 எஸ்.யு. விஜேரத்ன (பதில் கல்வி செயலாளர், கல்வி அமைச்சு) குறிப்பிட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு

பாடசாலையினுள் கையடக்க தொலைபேசி பாவனை அதாவது பாடசாலை மாணவர்களை படம்பிடித்தல், ஒழுங்கீனமான பாலியல் சார்ந்த காட்சிகளை சேகரித்து வைத்திருத்தல், செய்திகள், காட்சிகளை அனுப்புதல், பொழுதுபோக்காக அவற்றை பார்ப்பதற்கு ஈடுபாடு கொண்டிருத்தல், மற்றும் கையடக்க தொலைபேசியை பாடசாலைக்கு கொண்டு வருதல் பாவித்தல் முற்றாக தடை. பணியாளர்கள் (ஆசிரியர்) கடமை நேரத்தில் கையடக்க தொலைபேசியை செயல் இழக்கச் செய்து வைத்தல். பாடசாலைக்கு ஒழுங்கீனமான பாலியல் செயற்பாடுகள் உள்ளடங்கிய அனைத்து அச்சுப் பதிப்புகள். உபகரணங்கள் அதாவது இலத்திரனியல் உபகரணங்களை கொண்டு வருதல், வாசித்தல், பாவித்தல், முற்றாகத் தடை. மற்றும் புகைப்படக் கருவி, வீடியோ கருவி என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி இன்றி கொண்டு வருவதற்கு தடை போன்ற விடயங்கள் மேற்குறித்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சுற்று நிருப இலக்கம் 1997.07.01 (எம். டீ. டீ. பீரிஸ்) சுற்றறிக்கையில் பாடசாலைக்குள் புகைத்தல், மதுபானம் அருந்துதல், முற்றாகத் தடை. சிகரெட், மதுபானம் மாணவர்களைக் கொண்டெடுப்பித்தல் தடை, பாடசாலை வளவுக்குள் சிற்றுண்டிச் சாலையில் சிகரெட், மதுபானம் விற்க முற்றாகத் தடை. பாடசாலை வளவுக்குள் வைபவ வேளைகளில் புகைத்தல், மதுபானம் அருந்த தடை. பாடசாலைக்குள் மதுப்பாவனை, புகைத்தலை தடை செய்தல் தொடர்பான பதாதைகள், விளம்பர பலகைகளை தொங்கவிட வேண்டும். மாணவர், பெற்றோர், ஆசிரியர் மற்றும் ஏனையோர் மதுபானம், போதைப்பொருள் கொண்டுவர ஆயத்தமாயின் உடனடியாக தடுத்து நிறுத்துதல் போன்ற விடயங்களை மேற்குறித்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன் மேற்குறித்த விடயங்கள் தவிர ஆசிரியர் ஒழுக்க விழுமியத்தில் கடைபிடிக்க வேண்டிய பொதுவான விடயங்கள் காணப்படுகின்றன. அவையாவன

i. நேர முகாமைத்துவத்தை பேணலும் கடமையில் ஈடுபடலும்
ii. எண்ணம், சொல், செயல் என்பவற்றில் நேர்மையுடையவராக இருத்தல்
iii. கல்வி கற்பதற்கான பிள்ளைகளின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளல்
iv. பாரபட்சம் இன்றி மாணவரது ஆளுமை விருத்திக்கு உதவுதல், வழிகாட்டுதல், ஊக்குவித்தல்
v. மாணவரது தனியாள் வேறுபாடு சுய கௌரவத்திற்கு மதிப்பளித்தல்
vi. பொருத்தமான அக புற (உடை, முகம்) தோற்றத்தைக் கொண்டிருத்தல்
vii. உடல், உள பாதிப்பை ஏற்படுத்தாதிருத்தல்
viii. பாடத்தின் முழு நேரத்தையும் மாணவர் கற்றலுக்கு செலவு செய்தல்
ix. அர்ப்பணிப்பு, தியாக உணர்வுடன் பணியாற்றல்
x. பாட நேரம், பரீட்சை மண்டபத்தில் சக ஆசிரியருடன் பேசுவது தொலைபேசிப் பாவனை போன்றவற்றை தவிர்த்தல்.
xi. கதிரையில் அமர்ந்து கற்பிப்பதை தவிர்த்தல்
xii. கதிரையின் சட்டம், மேசையில் அமரக்கூடாது
xiii. பரீட்சை மேற்பார்வை கடமை, பேப்பர் திருத்துதல் போன்ற இரண்டையும் ஒரே நேரம் செய்யக்கூடாது.
xiv. காலைக் கூட்டத்திற்கு சமூகம் அளித்தல்

இவ்வாறு மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஆசிரியர் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான ஒழுக்க விடயங்களாக குறிப்பிடலாம். இவற்றுடன் ஒழுக்க விழுமியங்கள் ஆசிரியர் வகிபாகம் தொடர்பாக நோக்கும்போது அவற்றின் அடிப்படையில் வகிபாகம் தொடர்பாகவும் ஆசிரியர் வகிபாகவும் தொடர்பாகவும் அவற்றோடு இணைந்த ஒழுக்கம், கடமைகள் தொடர்பாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சிந்திக்க வேண்டும். அவற்றுள் வகிபாகம் என்பதனால் கருதப்படுவது எந்தவொரு மனிதனுக்கும் அவர் சேவையாற்றுகின்ற நிறுவனத்தில் அல்லது அமைச்சில் தனக்கு கிடைத்துள்ள பதவிக்கேற்ப அவரால் ஆற்றப்படல் வேண்டுமென அந்த அமைப்பினுள் சேவையாற்றுகின்ற மற்றும் அங்கிருந்து சேவை பெறுகின்ற சகலருக்கும் எதிர்பார்க்கின்ற வழிகாட்டல் தனி ஆளுக்கான வகிபாகம் எனலாம். (பீ. விஜேசீலி குணசேகர) மற்றும் வகிபாகத்தாளர் ஒருவரின் வேலை செய்யும் விதம், ஆளிடைத் தொடர்பு, சமூக உணர்வுகள், இரக்க சிந்தனை, பேச்சு நடத்தை ஆகியன தொடர்பான பிரதி மாற்றங்கள் வகிபாகமொன்றின் அல்லது அதன் பழக்கவழக்கங்களின் பால் தாக்கம் செலுத்தும். (பீ. விஜேசீலி குணசேகர - பாடசாலை முகாமத்துவமும் புதிய செல் நெறிகளும் உபாயமும்) இவ்வாறு வகிபாகம் தொடர்பாக குறிப்பிடப்படுகின்றது.

அடுத்து ஆசிரியர் வகிபாகம் பற்றி நோக்கும் போது "கற்பித்தல் செயன்முறையை நெறிப்படுத்துபவர் என்ற வகையில் ஆசிரியரின் பொறுப்பு, அதிகாரம், கடமை, ஒழுக்கம் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கியதே ஆசிரிய வகிபாகமாகும். அத்துடன் ஆசிரியரது வகிபாகம் வகுப்பறைக்கோ அல்லது பாடசாலைக்கோ வரையறுக்கப்பட்டதல்ல. மாறாக வகுப்பறைக்கு வெளியேயும் மாணவரிடமும் பாடசாலைக்கு வெளியே சமுதாயம் பெற்றோரிடமும் ஏனைய ஆசிரியருடனும் ஆசிரியர் அல்லாத வேறு அதிகாரிகளுடனும் குழுக்களுடனும் என்றவாறாக பல்வேறு சமூகக்குழுக்கள் மற்றும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய பணிகள் இதிலடங்கும். உலகின் எப்பகுதியிலும் ஆசிரியர் சமூக அந்தஸ்துள்ளவராக கணிக்கப்படுவார். "கல்வி என்பது ஆசிரியராகும். ஆசிரியர் என்பது கல்வியாகும்"

இதனடிப்படையில் ஆசிரியர் வகிபாகத்துடன் ஆசிரியர் தமது ஒழுக்க விழுமியங்களை 08 வகையான முறையில் கடைபிடிக்க வேண்டிய தேவை உள்ளதாக கருதப்படுகின்றது.

i. ஆசிரியர் தனிப்பட்ட ரீதியில்
ii. ஆசிரியர் பெற்றோருக்கு பதிலாக
iii. ஆசிரியர் அறிவு வழங்குபவர், திறமை மற்றும் சிறந்த மனப்பாங்கு விருத்தியாளராக
iv. ஆசிரியர் ஆக்கத்திறன் மிக்கவர் மற்றும் வழிகாட்டுநர், ஆலோசகராக
v. ஆசிரியர் மதிப்பீட்டாளராக
vi. ஆசிரியர் தொழில்சார் உத்தியோகத்தராக
vii. ஆசிரியர் முகாமைத்துவத்தின் பொறுப்பாளராக
viii. சமூக மற்றும் தேசத்தின் முன்னோடியாக செயல்படல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அதன் அடிப்படையில் அவை ஒவ்வொன்றும் தொடர்பாக சரியான மற்றும் தெளிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அதற்கிணங்க ஆசிரியரின் ஒழுக்க விழுமியங்களை தனிப்பட்ட ரீதியில் நோக்கும் போது

- சிறந்த நற்பழக்க வழக்கங்கள் இ ஒழுக்கங்கள் கொண்ட முன்னோடியாக செயற்படல்.
- சகல சந்தர்ப்பங்களிலும் ஒழுக்கம் மற்றும் விழுமியத்தை பாதுகாக்க கூடியவாறு சுத்தமான எளிமையான முறையில் ஆடை அணிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மது, புகை, போதை மற்றும் பல்வகையான முறைகேடான செயற்பாடுகளில் இருந்து விலகி இருப்பதோடு ஏனையோரும் விலகியிருக்க உதவுதல். மேலும் சமூக செயற்பாடுகள் தொடர்பான அபகீர்த்திக்கு உட்பட்டோருடன் தொடர்புகளை தவிர்த்தல்.

❖ தாம் பழகும் ஆசிரியர், மாணவர் மற்றும் ஏனையோரின் முன்னிலையில் தமது செல்வநிலை குடும்ப தரம் தொடர்பில் பெருமையுடன் பேசாதிருத்தல்

❖ தமது சொந்த வாழ்க்கை மற்றும் சமயம், அரசியல் போன்றவைகள் தொடர்பாக தனிப்பட்ட கருத்தினை அங்கீகரிக்க மாணவர்களை வலியுறுத்தாதிருத்தல்.

❖ ஏதேனும் பாடங்கள் மொழி அல்லது ஏனைய துறைகள் தொடர்பில் தம்மிடம் காணப்படும் விஷேடதிறன்களை ஏனையோரை இழிவுபடுத்துவதற்கென பயன்படுத்தாதிருத்தல்.

❖ சிறந்த கொள்கைகள் கொண்டுள்ளோர் முன்னிலையில் தீவிரவாத கொள்கையினை கடைப்பிடிக்காதிருத்தல். மற்றும் தீவிரவாத நிலைப்பாட்டிலிருந்து சமநிலை கொண்ட நபராக செயற்படல்.

❖ வகுப்பறை மற்றும் அதற்கு வெளியே மாணவர்களுடன் பழகும் போது கையடக்க தொலைபேசி பாவனையை தவிர்த்தல். மற்றும் சகல சந்தர்ப்பங்களிலும் சமூக அங்கீகாரங்களை கௌரவித்து பழக்க வழக்கங்கள் மற்றும் தனிப்பட்ட ரீதியான கௌரவத்துடன் சகல முறைகளிலும் பிள்ளைகள் மற்றும் முழுச்சமூகத்திற்கும் முன்மாதிரியாக செயற்படல்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஆசிரியர் வகிபாகத்தில் அடிப்படையில் தனிப்பட்ட ரீதியில் கடைபிடிக்க வேண்டிய விடயமாக காணப்படுகின்றது. மற்றும் ஆசிரியர் பெற்றோருக்கு பதிலாக செயற்படும் போது

i. பாடசாலை மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர் மாணவர்களின் இடம்சார் பெற்றோர் என்ற சட்ட ரீதியான சிந்தனையை கருத்தில் கொள்ளல்.

ii. சகல சந்தர்ப்பத்திலும் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கையினைப் பாதுகாத்தல் மற்றும் பெற்றோர் பாதுகாவலர்கள் தொடர்பில் பிள்ளையின் நம்பகத்தன்மையினை உறுதி செய்யக் கூடியவாறு செயற்படல்.

iii. குலம், சாதி, நம்பிக்கை, ஆண் பெண் வேறுபாடு, சமூக நிலைமை, சமயம், மொழி, பிறப்பிடம் ஆகிய காரணிகளைக் கருத்திற் கொள்ளாது சகல மாணவர்களுக்கும் நியாயமாகவும் பக்க சார்பற்ற அன்பினையும் கருணை மற்றும் பாதுகாப்பினையும் வழங்கல்.

iv. தமது மாணவர்களைத் தமது பிள்ளைகளைப் போன்று அழைத்தல்

v. மாணவர்களுக்கு இருக்கக்கூடிய விசேட தேவை பிரச்சினைகள் குறித்து விழிப்புடன் இருத்தல் மற்றும் அவ்வாறான மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும் நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்க நடவடிக்கை எடுத்தல்

போன்ற விடயங்களை ஆசிரியர் வகிபாகத்தின் அடிப்படையில் பெற்றோருக்குப் பதிலாக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விழுமியங்களாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுடன் ஆசிரியர் அறிவு வழங்குபவர், திறமை மற்றும் சிறந்த மனப்பாங்கு விருத்தியாளராக வகிபாகம் வகிக்கும் போது

i. அறிவினை வழங்குதல் திறமை மற்றும் சிறந்த சிந்தனையை விருத்தி செய்தலை ஆசிரியரின் அடிப்படை பொறுப்பாக கருதி ஆசிரியர் செயற்பட வேண்டும்.

ii. ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைப் பிரகடனம் (1989) குறிப்பிடுவதைப் போன்று சிறுவர்களிடம் இருக்க வேண்டிய உரிமைகளை (விசேடமாக கல்வி உட்பட) உறுதிப்படுத்தக் கூடியவாறு செயற்படுத்தல்.

iii. சகல சந்தர்ப்பங்களிலும் சிறந்த தயாரிப்புகளுடன் கூடியதாக பொறுப்புக்களை நிறைவேற்றல்

iv. வழங்கப்படும் அறிவு சரியானது என்றும் பொருத்தமானது என்றும் மாணவர்க்கு உரியது என்றும் உறுதிப்படுத்துதல்

v. விசேடமான கற்பித்தல் தொடர்பில் புனிதமான பிரவேசங்களை பின்பற்றல்.

vi. கற்பித்தல் காலத்திற்குள் கேள்விகளைக் கேட்டல் மற்றும் கலந்துரையாட ஆர்வமூட்டி மாணவர்களின் விழுமியம் மற்றும் சிந்தனைகளை ஊக்குவிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.

vii. மாணவர்களை சுய கற்கைக்கு ஆர்வமூட்டத் தேவையான வசதிகளை வழங்குதல்

viii. மாணவர்களின் சிந்தனை விருத்தியாளர் மற்றும் அதற்காக ஆர்வமூட்டுபவராக செயற்படல்

ix. எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது மாணவர்களிடம் நிதி அறவிட்டு கற்பிப்பதைத் தவிர்த்தல்

போன்ற ஒழுக்க நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் ஆசிரியர் ஆக்கத்திறன் மிக்கவராகவும் மற்றும் வழிகாட்டுநர் ஆலோசகராகவும் வகிபாகவும் வகிக்கும் போது தமது பொறுப்பின் கீழ்வரும் மாணவர்களுக்கான அதி உயரிய சேவையினை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும்.

I. பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் அறிவினால் திறமையினால் மற்றும் சிறந்த சிந்தனைகளை கொண்டோராக செயற்படல்.

ii. மாணவர்களிடம் இருக்க வேண்டிய பின்னடைவுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கவனத்துடன் இருப்பதோடு பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

iii. பிள்ளைகளின் பலவீனங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களை அப்பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் சட்ட ரீதியான பாதுகாவலரைத் தவிர யாருக்கும் வெளிப்படுத்தக் கூடாது.

iv. பெற்றோருடன் நல்லுறவைப் பேணி தேவையான சந்தர்ப்பத்தில் பிள்ளை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க நம்மை இலகுவாக அணுகச் சந்தர்ப்பம் அளித்தல்.

v. ஆசிரியர் - மாணவர் தொடர்புகளை முறையற்ற ரீதியில் பயன்படுத்தாதிருத்தல்

vi. சகல சந்தர்ப்பத்திலும் மாணவரின் அறிவுசார் திறமை மற்றும் சமூக விழுமிய விருத்திக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றன ஆசிரியர் ஆக்கத்திறன் மிக்கவராகவும் வழிகாட்டல் ஆலோசகராகவும் வழங்கத்தக்க சேவைகள் ஆகும். மற்றும் ஆசிரியர் மதிப்பீட்டாளராக செயற்படும்போது

I. மதிப்பீடு,கணிப்பீடு என்பவற்றின் முக்கியத்துவத்தை கருதி தொடர்ந்தும் அதற்கு தேவையான அறிவினை இற்றைப்படுத்தல் மற்றும் அதனுடன் இணைந்த அறிவு சிந்தனை ஆற்றல் விருத்தியினை ஏற்படுத்தல்

ii. மாணவர்களிடம் காணப்படுகின்ற கற்றல் ரீதியான பிரச்சினைகளை கண்டறிந்து தீர்க்க வேண்டும்

iii. மாணவர்கள் தொடர்பில் எவ்வித பேதங்களும் இன்றி தனிப்பட்ட அழுத்தங்கள் இன்றி நெகிழ்வுத் தன்மை மற்றும் நம்பகத்தன்மையான மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

மேலும் ஆசிரியர் தொழில்சார் உத்தியோகத்தராக செயற்படும்போது பின்வரும் விடயங்களை பின்பற்ற வேண்டும்.

i. அறிவு திறமைகளைக் கொண்டுள்ளமையினால் ஆசிரியர் தொழில் சார் உத்தியோகத்தராக கருதப்படுவார். எனவே ஆசிரியர் தொழிலுக்கு பொருத்தமான உயர் சம்பிரதாயம் மற்றும் அதி உன்னத தரத்தினை சகல சந்தர்ப்பங்களிலும் பாதுகாத்தல்

ii. தமது தொழில்சார் அறிவு மற்றும் திறமைகளின் செல்லுபடியாகும் தரத்தினை பேணுவதைப் போன்று கட்டாயமாகச் சமகாலப்படுத்தவும் வேண்டும்.

iii. தமது தொழில் தொடர்பிலான அபிமானம் மற்றும் உணர்வுடன் செயற்படல்.

iv. சகல மாணவர்களுக்கும் பண்புசார் கல்வியினை வழங்குவதன் மூலம் பொது மக்களின் நம்பிக்கையை வெல்லுதல்.

v. எதிர்வரும் ஆண்டுக்கான செயற்பாடுகளுக்கு தேவையான எழுத்து மூல அறிக்கைகள் மற்றும் வாய்மூல தகவல்களை உரியவாறு தமது பதிலீட்டாளருக்கு வழங்குதல்.

vi. தொழில் சார் கௌரவத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்களை உடனடியாக உரிய தொழில்சார் அதிகாரிகளுக்கு அறிக்கைப்படுத்துதல்

மேலும் ஆசிரியர் முகாமைத்துவ பொறுப்பாளராக பின்பற்ற வேண்டிய விடயங்கள் பற்றி நோக்குகையில்

i. தமது தொழிலுக்கு பாதிப்புகள் ஏற்படாத சட்டங்கள் உயரிய முகாமைத்துவத்தில் தமக்குள்ள பொறுப்புகள் தொடர்பாக அறிவுறுத்தலை வழங்குதல்.

ii. பாடசாலை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கொள்கைகளை வகுத்தல் மற்றும் அமுல்படுத்த உதவுதல்.

iii. முகாமைத்துவ ஆலோசனைகளை பின்பற்றலும் பிரச்சினையின் போது அது தொடர்பில் அமைதியான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

iv. தமது தொழில்சார் செயற்பாடு மற்றும் அவற்றின் பெறுபேறுகள் தொடர்பாக பரஸ்பர கௌரவத்தினை ஏற்படுத்துதல்.

v. சகல கடமைகளையும் உரிய பொறுப்புக்களுடன் உரிய செயற்பாடுகளூடாக நியாயமாக மேற்கொள்ளல் போன்ற விடயங்களை கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆசிரியர் சமூகம் மற்றும் தேசத்தின் முன்னோடி என்ற வகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அவையாவன

I. சமூகத்தின் பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் அப்பிரச்சனைகள் ஊடாக உருவான சவால்களை எதிர்கொள்ளக்கூடியவறான செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தி தேசத்தை நேசிக்கும் சமூகத்தை உருவாக்குதல்

ii. பல்வேறுபட்ட சமூக பிரிவுகள் சமய மற்றும் மொழி பிரிவுகளுக்கு இடையே சமாதானத்தை கட்டி எழுப்பக் கூடியவாறு மாணவரிடம் சிறந்த பண்புகளை விருத்தி செய்து தேசிய நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

iii. பாடசாலை சமுகம் மற்றும் தேசத்திற்கு மனப்பூர்வமாக செயலாற்றுவதோடு மாணவரையும் அவ்வழிக்கு இட்டுச் செல்லுதல் போன்றவற்றைக் குறிப்பிடமுடியும்.

இவ்வாறு ஆசிரியரது வகிபாகம் மற்றும் ஒழுக்கங்கள் தொடர்பிலான கருத்துக்கள் மற்றும் சுற்று நிருபங்கள் காணப்படுகின்ற போதிலும் தற்காலத்தில் அவை முறையாக பின்பற்றப்படாத சூழலே காணப்படுகின்றது. இதன் மூலம் சமுக ரீதியான சீர்கேடுகள் நாளுக்கு நாள் அதிகரிது வருவதைக் காண முடிகின்றது. குறிப்பாக இன்றைய ஆசிரியர்கள் ஆசிரியர் பணி என்பது வெறுமனே கற்பிப்பது மட்டுமே என்று நினைக்கின்றனர். அதாவது ஏட்டுக் கல்வியை வழங்குவது என்று எண்ணுகின்றனர். ஆனால் ஆசிரியரது பணி என்பது ஏட்டுக் கல்வியைத் தாண்டி ஒழுக்கம் தன்னம்பிக்கை விழுமியப்பண்புகள் பொது அறிவு போன்றவற்றையும் வளர்க்கும் வண்ணம் அமைய வேண்டும். இவற்றைத் திறம்பட செய்வதற்கு தியாக மனப்பான்மை மற்றும் தொழிலை நேசிக்கும் தன்மை இருக்க வேண்டும். ஆனால் அண்மைக்காலமாக மாணவர்களுக்கு எதிரான ஆசிரியர்களின் கீழ்த்தரமான செயற்பாடுகள் நடவடிக்கைகள் அரங்கேறுவதை அவதானிக்க முடிகின்றது.

i. பாலியல் தொடர்பான பிரச்சனைகளில் ஈடுபடல். அதாவது பாடம் தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கென மாணவரது தொலைபேசி எண்களை பெற்று அதனை தவறாகப் பயன்படுத்தி மாணவரோடு அநாகரீக தொலைபேசி பாவனையை செய்தல். இவ்வாறான ஆசிரியர்களின் செயற்பாடுகள் காரணமாக பெருமளவான பெண் மாணவியர் தமது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

ii. போதைப் பொருள் பாவனை

iii. மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற முறையற்ற தண்டனைகள் போன்றன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

மேலும் தற்கால ஆசிரியர்களிடமுள்ள ஒழுக்க ரீதியான மிக முக்கியமான குறைபாடு நேர முகாமைத்துவமின்மையாகும். மேலும் பாடம் தொடர்பான பூரண புலமை இன்மை அர்ப்பணிப்பு மற்றும் சேவை மனப்பாங்கு இன்மை என்றவாறு கூறிக் கொண்டே செல்லலாம்.

இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு இன்றைய கால ஆசிரியர்களின் ஒழுக்க நிலைமை பற்றி அறிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த வகையில் இன்றைய ஆசிரியரது ஒழுக்க நிலைமைகளினை பின்வருமாறு நோக்கலாம். அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை அணிகலன்கள் தொடங்கி நடை உடை பாவனை மற்றும் தொடர்பாடல் என்று அனைத்து விடயங்களிலும் பாரிய மாற்றம் ஏற்பட்டு பெரும் சவாலாக காணப்படுகின்றது. அதுவும் குறிப்பாக இன்றைய சூழலில் ஒரு சில ஆசிரியர்களின் செயற்பாடு மற்றும் தவறான அணுகுமுறைகள் காரணமாக ஒழுக்க நிலை சீர்குலைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில ஆசிரியர்களின் தவறான நடவடிக்கைகளால் முழு ஆசிரியர் சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியப் பணி என்பது வெறும் வேதனம் சலுகைகள் என்ற அடிப்படையிலே சில ஆசிரியர்கள் நோக்குகின்றனர். ஆசிரியத் தொழிலில் சார்ப்பரியம் புரியவில்லை. எது எவ்வாறு இருப்பினும் சிறந்த அர்ப்பணிப்புடன் எவ்வித இலாப நோக்கங்களும் இன்றி பாட அறிவோடு பல்துறை சார்ந்த அறிவுகளையும் மாணவர்களுக்கு வழங்கும் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். "எல்லா மனிதர்களும் நீதிமான்கள் அல்ல, அனைத்து மனிதர்களும் வாய்மையானவர்கள் அல்லர்" இது ஆபிரஹாம் லிங்கன் தனது தலைமை ஆசிரியருக்கு எழுதிய கடித வரிகள் ஆகும். இன்றைய சமுதாயத்திற்கும் சூழலுக்கும் பொருத்தமான வரிகள் ஆகும். எனவே ஒரு சில ஆசிரியர்கள் செய்யும் தவறை வைத்து ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் தவறாக்குவது சிறந்தது அல்ல.

ஆசிரியர்கள் தமக்குரிய ஒழுக்க கோட்பாடுகள் மற்றும் கருத்துக்களைக் கடைப்பிடித்து அதற்கு ஏற்ப ஒழுகுவதன் மூலம் சிறந்த ஒழுக்கமுள்ள சமுதாயத்தை கட்டி எழுப்ப முடியும்.

இன்றைய ஆசிரியர்களும் அவர்களுடைய ஒழுக்க நிலைமைகள் பற்றி ஆராய வேண்டிய தேவை இருக்கிறது. அந்த வகையில் அண்மைக்காலமாக பாடசாலையின் ஆசிரியர்கள் மீதான பல பிரச்சனைகள் வெளிக் கொணரப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அதுவும் மலையம் உட்பட பல பிரதேசங்களிலும் மாணவர்களின் நடத்தையில் ஆசிரியர் சிலவரு பார்வைகளும் அவர்களின் நடத்தைகளும் வித்தியாசமான முறையில் சேர்க்கப்படுவதன் காரணமாக ஆசிரியர்களின் ஒழுக்க விழுமியங்களுக்கும் சீரான நடத்தைகளுக்கும் குந்தகம் விளைவிக்கும் அளவிற்கு ஆசிரிய சமூகத்தையே சந்தேகம் கொண்டு பார்க்கின்ற நிலைமை இன்று நாடு பூராகவும் காணப்படுகின்றது.

அத்துடன் கடந்த ஒரு சில வருடங்களிற்கு முன்னர் மலையகத்தில் இடம்பெற்ற ஒரு சமபவம் ஒட்டு மாத்த ஆசிரியர் சமூகத்திற்கே தலைகுனிவை ஏற்படுத்தியிருந்தது. அதாவது கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தான் கற்பிக்கும் மாணவியிடம் பாலியல் ரீதியாக அத்துமீறிய செயற்பாடு இடம்பெற்றமையைக் குறிப்பிடலாம்.

அதுமட்டுமல்லாது இன்றைக்கு எப்பத்திரிகையை எடுத்தாலும் அந்தப் பத்திரிகையினுடைய ஏதோவொரு மூலையில் ஆசிரியரின் லீலை அரங்கேறியிருக்கும் அந்தளவிற்கு சீர்கேட்டிற்கு உரியவ்களாக இன்றைக்கு ஒரு சில ஆசிரியர்கள் மாறியுள்ளனர். அத்துடன் இவ்வாறான சீர்கேடுகள் நமது பிரதேசப் பாடசாலைகளில் அரங்கேறாமலும் இல்லை.

அண்மையில் ஒரு செய்தி. ஒரு ஆசிரியர் ஒரு மாணவியினது வீட்டுத் தொலைபேசி அலக்கங்களைப் பெற்றுக் கொண்டு அந்த மாணவிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதாகவும் மற்றும் குறுஞ்செய்தி, பிறந்த நாள் வாழ்த்து மற்றும் சில தகாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைப் பிரயோகங்கள் பாலியல் ரீதியிலான கதைகளைக் கூறியதாகவும் சில தகவல்கள் சமூக வலைத்தளங்களில் உலவி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஒவ்வொருநாளும் ஆசிரியர்கள் பற்றிய தவறான மற்றும் நெறி பிளழ்வான செயற்பாடுகள் அரங்கேறிய வண்ணம் உள்ளன. மற்றம் இன்ற இருக்கும் ஆசிரியர்கள் மாணவிகளை மாணவிகளாக பார்ப்பது கிடையாது. கவர்ச்சிப் பொருளாகவே பார்க்கின்றார்கள். மற்றும் இன்று பல ஆசிரியர்கள் இளைஞர்களாக இருப்பதால் அவர்களாலும் இவ்வாறான சிர்கேடுகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக காதல் லீலைகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

கல்வி தொடர்பாக பேச வேண்டும். உங்கள் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டும் என்று தொலைபேசி இலக்கங்களை பெற்றுக் கொண்டு அநாகரிகமாக நடந்து கொள்கின்றார்கள். சிலர் பாடம் நடாத்தி விட்டு உங்களிற்கு ஏதாவது சந்தேகமாயிருந்தால் எனது தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள என கரும்பலகையில் அவர்களது தொலைபேசி இலக்கங்களை எழுதிவிடுவார்கள். அதன் மூலமாக மாணவ மாணவிகளுக்கு ஆசிரியரின் தொலைபேசி இலக்கம் சென்று விடுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களை ஒரு சில வக்கிர எண்ணம் கொண்ட ஆசிரியர்கள் தவறாகப் பயன்படுத்தி மாணவர்களொடு தவறான தொடர்பாடல் மேற்கொள்கின்றார்கள். இதனாலேயே நாள் தோறும் மாணவரோடு ஆசிரியை ஓட்டம் மாணவியோடு ஆசிரியர் ஓட்டம், அதிபர் பாலியல் சேட்டை, ஆசிரியரின் பாலியல் தொலைல்லை, கல்வி அதிகாரியால் மாணவி பலாத்காரம் என்றவாறான பல செய்திகள் இன்று அதிகம் வருகின்றன.

அண்மையில் 2019.10.19 மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் பெண்கள் பாடசாலை ஒன்றில் ஆங்கில பாடம் கற்பிக்கும் 55 வயதான ஆசிரியர் ஒருவர் அங்கு கல்வி கற்கும் 7ம் வகுப்பு மாணவிகளின் வகுப்பிற்குக் கற்பிக்கச் சென்ற நிலையில் மாணவிகள் சிலரிடம் தகாத வார்த்ததைப் பிரயோகம் மற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார் என்று செய்தி வெளியாகியது.

மேலும் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை ஒன்றில் பாடசாலை நேரம் மதில் பாய்ந்து வீட்டுக்குச் சென்ற ஆசிரியர், தொடர்பில் வெளியான செய்தி, மற்றும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியரால் ஒரு மாணவன் பாலியல் துஷ்பிரயோலகத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும் ஒரு சம்பவம் மற்றம் யாழில் பாடசாலை மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுக்கும் ஆசிரியர்கள் மற்றும் முல்லைதீவில் 20 மாணவிகள் மீது பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்ட ஆசிரியர், இவ்வாறு பல்வேறு குற்றச் செயல்களும் ஒழுக்க சீர்கேடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

ஒரு காலத்திலே ஆசிரியர் பாத்திமானது சமுதாயத்தில் மிகவும் மதிக்கப்படுகின்ற ஒரு பாத்திரமாகக் காணப்பட்டது. ஆனால் அப்பாத்திர தன்மைகள் அண்மைக்காலமாக ஒரு பாத்திரமாகக் காணப்பட்டது. ஆனால் அப்பாத்திர தன்மைகள் அண்மைக்காலமாக சற்று வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றது. ஆசிரியர் பணி என்பது ஒரு சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்று ஆசிரிய தொழிலின் வாண்மையைப் புறந்தள்ளி விட்டு செயற்படுகின்றமையைக் காணலாம். இதனாலேயே பல்வேறு ஒழுக்க சீர்கேடுகள் இன்று இடம்பெறுகின்றது.

ஒவ்வொரு ஆசிரியரும் பாடசாலையில் தாம் கற்பிக்கும் மாணவர்களை சிறந்த நற்பிரஜையாக உருவாக்க இலட்சியத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஒழுக்க சீர்கேடுகளை தவிர்த்தும் சமுதாயத்திற்கு சேவையாற்றக் கூடியவர்களாக உருவாக்க வேண்டும்.

மனிதன் யாருமே தவறு செய்வதில்லை. தவறு செய்யக் காரணம் அவன் சரி, பிழை பற்றி அறிந்திராததே காரணம் என்கிறார் சோக்ரட்டீஸ். இதற்கமைய ஆசிரியர்கள் அவரவர் சமூகத்திற்கும் தமது தொழிலுக்கும் ஏற்ற ஒழுக்க விழுமியப் பண்புகளையும் அறக் கருத்துக்களையும் விழுமியக் கல்வியின் முக்கியத்துவத்தையும் விளங்கி அதன் அவசியத்தை மாணவருக்கு வளக்கிக் கூறல். நாட்டிற்கும் சமூகத்திற்கும் சேவையாற்றக் கூடிய நற்பிரஜைகளை பாடசாலைகளில் உருவாக்குபவர்களாக ஆசிரியர்கள் மாற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கைக் காலத்தில் கட்டிளமைப்பருவத்தின் முக்கியத்துவம்

திரு. து.வாகீஸ்வரன்,
ஆசிரிய கல்வியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உலக சுகாதார ஸ்தாபனம் பத்து வயதிற்கும் பத்தொன்பது வயதுக்கும் இடைப்பட்ட காலத்தை கட்டிளமைப்பருவம் என வரையறுத்துள்ளது. இவ் கட்டிளமைப்பருவத்தினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

10 - 13 வயது - முன்கட்டிளமைப்பருவம்

14 - 16 வயது - மத்திய கட்டிளமைப்பருவம்

17 - 19 வயது - பின் கட்டிளமைப்பருவம்

இவ் கட்டிளமைப்பருவத்தில் உடல் ரீதியான, உளரீதியான, சமூக ரீதியான பல்வேறு மாற்றங்கள் ஏற்படும் காலப்பகுதியாகும். இது ஒரு மாறுநிலைப் பருவமாகும். பிள்ளைப் பருவத்தின் இறுதிப்பகுதியை கடக்கும் ஒருவர் கட்டிளமைப்பருவத்தை நோக்கி செல்கின்றார். இக்காலப்பகுதியில் முதன்மை பாலியல்புகளின் தன்மையையும் துணைப்பாலியல்புகளின் தன்மையையும் அனுபவிக்கும் பிள்ளை பலவிதமான உளவியல் பிரச்சினைகளை எதிர்நோக்குவார். இதனை மாறுநிலைப்பருவம் என அழைக்கலாம். இக்காலத்தில் மனவழுத்தங்கள் நிறைந்து காணப்படும். நடத்தையிலும் சிந்தனையிலும் புதியதோர் மனப்பாங்கு காணப்படும். அது ஒரு புயல் வீசும் பருவம் எனவும் குறிப்பிடலாம்.

இக் கட்டிளமைப் பருவம் எனப்படுவது ஒரு பிள்ளையை வளர்ச்சியடைந்த ஒரு மனிதனாக உருவாக்குகின்ற பருவம். இது ஒரு இடைநிலைப்பருவமும் ஆகம். பற்பல மாறுதல்களை உருவாக்குகின்ற, உள்வாங்குகின்ற உடலும் மனமும் வளர்ச்சியடைந்து வலிமை பெற்று உலகத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வல்லமையை பெறுகின்ற பருவமும் கூட. ஒருவர் தன்னைப் பற்றி தன் தேவைகள் பற்றி எதிர்காலம் பற்றி உணரவும், தேடவும் தலைப்படுகின்ற பருவமே ஆகும். இலட்சியங்கள் அதிகம் உள்ள பருவம். மிக அதிக புரட்சி மனப்பான்மையும், புதியது படைக்கும் ஆர்வத்தையும் உடைய பருவம். மற்றும் இப்பருவம் சிக்கல்களையும் நெருக்கீடுகளையும் ஏற்படுத்தக் கூடியது. இது ஒரு மாறுபடுகின்ற இடைநிலைப்பருவமாக காணப்படுகின்ற காரணத்தினால் இக்கட்டிளமைப்பருவத்திலே பல குழப்பமான நிலைகள் ஏற்பட்டு விடுகின்றன.

அதில் முக்கியமானது தமது அடையாளம் சார்ந்த குழப்பமாகும். தாம் இன்னமும் சிறுவர்களா அல்லது வளர்ந்து விட்ட பெரியவர்களா என்பதை அடையாளம் கண்டு தமது எல்லைகளை தீர்மானிப்பதிலே இவர்கள் குழப்பமடைகிறார்கள். இவர்கள் இலட்சிய மயப்படுத்தப்பட்ட வாழ்க்கைக்கும் யதார்த்தத்திற்கும் இடையேயான வேறுபாட்டை புரிந்து கொள்வதில் சிக்கல்களை அனுபவிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பருவத்தினுடைய மிக முக்கிய ஒரு இயல்பாகக் கருதப்படக் கூடியது பரீட்சித்துப் பார்த்தல் என்பதாகும். இப்பரீட்சித்து பார்த்தல் என்கின்ற இயக்க விசை இப்பருவத்தின் எல்லா விடயங்களிலும் வியாபித்து இருக்கும் புதிய உறவுகளை ஏற்படுத்துதல், நட்புக்களை உள்வாங்கல் போன்றவற்றில் உறுதித்தன்மையை தீர்மானிப்பதிலும் இப் பரீட்சித்து பார்த்தல் இடம்பெறும். எனினும் சில சந்தர்ப்பங்களில் இவ் உறவுகள் தெளிவின்றிய வரையறைகளோடும் பிழையான புரிதல்களோடும் அமைந்து சங்கடங்களை தோற்றுவிக்கலாம். இவ்வகையாக பரீட்சித்து பார்த்தல் சில வேளைகளில் அவர்களுக்கு தீர்வாகவும் மாறிவிடலாம். போதைவஸ்துக்களின் அறிமுகம், பால்வினை நோய்களின் கடத்துகை போன்ற பாரதூரமான விளைவுகளுக்கும் இட்டுச் செல்லலாம்.

இப்பருவத்தினருடைய இன்னுமொரு முக்கிய இயல்பு சமவயது குழவினரின் செல்வாக்கால் ஈர்க்கப்படல் ஆகும். இது இவர்களுக்கு பலவிதமான அனுபவங்களைப் பெற வழிவகுக்கின்றது. இது இவர்களது ஆளமை வளர்ச்சிக்கும் உதவும் எனினும் சில அனுபவங்கள் சிக்கலான விளைவுகளுக்கும் வழிகாட்டி விடலாம் என்பது மறுப்பதற்கில்லை. குறிப்பாக இந்த பருவ பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற உடல், உள சக்தி பெருக்கினை சரியாக அடையாளம் காண்பதோடு அவ்வாறான சக்தி தீங்கில்லாத வழிகளில் செலுத்தப்படுவதை ஊக்குவித்தல் வேண்டும்.

**கட்டிளமைப்பருவ மாற்றங்கள்**

கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானதாகும். இம் மாற்றங்கள் உடல், உள, சமூக மற்றங்கள் ஆகும். இப் பருவத்தில் உடல் ரீதியான மாற்றங்களில் அக மற்றும் புற உடல் உறுப்புக்கள் முழு வளர்ச்சி அடைகின்றன. உயரம் மற்றும் எடை இப்பருவத்தில் அதிகரிக்கின்றது. சுரப்பிகள், நரம்பு, மண்டலம், ஜீரண மண்டலம், இதயம், இரத்த ஓட்டம், நோய் தடுப்பு சக்தி முதலியன அதிக அளவில் இயங்குகின்றன.

இப்பருவத்தில் ஒருவரிடம் ஏற்படும் முக்கியமான வளர்ச்சி முதிர்ச்சி என்பதாகும். முதிர்ச்சி என்பது உடல் மற்றும் உள்ளம் இவற்றின் முழு வளர்ச்சியாகும். ஆண்களுக்கு முதிர்ச்சி பல்வேறு காரணங்களால் மாறுபடுகின்றது. பொருளாதார சூழ்நிலை, வாழ்க்கைத் தரம், திருமணம் நிகழும் காலம் போன்றவைகள் பெண்களின முதிர்ச்சிக்கு காரணமாக அமைகின்றன. அதே போன்று உள, சமூக ரீதயான மாற்றங்களாக புதியவற்றை கையாண்டு பார்க்க முனைதல், தமது உடலின் வடிவம், தலை முடி அலங்காரம் தொடர்பான ஆர்வம், தனது தனித்துவத்தை வெளிக்காட்ட முனைதல், சமூகநீதி, நியாயம் பேசல், புரட்சிகரமான கருத்துக்களை வெளியிடுதல். சமவயதுடையோரிடம் பழகுதல், தாமே தீர்மானம் எடுக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் முனைதல், எதிர்காலம் தொடர்பான கரிசனை காட்டல் போன்றனவாகும்.

இது போன்று இவ் கட்டிளமைப்பருவத்தினர் பல்வேறு பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கின்றார்கள். தம்மை மற்றவர்களோடு ஒப்பிடுதல், பாலியல் உணர்வுகள் போன்றவற்றை குறிப்பிட முடியும். கட்டிளமைப்பருவத்தில் ஏற்படும் உடல் உள சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் யாவும் ஒவ்வொருவரினதும் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் அமையவே நிகழும் எனவே வாழ்க்கையில் வெற்றி பெறுவது தொடர்பான தெளிவான விளக்கத்துடன் செயற்பட்டு எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்கு தேவையான திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு இப்பருவம் உதவும்.

ஸ்ரான்லி ஹோல் அமெரிக்காவின் முன்னோடி உளவியலாளரும் கல்வியலாளரும் ஆவார். இவர் குழந்தை வளர்ச்சி மேம்பாடு மற்றும் பரிணாம வளர்ச்சி கொள்கைகளில் ஆர்வமுள்ளவராக இருந்தார். ஹால் "புயலும்" "மன அழுத்தமும்" என்ற இரு சொற்கள் வளர் இளம் பருவத்தினரின் மனநிலையை, குறிக்கும் என்றார். இச் சொற்றொடர்கள் இவருடன் பணிபுரிந்த விவிலியம் யுனஸான் 1889 ஆம் ஆண்டு தாம் வெளியிட்ட "எக்கனமி இன் இன்டலச்சுவர் வெர்க்" எனும் வளர் இளமைப்பருவத்தினர் தொடர்பான கட்டுரையில் இதனை வெளியட்டுள்ளார். பெற்றோர்களுடன் மாற்றுக் கருத்து கொள்வது மன நிலையில் இடையூறு ஏற்படுவது, மற்றும் ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது சகபாடிகளின் சேர்க்கை போன்றவற்றை இக்கருத்து உள்ளடக்குகின்றது. தற்காலத்தில் உளவியலாளர்கள் புயலும் மன அழுத்தமும் அனைத்து இளம் வயதினருக்கும் வருவதில்லை. அவ்வாறு இருந்தாலும் அது ஒரு குறுகிய காலம் தான் வரும் என்று கருதுகின்றனர்.

ஹால் வளர் இளம் பருவம் குறித்து Adolescense its psychology and its relations to psychology Anthropology, Sociology, Sex crime and Religion (1904) எனும் நூலினை எழுதியுள்ளார். அதில் உள்ள இளம் பருவத்தினர் குறித்த அவர்கள் கருத்து இன்றளவும் பயனுள்ளவை. ஆண்கள் வளர் இளம் பருவத்தில் உணர்ச்சியை நாடுபவர்களாகவும் போர்க் குணம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். இளம் வயதில் குற்றம் அதிகம் நடக்கவும் வாய்ப்பு உண்டு என்றும் குறிப்பிடுகின்றது.

இதுவரை நோக்கியவற்றில் இருந்து பொதுவாகவே கட்டிளமைப்பருவத்தினர் தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களே உருவாக்கம் பெற்று வந்துள்ளன. பெற்றோர்களிடம் சகபாடிகளிடமும் கட்டிளமைப் பருவத்தினர் கொண்டுள்ள இடைத்தொடர்பு குறித்து நோக்கும் போது இப் பருவத்தில் பெற்றோர்களுடன் முரண்பாடுகள் தவிர்க்கப்பட முடியாதா என்ற வினாவே ஆய்வாளர் மத்தியில் முதலில் எழுந்தது. எனினும் ஆய்வுக்குட்படுத்திய அநேகர் பெற்றோருடன் உடன்பாடான நிலையை கொண்டிருப்பதாக குறிப்பிடுகின்றார்கள். இதற்கு இப்பருவத்தினர் கட்டிளமைப்பருவத்திற்கு முன் நற்பண்புகளை கொண்டிருந்தமையால் அவை தொடர்பவதற்கும் வாய்ப்பு உண்டு என கருதுகின்றார்கள். குறைந்த வீதத்தினரே சமூகத்தில் எதிர் நடத்தையை வெளிக் காட்டுகின்றனர். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களில் 10% இலும் குறைந்த குடும்பங்களே கட்டிளமைப் பருவத்தில் பெற்றோர், பிள்ளைகள் தொடர்பான கணிசமான அளவு பிரச்சினைகளை விளைவிப்பதாக தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு குழப்பங்களில் ஈடுபடுவோரும் தமது நண்பர்களினை தெரிவு செய்தலிலே இவ் முரண்பாடு (பெற்றோர் - பிள்ளை) தோற்றம் பெறுகின்றது என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமைப்பருவ பிள்ளைகள் மீது பெற்றோர்கள் அதிக செல்வாக்கை மேற்கொள்ள விரும்புகின்ற போதும் நண்பர்களுடனும் சகபாடிகளுடனும் ஆன இடைத்தொடர்புகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. பிள்ளைப்பருவத்தை விட கட்டிளமைப்பருவத்தினர் அதிக அளவுக்கு சமூகவலையமைப்பையும், சமூக சூழமைவும் சமுதாயமும் அவர்களின் பெறுமானங்கள் எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றில் அதிகளவில் செல்வாக்கு செலுத்துகின்றது. எனினும் சகபாடிகளுடனான உறவும் ஈடுபாடும் தமது பிள்ளைகளிடத்தே விரும்பத்தகாத நடத்தைகளை உருவாக்கிவிடும் என்று பெற்றோர் எண்ணுகிறார்கள். எனினும் குறித்த பிள்ளைகளிடம் பிள்ளைப் பருவத்தில் காணப்பட்ட, உருவாக்கப்பட்ட பண்புகளும், நடத்தைகளும் சகபாடி உறவினால் மீள்வலியுறுத்தப்படும் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். ஏனெனில் கட்டிளமைப்பரவத்தினர் தமது வயது தமது சமூக வகுப்பு, தமது இனம் ஒத்த தன்மைகளை கொண்டுள்ளோரிடம் தான் நட்பை உருவாக்கி கொள்கின்றனர் என கூறப்படுகின்றது. எனவே சகபாடிகள் செல்வாக்கு சில வேளைகளில் விரும்பத்தகாத நடவடிக்கைகளை தோற்றுவிக்க கூடும் எனினும் நேரான முறையில் சகபாடிகள் ஒருவர் மீது ஒருவர் செல்வாக்கு செலுத்த முடியும்.

**கட்டிளமைப்பருவத்தை அடையாளப்படுத்தல்**

கட்டிளமைப்பருவத்தில் அடையாளப்படுத்தல் என்பது கவனத்திற்குரியது. ஒருவரின் நடத்தையை வழிநடத்தக்கூடிய பெறுமானங்கள், இலட்சியங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றை அடையாளம் என்பதாக உளவியலாளர்கள் கருதுகின்றார்கள். மனிதனது வாழ்க்கை வட்டத்திலே கட்டிளமை பருவத்தினரே முதற்தடவையாக அடையாளப்படுத்தல் விவகாரங்கள் தொடர்பாக கருத்துள்ள வகையில் கையாள்வதற்கான திறன்களை பெற்றுக் கொள்கின்றார்கள். இக்காலப்பகுதியில் சுயம் பற்றிய எண்ணக்கரு வலுப்பெறுகின்றது. இவ்வாறு நிலைநிறுத்தப்பட்ட பண்புகளுக்கு அப்பால் கட்டிளமைப்பருவத்தினர் தம்மை மதிப்பீடு செய்ய தொடங்குகின்றனர். சகபாடிகளினால் ஏற்படும் தன்மை, கல்விசார் ஆற்றல்கள், விளையாட்டுத்திறன் சம்பந்தமான ஆற்றல்கள், தொழில் ஆற்றல்கள், சொந்த உளத்தோற்றம் போன்றவை சுயத்தை வரையறை செய்வதற்கான சில முக்கிய அம்சங்களாகும். எனவே கட்டிளமைப்பருவத்தில் உள்ள ஒருவர் நான் யார்? எனும் வினாவுக்கு விடையளிப்பதற்கு இசைவானதும் ஒரு முகமானதுமான முழுமையைக் கொண்டிருப்பதற்காக ஒன்றிணைக்கப்பட வேண்டிய பல சுய எண்ணக் கருக்களை கொண்டிருப்பார் என கூறப்படுகின்றது.

இந்த வகையில் ஸ்ரான்லி ஹோல்ட் குறிப்பிட்ட கட்டிளமைப்பருவம் என்பது புயலும் நெருக்கீடும் நிறைந்த பருவம் என்பது அவர் அதற்கு முன்வைத்த கருத்துக்களின் மூலம் அக் காலத்தில் பெருமளவுக்கு பொருத்தமுடையதாக காணப்பட்டாலும் தற்கால ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட முடிவுகளும் இப்பருவம் தொடர்பான இவரது கருத்துக்களோடு ஒத்து போவதாக காணப்பட்டாலும், மிக குறைந்தளவு வீதமான கட்டிளமைப்பருவத்தினரே இவ்வாறு நெருக்கீடுகளுக்கு ஆளாகின்றார்கள் எனவும் பெரும்பாலான கட்டிளமைப்பருவத்தினர் பெற்றோருடையதும், ஆசிரியருடையதும் சிறந்த வழிகாட்டலில் புயலும் நெருக்கீடுகளும் குறைந்தவர்களாக தமது கட்டிளமைப்பருவத்தினை ஆக்க பூர்வமாக ஆக்கி கொள்கின்றார்கள் எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சவால்களை எதிர்கொள்ள சமூக மனவெழுச்சித் திறன்களின் அவசியம்

செல்வி. விக்னேஸ்வரி கந்தசாமிஐயர்,
ஆசிரிய கல்வியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி.

**அறிமுகம்**

பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பாடவிதானத்தில் மாணவர்களுக்கு அறிவை வழங்குவது மட்டுமல்லாது அவர்களின் மனப்பாங்கு, திறன்களை மேலும் விருத்தி செய்து தேர்ச்சிமிக்க குடிமக்களை இந்நாட்டுக்கு அர்ப்பணிப்புச்செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் இன்றைய போட்டித்தன்மை மிக்க கல்வி முறைமையினால் மாணவர்கள் அதிக கவனஞ் செலுத்துவது தங்கள் அறிவை மென்மேலும் விருத்தி செய்து பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைந்து கொள்வதே ஆகும். பாடசாலையினுள் வகுப்பறையில் மற்றும் வகுப்பறைக்கு வெளியே சுற்றுச்சூழலில் மாணவன் பெற்றுக் கொள்ளும் பல்வேறுபட்ட அனுபவங்கள் அவர்களின் சமூக மனவெழுச்சித்திறன்களில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. பாடசாலையிலிருந்து சமூகத்திற்குப் பிரவேசிக்கும் நபர்கள் அறிவைப் போலவே சிறந்த ஆளுமை விழுமிய குணப்பண்புகளைக் கொண்ட சமநிலை மிக்கவர்களாக சமூகத்திற்கு அர்ப்பணிப்பு செய்யப்படுவது இன்று மிகவும் அவசியமாக வேண்டப்படுவதொன்றாகும்.

இலங்கை தற்போது கல்வியில் 90% க்கும் அதிகமான எழுத்தறிவு விகிதத்துடன் உலகின் முன்னணி நாடுகளுள் நன்றாக விளங்ககின்றது. அதே சமயம் கல்வியில் உயர்மட்ட சாதனைகளைப் படைத்து அனைத்துத் துறைகளிலும். சிறந்த பெறுமானத்தை வெளிக்காட்டும் நிலைமையும் காணக்கூடியதொன்றாக உள்ளது. உலகெங்கும் பரந்து காணப்படும் இலங்கையைச் சேர்ந்த அறிஞர்கள் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுப் பிரகாசித்து வருகின்றனர். ஆனால் இன்றுள்ள இளைய சமூகத்தினர் கல்வியுடன் கூடிய மனிதப்பண்புகளின் வளர்ச்சி குறைந்த அளவில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலை சமநிலை ஆளுமை கொண்ட பிரசையைத் தோற்றுவிக்கும் நோக்கங்களை அடைவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்பட்டாலும் கல்வியே இதற்கெல்லாம் வலுவான காரணியாக நோக்கப்படுகிறது.

பல நூற்றாண்டு காலமாகச் செயற்பட்டு வருகின்ற கல்விச் செயற்பாட்டில் ஆளுமை பற்றிய எண்ணம் தொடர்பில் தீவிர கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. இதன் அடிப்படைக் கற்றல் கொள்கைகள் மற்றும் கற்றல், கற்பித்தல் அணுகுமுறைகள் நுட்பங்களைப் பயன்படுத்ததல் தூண்டுதல் மற்றும் ஆசிரியர்களின் வகிபாகங்கள் மாற்றமடைதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலுக்கான சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் இவ்வாறான பல துறைகளினூடாக குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சி தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. கற்றல், நினைவாற்றல், நுண்ணறிவு, ஊக்கமளித்தல், அறிவாற்றல், கற்றல் மற்றும் கருத்தாக்கம் மற்றும் ஆளுமை போன்ற பல செயன்முறைகள் கல்விச் செயற்பாட்டில் உள்ளடங்கியுள்ளன. இத்தகைய செயல்முறைகளை அடைந்து கொள்வதன் மூலமும் தரமான கற்றல் - கற்பித்தலை நடைமுறைப்படுத்திப் பேணுவதன் காரணமாகவும் சமநிலையான ஆளுமையையும் மற்றும் தேர்ச்சிகளையும் கொண்ட பிள்ளைகளை சமூக மயமாதலினூடாக எதிர்பார்க்கப்படுகிறது. நவீன தொழிநுட்பம் தொழில்மயமாதல் என்பவற்றுடன் இன்றைய சமுதாயம் மிக வேகமாக முன்னேறிச் செல்வதைக் கண்டு கொள்ள முடிந்த போதிலும் அதனுடன் ஒப்பீடு செய்யும் போது மனிதப் பண்புகளின் வளர்ச்சி பல்வேறு காரணிகளால் பின்தங்கியுள்ளது வருத்தத்திற்குரியது.

போட்டிச்சூழல் மிக்க கல்விக்கோலத்தில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையும் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டதாகவும் உயர்கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் மற்றும் பல்கலைக்கழகத்தினுள் நுழைதலும் தொழில் வாய்ப்புக்களும் வரையறுக்கப்பட்டதாலும் கல்வியின் இறுதி இலக்கான நற்பிரசைகளை உருவாக்குதல் எனும் நோக்கத்தை அடைவதில் இன்று பிரச்சினையான சூழலைத் தொற்றுவித்துள்ளது. இன்றுள்ள மாணவர் சமூகத்தினரிடம் அதிதீதவித சுயநலம், பிறர் மீதான பச்சாதாபமின்மை, சமூகவிநோத நடத்தைக்கோலம், மனித நேயமின்மை, பிறர் கண்ணியத்திற்கு அவமரியாதை செய்தல், உளநலக்கோளாறுகள், ஒத்துழைப்பின்மை, மோசமான சமூக நடத்தைக் கோலங்கள் போன்ற ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் காணப்படுகின்றன. கல்வி தொடர்பான உலகளாவிய பிரகடனம், மற்றும் இலங்கையின் கல்விக் கொள்கையை உருவாக்குவத தொடர்பான பல ஆவணங்கள் கல்விச் செயற்பாட்டில் சமூக மனவெழுச்சித் திறன்களை வலியுறுத்துகின்றன.

சமூக மனவெழுச்சித்திறன்கள் என்பது 'எமது எண்ணங்கள் உணர்வுகளை, மற்றும் நடத்தைகளை ஒழுங்குபடுத்தும் ஆற்றல்களின் கட்டமைப்பு எனலாம். (OECD.org P.4) 'ஆளுமைப்பண்புகள், உந்துதல்கள், மற்றும் பெறுமானங்கள் போன்ற உளவியல் எண்ணக்கருக்களை விவரித்துக் கூறப்பயன்படுத்தப்படும் பொதுவான ஒரு கருத்தாகும்.

(Danner, 2021 p.4) க்ரீன் பெர்க் உட்பட ஏனைய அறிஞர்களின் கருத்துப்படி (பக்.2003,.276-277) சமூக மனவெழுச்சிதிறன்களில் கவனஞ் செலுத்தும் போது ஐந்து இயல்புகளைச் சுட்டிக் காட்டுகின்றது.

**சுயவிழிப்புணர்வு** (Self-awareness)

1. உணர்வுகளை இனங்கண்டறிதல் (Identifying -motions)
2. சுய உணர்வு பெறுவதில் (Accurate self pereqtion)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பலங்களைக் கண்டறிதல் (Recogning Strengths)
4. தன்னம்பிக்கை (self confidence)
5. சுய செயற்றிறன் (Self - efficacy)

**சுய முகாமைத்துவம்** (Self - management)

1. உணர்வுகளைக் கட்டுப்படுத்தல் (Impulse control)
2. மன அழுத்த முகாமைத்துவம் (Stress management)
3. சுய ஒழுக்கம் (Self dricaplire)
4. சுய ஊக்கம் (Selh motiration)
5. இலக்கு நிர்ணயம் (Goal - setting)
6. நிலுளத்திறன்கள் (Organieational skils)

**ஆளிடைத் தொடர்பாடல்** (Relationship - skill)

1. தொடர்பாடல் (Communication)
2. சமூக உறவைப் பேணல் (Social engagement)
3. உறவைக் கட்டியெழுப்பல் (Relationship – buildug)
4. ஓர் அணியாக செயற்படல் (Teamwork)

**சமூக விழிப்புணர்வு** (Social Awareness)

1. பல்வேறு கோணங்களில் நோக்குதல் (Perspective - taking)
2. பச்சாதாபம் (Tmpathy)
3. பன்முகத்தன்மையை பறித்தல் (Appreciating dirersity)
4. மற்றவர்களுக்கு சுயமரியாதை செய்தல் (Respect trothers)

**பொறுப்பான தீர்மானம் எடுத்தல்**

(Responsible decision - making)

1. பிரச்சினையை இனங்காணுதல் (Identifying problems)
2. நிலைமையைப் பகுப்பாய்வு செய்தல் (Analyging situations)
3. பிரச்சினையைத் தீர்த்தல் (Solving problems)
4. கணிப்பீடு செய்தல் (Evalating)
5. பிரதிபலிப்பு (Reflecting)
6. தார்மிகப் பொறுப்பு (Ethical Responsibility)

(Laburova, 2020 -p.276-277)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் கல்விக்கொள்கைகள்**

ஏட்ரிகாபோரே என்பவரின் தலைமையில் Unesco நிறுவனத்தின் மூலம் 1972 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'வாழ்க்கைக்கான கல்வி' என்ற அறிக்கையில் வாழ்க்கைக்கான கல்வி கற்றலில் அடிப்படை அம்சங்களையும் 21 பரிந்துரைகளையும் கோடிட்டு காட்டியுள்ளது. இதில் சமூக மனவெழுச்சித்திறன்கள் விருத்தியடையும் விதத்தில் கல்விமுறைமையை எவ்வாறு வடிவமைப்பது என்பது பற்றியம் பரிந்துரைத்துள்ளது.

1996இல் ஜெக்டெலாஸ் (Jacgues Delors) அறிக்கையில் 6 அம்சங்களுடன் 21ஆம் நூற்றாண்டின் சவால்களைச் சமாளிக்க நான்கு முக்கிய தூண்களில் ஒன்றான சேர்ந்து வாழக் கற்றல் என்பது சமூக மனவெழுச்சித்திறன்களின் விருத்தியைக் காட்டியுள்ளது.

1992,2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையில் அனைத்தும் கல்விச் செயற்பாடுகளில் சமூக மனவெழுச்சித்திறன்களின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி நிற்கின்றது.

2000 - 2015 உலக அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் விதமான அபிவிருத்தி இலக்குகள் (MDG) என்பதன் கீழ் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி என்ற அணுகு முறையிலும் இத்திறன்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

2015 - 2030 வரை செயற்பட்ட வருகின்ற நிலைபேறான வளர்ச்சி நோக்குகள் 17 இன் கீழ் நான்காவது நோக்கமான 'நியாயமான தரமான கல்வியை உறுதி செய்வது" என்பதிலும் 2015 - 2025 ஆண்டுக்காக வெளியிடப்பட்ட 'கல்வித்துறை அபிவிருத்தித்திட்டத்தில் முன்னுரிமைத்துறை 2 நோக்கம் 5 இலும் 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற தேசிய அபிவிருத்திக்கு செயல் ரீதியான பங்களிப்பை வழங்கும் பிரசையை உருவாக்குதல், உற்பத்தி மற்றும் வினைத்திறன் மிக்க ஊழியர்களை உருவாக்குதல், புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், நாட்டைநேசிக்கும் நற்பிரசைகளை உருவாக்குதல், மகிழ்ச்சியாக வாழும் குடும்பத்தை உருவாக்குதல் என்ற இலக்குகளை அடைவதற்காகவும் சமூக மனவெழுச்சித்திறன்களை கல்வி முறையில் உட்படுத்திக் கொள்ளலும் அவற்றைச் செயற்படுத்தலும் என்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

**சமூக மனவெழுச்சிக் கற்றல் நடைபெறும் விதம்**

1. வகுப்பறை
2. பாடசாலை
3. குடும்பம்
4. சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடைமுறைப்பழுத்துதல்**

சமூக மனவெழுச்சித்திறன் தொடர்பான கற்றலைப் பின்வரும் நான்கு விதமான நுழைவுகள் மூலம் பாடசாலையினுள் செயற்படுத்த முடியும். அதன்படி திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் திட்டத்தை நடைமுறைப்படுத்தியபின் மாணவரிடம் எதிர்பார்க்கப்படும் நடத்தை மாற்றங்கள் என்பவற்றைப் பார்க்கலாம்.

**சமூக மனவெழுச்சிக்கற்றல் நுழைவுகள்**

1. கற்றல் நடைமுறைகளில் பயன்படுத்தல்
2. பாடசாலைப் பாடவிதானத்தில் உட்புகுத்தல்
3. நிறுவனம் சார் உபாயங்கள் மூலம்
4. இணைபாடவிதான செயற்பாடகள் மூலம்

**எதிர்பார்க்கும் பெறுபேறு**

1. விருத்தி செய்யப்பட்ட அறிவும் திறனும்
2. உறுதுணையான கற்றல் சூழல்
3. தன்னையும் மற்றவர்களையும் பாடசாலையையும் மதித்தல்

**நடத்தை மாற்றம்**

1. விருத்தி செய்த நேர்மறை சமூக நடத்தை
2. நடத்தை சார் பிரச்சினைகளை இழிவளவாக்குதல்
3. மன அழுத்தம் குறைதல் கல்வி அடைவ மட்டம் அதிகரித்தல்

2015 CASEL Guidei Effective social and gmotinal Learning Programs – middie and High School Edition

**சமூக மனவெழுச்சித்திறன்களைக் கற்றல் தொடர்பான வகுப்பறைச் செயற்பாடுகளினை அமுலாக்குதல்**

**சுய விழிப்புணர்வு**

1. வேலைத்திட்டம் தொடர்பான அறிவூட்டல்
2. வாழ்க்கை அனுபவமீட்டல்
3. மன ஒருமைப்பாடு
4. சுய ஆர்வமூட்டல்
5. எதிர்கால இலக்கு

**சுய முகாமைத்துவம்**

1. மாணவரே சட்டதிட்டத்தை வகுப்பார்
2. நேரசூசியை தயாரிப்பார்
3. வீட்டுப் பயிற்சிக்கான அவகாசம் வழங்குதல்
4. குழுக்கலந்துரையாடல்
5. பிரச்சினை தீர்க்க உதவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எதிர்கால தொழில் வாய்ப்பு தொடர்பான அறிவூட்டல்
7. பரீட்சை தொடர்பான மன அழுத்தம் நீக்குதல்

**ஆளிடைத்தொடர்பு**

1. ஒருவர் மற்றவரை அறிமுகம் செய்தல்
2. சமூக நிகழ்வுகளில் பங்குபற்றல்
3. வகுப்பு வட்டம் உருவாக்குதல்
4. குழு செயற்பாடுகள்

**சுயவிழிப்புணர்வு**

1. சிறந்த செயல்பாடுகள்
2. குழுச் செயற்பாடகள்
3. கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றல்
4. விநோதமான இரசனை மிகுந்த செயற்பாடகளில் ஈடுபடுதல்

**பொறுப்பு வாய்ந்த தீர்மானத்தை மேற்கொள்ளல்**

1. சவால்களை எதிர்கொள்ளும் தைரியம்
2. வீடு மற்றும் சமூகப்பிரச்சினை தொடர்பாக இனங்காணுதல்
3. சூழ்நிலைகளை பகுப்பாய்வு செய்யும்திறன்
4. பிரச்சினை மற்றும் முரண்பாடுகளை தீர்த்தல்
5. நற்செயல்களைப் பாராட்டுதல்

எத்தனையோ கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படல் இன்றளவும் நடைபெறுவது பரீட்சையை மையமாகக் கொண்டு கல்விச் செயற்பாட்டு முறையேயாகும். இவ்வாறான பின்னணியில் பாடசாலைகளில் இத்திறன்களை கற்றலில் செயற்படுத்தும் போது முக்கியமான சில சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

**சவால்கள்**

1. தற்போதுள்ள கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கு சமூக மனவெழுச்சிக்கற்றலை உட்புகுத்தி அதனூடு மாணவரைப் பயிற்றுவித்தல்
2. தற்போதைய போட்டி மிகுந்த சமூகத்தில் சமூக மனவெழுச்சி கற்றலுக்கு பெற்றோர் - மற்றும் பெரியோர் ஊக்கப்படுத்தல்
3. நேரத்தை முகாமை செய்தல்
4. சமூக மனவெழுச்சிக் கற்றல் தொடர்பாகவும் மற்றும் அதனை செயற்படுத்துதல் தொடர்பாகவும் ஆசிரியர்களை அறிவூட்டச் செய்தல்
5. சமூக மனவெழுச்சித் திறன்களைப் பாடத்திட்டத்தினூடாக முறைசார் - முறைசாரா விதத்தில் நடைமுறைப்படுத்தல்.
6. இச்சவால்களை போலவே சில இடர்பாடுகளும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடர்கள்**

1. விளைவை அறிய நீண்டகாலம் எடுக்கும்
2. அளவு ரீதியாக கணிப்பிடுதல் சிரமம்
3. சமூகமட்டத்தில் பரந்தளவிலான கலநதுரையாடல்களும் கட்டியெழுப்ப வேண்ய தேவை

**எது எவ்வாறு இருப்பினும்**

1. பாடசாலையினதம் பிள்ளைகளினதும் கல்வி முன்னெற்றத்தை விருத்தி செய்தல் (Better Accademic Performance)
2. பிள்ளைகளின் மனவெழுச்சி மற்றும் நடத்தைக் கோலங்களை விருத்தி செய்தல் (Inprove attitnde behavior)
3. மாணவர் மத்தியில் ஏற்படும் அசாதாரண நடத்தைக் கோலங்களையும் குறைத்தல் (Pewar negatire behavior) என்பவற்றின் மூலம் சமூக மனவெழுச்சி சார்ந்த கற்றல் தொடர்பான நோக்கத்தை உருவாக்குவது காலத்தின் அவசர தேவையாக உள்ளது. இதற்குப் பாடசாலைகளில் பணியாற்றும் சகல தரப்பினரதும் சகல துறையினரதும் பங்குபற்றல் அவசியமானது என்பது யாரும் மறுப்பதற்கிடமில்லை.

**உசாத்துணை நூல்கள்**


1. கல்வியும் மனிதமேம்பாடும் : கவிதா பதிப்பகம், மதுரை 20
2. கல்வியும் Uniesco 2016, World Social Science report mentreal canada
3. புதிய நூற்றாண்டுக்கான கல்வி 1995 தரவு
4. வருடாந்த செயல்திறன் அறிக்கை - 2021 - கல்வி அமைச்சு - பாடசாலைக் கல்வித்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்தோர் கல்வியினூடு (Andragogy) ஆசிரிய வாண்மை விருத்தியில் தொழில் வழிப்படுத்தல் (Mentoring)

கலாநிதி பா. தனபாலன்,
ஆசிரிய கல்வியியாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இன்று உலகளாவிய ரீதியில் வளர்ந்தவர்களுக்கான கல்வி முறைகளும், பிரயோகங்களும் மிகச்சிறப்பாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இவ்வளர்ச்சி தொழிற்கல்வித் துறையில் பெரும் அபிவிருத்திகளை ஏற்படுத்தியுள்ளது. வளர்ந்தோர் கல்வியின் முதன்மைப் பிரயோகமாக தொழில் வழிப்படுத்தல் செயன்முறை காணப்படுகின்றது. எமது நாட்டில் இத்துறைசார் வாண்மைத்துவம் வளர்க்கப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது. இலங்கையின் வளர்ந்தோர் கல்வியில் சிறுவர்கள் கற்கின்ற அல்லது அவர்களுக்குக் கற்பிக்கின்ற (pedagogy) முறையியல்களே இன்றும் பெருமளவு பிரயோகிக்கப்படுகின்றன. வளர்ந்தோர் கற்கும் (Andragogy) முறையியல்கள் சரியாகப் பின்பற்றாத நிலையும் காணப்படுகின்றது. குறிப்பாக ஆசிரியர் கல்வியில் இந்நிலை அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் வினைதிறன் பொருந்திய ஆசிரியர்களை உருவாக்க முடியாத சூழலும் நிலவுகின்றது. தேசிய கல்வியியற் கல்லூரிகள் தொழிநுட்பத்துறை பல்கலைக்கழகங்களாக மாறி வரும் சூழலில் வளர்ந்தோர் கல்வி முறையியல் மேலு் முக்கியம் பெறுகின்றது.

1. வளர்ந்தோர் கல்வியை வினைத்திறனாக்கி எவ்வாறு பல்கலைக்கழக, தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வியியற் கல்லூரி பயிற்சி ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தலாம்?
2. அவர்களின் தொழில்சார் கற்றல் ஆர்வத்தைத் தூண்ட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை?
3. Andragogy வளர்ந்தோர் கல்வி தொடர்பான நிபுணத்துவ அறிவை ஏன் முழுமையாக பேசிக்க முடியாதுள்ளது?
4. தொழில் வழிப்படுத்தல் செயன்முறைகளை எவ்வாறு வினைத்திறனாக்குவது?
5. வளர்ந்தோர் கல்வி மற்றும் சாதகமான ஆசிரிய தொழில் சார் மனபாங்கை ஏற்படுத்தத் தடையாகவுள்ள காரணிகள் எவை?

**வளர்ந்தோர் கல்விக்கான ஆசிரிய வாண்மைச் சவால்கள்**

புதிய நூற்றாண்டில் நிகழ்ந்து வரும் துரிதகல்வியில் மாற்றமும் அறிவும், தொழில்நுட்ப விருத்தியும், மனிதவளமனப்பாங்கு அபிவிருத்தியும் அடிப்படைகளாகின்றன. இன்று வளர்ந்தோர் கல்வியான ஆசிரிய வாண்மைப் பயில்வுகளாக எமது நாட்டில் பல சவால்களை எதிர் கொள்கின்றன. அவை

1. ஆசிரியர்கள் குறைந்த தொழில் அந்தஸ்தைக் கொண்டிருத்தல்.
2. பயிற்சி வழங்கும் பல்கலைக்கழகங்கள், தேசியகல்வி நிறுவகம், தேசியகல்வியியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிகள், கல்வியமைச்சின் ஏனைய பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் தரமற்ற ஆசிரியபயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள். தேசிய இணைப்பாக்கங்கள் இன்மை.

3. ஆசிரியர்கள் உயர் தொழிலுக்காக அன்றி உயர் உத்தியோகத்தர்களுக்கு வகை சொல்பவர்களாக இருத்தல்.
4. குறைவான விசேடத்துவமும் நன்கு விருத்தியடையாத அறிவு மற்றும் திறன் அமைப்பைக் கொண்டிருத்தல்.
5. சமூக விமர்சனங்கள் அதிகரித்துள்ளமை பாடசாலை சார்பான குற்றச்செயல்களில் ஆசிரியர்கள் கூடுதலாக ஈடுபடுகின்றமை, ஒழுக்க விழுமியங்களைக் கைக்கொள்ளாத நிலை. பாடசாலை அதிபர்களும் வாண்மைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.
6. வேலை செய்யும் நிறுவனத்துடன் அடையாளப்படுத்தல் என்ற போக்கில் கூடுதலாகவும், தொழிலில் குறைவாகவும் ஆர்வம் காட்டுதல்.
7. தமது வாடிக்கையாளரான மாணவர்கள் மீது போதுமானஅக்கறையின்மை.
8. வகைகூறல்கள் அற்ற செயலாற்றுகைகள், பாடசாலைகளில் பெரும் முரன்பாடுகள்.
9. நாட்டின் பொருளாதார கல்வி நடைமுறைகளுக்கான கொள்கை சார் மற்றும் எண்ணக்கருசார் அடிப்படைகளின் வலியுறுத்தல்கள் குறைவு.
10. ஆசிரியர் தொழில் மற்றும் கல்விக்கான ஒழுக்கக்கோவை உறுதியாகப் பின்பற்றப்படாமை. (பேராசிரியர் மா.கருணாநிதி - 2013)

**சவால்களைச் சாதகமாக்குதல்**

இவற்றிலிருந்து மீள்வதற்கு 21 ஆம் நூற்றாண்டு கல்விப்பிரயோகங்களான வளர்ந்தோர் கல்விக்கான Smart தொழில் நுட்பம், செயற்கை நுண்ணறிவு (Artificial In telligence) விழுமியக்கல்வி (Ualue Education) இலகுவான சரியான கணிப்பீடுகள் (Eacy and Accurote Assessment) பிரச்சினைதீர்த்தல், செயற்திட்ட அடிப்படையிலான தொழில் கல்விப் பிரயோகங்களை முழுமையாக நடைமுறைபடுத்த வேண்டியுள்ளது.

அத்துடன் சுயமாகக்கற்று தேடும் சந்தர்ப்பங்களை அதிகரித்தல், கலந்தாய்வுகள், சமர்ப்பிப்புக்கள், கல்விப்பரீட்சியம், அணிக்கலந்துரையாடல்கள், குழுச்செயற்பாடுகள், நுண்முறைக்கற்பித்தல் பயிற்சிப் பிரயோகம், பிரதிபலித்தல் செயன்முறை, செயல் நிலை ஆய்வுகள், தொழில் வழிப்படுத்தல், ஒப்படைகளைச் செய்வித்தல், விடய ஆய்வுகள், பாத்திரமேற்றுநடித்தல், செய்து காட்டுதல்கள், கண்டுபிடித்தல்கள், வெளிக்கள ஆய்வுகள், ஆலோசனைகள் வழிகாட்டல், நவீன தொழில்நுட்ப சாதனங்கள், ஊடகங்கள், கமராக்கள் மூலம் ஆவணப்படுத்தல்கள், குறும்படங்கள், செய்திப்படங்கள், ஆவணப்படங்களை உருவாக்கல் என்ற வளர்ந்தோர் கற்கும் முறைகளைச் சரியாக ஆசிரியவாண்மைப் பயில்வில் பின்பற்றுகின்ற போது ஆசிரியர்கள் தரமான பயிற்சியைப் பெற முடியும் தேசிய கல்வியியற்கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தேசியகல்வி நிறுவகத்திலும் இம் முறைகளைப் பிரயோகிக்கும் ஆற்றலுள்ள மனித - பௌதீக வளங்கள் தேவையாகவுள்ளன. மிக விரைவில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையியல்களில் கற்றல் - கற்பித்தல் நிகழ்கையில் ஆசிரியர் ஆர்வத்துடன் ஈடுபாட்டுடன் கற்கும் நிலையும் மனப்பாங்கு விருத்தியும் ஏற்படும்.

இலங்கையின் ஆசிரியர்கல்வியில் மேற்குறிப்பிட்ட வளர்ந்தோர்கல்வி தொடர்பான நிபுணரத்துவ முறையியல்களையும். திறன்களையும் சிறப்பாகப் பிரயோகிக்க முடியாத சூழல் காணப்படுகின்றமைக்கு பொருத்தமான கொள்கை மாற்றம் இன்னும் நிகழவில்லை. மற்றும் ஓரளவு இவற்றைப் பின்பற்றும் சூழல் காணப்பட்ட போதும் அவற்றைப் பிரயோகிக்காமல் பாரம்பரிய பரீட்சை செயற்பாடுகளை இலகுவாகச் செய்யக் கூடியதாக இருத்தல், பிரயோகித்தல் அடுத்த காரணமாகவுள்ளது. கல்வியியலாளர்களுக்கு பொருத்தமான தொடர்ச்சியான உள்ளூர் - வெளியூர் பயிற்சிகள் இன்மை. மேற்குறிப்பிட்ட வற்றை உறுதியாகப் பின்பற்ற ஒரு முறையான ஒழுக்கக் கோவை காணப்படாமை, கல்வியியலாளர்களுக்கு பொருத்தமான சம்பளம் ஊக்குவிப்புக்கள் இல்லை. ஆசிரிய பயிற்சியை வழங்கும் கல்வியியளாளர்கள் அதிகாரிகளுக்கிடையே வாண்மைத்துவ ஆற்றல் போதுமானதாக இல்லை. பொருத்தமற்ற முரண்பாடுகள் காணப்படுகின்றமை. இவர்களை நிர்வகிப்போருக்கும் நிபுணத்துவ தேர்ச்சி இன்மை. இது தொடர்பான ஆய்வு கொள்கையாக்கங்களும் போதாமலுள்ளது. இவை தொடர்பான தரவட்டங்களோ, கலந்தாய்வுகளோ பெரும்பாலும் நடைபெறுவதில்லை. 21ஆம் நூற்றாண்டு ஆரம்பமாகிவிட்டது. ஆனாலும் எமது கல்விக்கலைத்திட்டம் தேக்க நிலையிலேயே காணப்படுகின்றது. யுனெஸ்கோ - 21 ஆம் நூற்றாண்டுக் கலைத்திட்டப் பிரயோகம் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்கிறது.

**21ஆம் நூற்றாண்டுக்கல்விக் கலைத்திட்டம்**

1. கலாசாரத் தேர்ச்சிகள் (Cultural Competency) மனிதத்துவ மாண்பை மேம்படுத்தல்.
2. ஒன்றிணைத்து பிரச்சினையைத் தீர்த்தல் (collaborative problem solving)
3. புத்தாக்கம் (creativity)
4. ஆரம்பிக்கும் திறனும் சுயபொறுப்பும் (Personal Responsi bility and Initive)
5. எழுத்து மற்றும் வாய் மூல தொடர்பாடல் திறன்களை மேம்படுத்தல் (Effective written and oral communication)
6. தலைமைத்துவமும் (Leadership) முறையான தீர்மானம் எடுத்தலும் (Ethical Decisirn making)
7. கைகளால் கற்றல் (Hands - on Learning)
8. தகவல் மற்றும் ஊடகக் கல்விப்பிரிவு (In formation and media Literacy)
9. தர்க்க சிந்தனை (Critical thinking)

என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தோர் முறைமைகளுக்கு ஏற்ப இலங்கையில் ஆசிரியர் கல்விப்பாடநெறிகள் விரைவாக மறுசீரமைக்கப்பட வேண்டும். சரியான வாண்மைத்துவப்பயிற்சி, பொறுப்புணர்வு, புரிந்துணர்வு, முதிர்ச்சி இன்றி எதிர்கால சந்ததிகளான மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய ஆசிரியர்கள் அவ்வாறில்லாமல் இருப்பது நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்துறையினர் எல்லோரும் இதில் அதிகூடிய கவனமெடுத்து ஆசிரியர்களுக்கான வலுவாக பயிற்சிசார் ஒழுக்கக்கோவை உருவாக்க வேண்டும். ஆசிரிய பயில்வில் தொழில் வழிப்படுத்தல் செயன்முறையை வினைத்திறனாக்கினால் பல பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

**தொழில் வழிப்படுத்தல்**

இலங்கையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரு வருடங்களைப்பூர்த்தி செய்து பாடசாலைகளில் ஒரு வருடம் உள்ளகப்பயிற்சியை பயிலும் போது சிரேஸ்ட ஆசிரியர் ஒருவரின் தொழில் வாண்மை வழிகாட்டலே தொழில்வழிப்படுத்தல் எனப்படுகின்றது. ஆனாலும் பாடசாலைகளிலுள்ள சிரேஸ்ட ஆசிரியர்கள் இளம் ஆசிரியர்களுக்கு சரியான வாண்மைத்துவ வழிகாட்டலை வழங்குவதும் இதில் அடங்குகின்றது.


'தொழில் ஒன்றுக்குப் புதிதாக வந்து சேர்வோர் அத்தொழில் சார் கடமைக்கூறுகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் அத்தொழிலில் ஈடுபட்டுத் தொழில் சார் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அத்தொழிலில் அனுபவமும் தகைமையும் மிகுந்தோர் தொழிலிற் புதிதாக வந்து சேருவோருக்கு உதவிபுரியும் செயன்முறையே தொழில் வழிப்படுத்தலாகும்."

உள்ளகப்பயிற்சிக்காலத்தில் வாண்மைத்துவம் சார்ந்த பல சவால்களை உள்ளகப்பயிற்சி ஆசிரியர்கள் எதிர்நோக்குவர். தொழில்வழிப்படுத்துவோர் அறிவு, தொழில்திறன்கள், உளப்பாங்குகள் என்பவற்றில் உயர்ந்தவர்களாக இருப்பர். இவர்கள் தொழில் வழிப்படுத்தல் செயன்முறையில் வழிகாட்டல், உதவுதல், பயிற்றுவித்தல், அறிவுறுத்தல், ஆலோசனை வழங்குதல், என்பவற்றோடு மேற்பார்வை செய்தல், வளப்படுத்தல், முன்மாதிரிகளாகவும் செயற்படல். இவர்களின் வகிபாகங்கள் வாண்மைசார் முன்மாதிரி கலாசாரப்படுத்துனர், ஆலோசகர், வழிகாட்டி, சாத்தியப்படுத்துநர், வசதி செய்து கொடுப்பவர், பயிற்றுவிப்பவர், ஆதரவாளர், கல்வியியலாளர் என்பவையாகவுள்ளன. தொழில் வழிப்படுத்துபவருக்கும், உள்ளகப்பயில்வு ஆசிரியர்களுக்கும் சாதகமானதொரு உறவு முறையைக் கட்டியெழுப்பும் காரணிகளாக. உதவுதல், ஒத்துழைப்பு, சினேகபூர்வமாக நடத்தல், ஆதரித்தல், கரிசனைகொள்ளல், பாராட்டுதல், மரியாதைகொடுத்தல், தன்னம்பிக்கை வைத்தல், இனம் காணல், புரிந்தகொள்ளல், உற்சாகமாகவும் அவதானமாகவும் செவிமடுத்தல், என்பனவாகும்.

ஆசிரியராக வர இருப்போரை வளப்படுத்துவதற்கு தேவைப்படும் அறிவையும், விளக்கத்தையும் பின்வரும் பெரும் பரப்புக்களின் கீழ் எண்ணக்கருவாக்கம் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதாரம் Ch.Watkins, C.Whalley, Mentoring in Teaching - a Framework

**தொழில் வழிப்படுத்தல் செயன்முறை**

நல்ல தொழில் வழிப்படுத்துநராக இருப்பதற்கு தனிநபரிடையிலான உறவுமுறை சாதகமாக இருப்பது அவசியம். எனவே பாடசாலையில் கருமமாற்றும் அனைத்து தரப்பினருடனும் உள்ளகப்பயில்வு ஆசிரியர் சமூகமாக நடந்து கொள்வதற்கான நல்லதொரு சூழலை தொழில் வழிப்படுத்துநர் உருவாக்க வேண்டும்.

உள்ளகப்பயில்வு ஆசிரியரைத் தொழில் வழிப்படுத்தும் சிரேஸ்ட ஆசிரியர் முழுமையான அவதானத்திற்கு உட்படுத்த வேண்டும். இது மூன்று கட்டங்களைக் கொண்டது.

1. **அவதானிப்புக்கு முன்**

அவதானிப்பதற்கு முன் திட்டமிடல்
எவற்றை அவதானிப்பதென தெளிவாக அறிந்துவைத்திருத்தல்
அவதானிப்புக்குரிய தகுதிப்பிரமாணங்களை ஆக்குதல்
அவதானிப்புப் பணித்தாளை தயாரித்தல்
சந்தர்ப்பத்தை விளக்கிக் கொள்ளல்

2. **அவதானிப்பின் போது**

கவனமாகச் பார்த்தல்
உற்சாகமாகச் செவிமடுத்தல்
முழுமையான கருத்தை எடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனுக்குடன் பதிதல்

3. **அவதானிப்பின் பின்**

தொழில்வழிப்படுத்துநரின் சம்பவத் திரட்டுப்புத்தகத்தில் பிரதிபலித்தல் குறிப்பேட்டில் தெளிவாய் எழுதுதல்

ஆக்கபூர்வமான பின்னூட்டலை வழங்குதல்

பாடத்தை மீள் பரிசீலிக்க உதவுதல்

கணிப்பிடுதல், மதிப்பிடுதல்

அவதானித்த விடயங்கள் பெறுமதியானவையும் முக்கியமானவையுமாகும். என்பதை உள்ளகப்பயில்வு ஆசிரியருடன் கலந்துரையாடி சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்க வேண்டும். இவ்வகையில் தொழில் வழிப்படுத்துதல் செயன்முறை மிக முக்கியமானதாகவுள்ளது.

**தொழில்வழிப்படுத்துநர்களின் பொறுப்புக்கள்**

மேற்பார்வை செய்தலும் மாணவ ஆசிரியர் வாண்மைத்துவ வழிகாட்டுதலும்

1. மாணவ ஆசிரியர் வேலைத்திட்டத்தை எழுதுவதற்கு உதவுவதற்கு அவற்றைச் சரிபார்த்த அதிபரின் அங்கீகாரத்துக்கு அவை சமர்ப்பிக்கப்படுவதிற் கவனஞ் செலுத்துதல். ஆசிரியர் மாணவர்களின் ஒழுக்கக்கட்டுப்பாடுகளை சரியாகப் பின்பற்றவைத்தல்
2. மாணவ ஆசிரிய பாடத்தைத் திட்டமிடுவதற்கும் கற்றல் - கற்பித்தற் சாதனங்களைத் தயாரிப்பதற்கும் வழிகாட்டற் குறிப்புக்களில் தரப்பட்டுள்ள பாடத்திட்டமிடல் சட்டகத்தை அறிமுகஞ் செய்வதற்கும் உதவுதல்.
3. மாணவ ஆசிரியர் பாடம் நடத்துவதற்கு ஆதரவு அளித்தல், வாரம் ஒருமுறை பாடத்தை அவதானித்துப் பாடம் பற்றியும், பாடத்திட்டமிட்டமை பற்றியும் பின்னூட்டல் வழங்குதல்.
4. மாணவ ஆசிரியர் தாம் பாடசாலையிற் செய்த வேலை பற்றிய மீள்நோக்குக் குறிப்பேட்டைப் பேணுவது தொடர்பாக உதவுதல். மீள்நோக்குக் குறிப்பேட்டை மாதமொரு முறை சரிபார்த்தல்.
5. மாணவ ஆசிரிய சுயமதிப்பீட்டை மேற்கொள்ளுவதற்கு உற்சாகமளித்து ஆதரவு வழங்குதல் வழிகாட்டற் குறிப்புகளில் தரப்பட்ட சட்டகத்தை அறிமுகஞ் செய்தல் தம் சகபாடிகளிடமிருந்து மாணவ ஆசிரியர் கற்க உற்சாகமளித்தல்.
6. வாண்மைத்துவப் பங்களிப்புத் தொடர்பான சந்தர்ப்பங்கள் பற்றி ஆலோசனை கூறுவதோடு அவை பற்றித் தனியாகவும் குழுக்களிலும் ஆதரவு வழங்குதல். புாடசாலைச் சமூகத்துடன் சமூகமயமாக்கல் இணைபாடவிதான, பாடசாலை அதார, நிர்வாக சமூகச்சார் செயற்திட்டங்களுக்கு உதவுதல்.
7. செயல் நிலை ஆய்வு தொடர்பான சந்தர்ப்பங்கள் பற்றி ஆசிரிய மாணவர்க்கு ஆலோசனை வழங்குவதோடு செயல்நிலை ஆய்வின் போது தனியாகவும், குழுக்களிலும் ஆதரவு வழங்கல்.
8. மாணவ ஆசிரிய சினேகபூர்வமான சூழலில் வழிகாட்டியும் ஆதரவு வழங்கியும் அவர்கள் தொழிலில் எவ்வாறு முன்னேறலாம் என வழிப்படுத்தியும், பாடசாலை அதிபர், ஏனைய ஆசிரியர்கள், பெற்றார் ஆகியோருடன் ஆக்கபூர்வமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுமுறையை வளர்ப்பதற்கு உதவியும் தொழில்வழிப்படுத்துநர் கருமமாற்றுதல்.

9. வாரம் ஒருமுறை குறைந்தது இரண்டு மணித்தியாலங்கள் ஆசிரிய மாணவருடனான கூட்டம் நடத்தி ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்குதல் இத்தகைய கூட்டங்களை முன்கூட்டியே திட்டமிட்டு அட்டவணைப்படுத்துதல்.

10. பாடசாலையிலுள்ள ஏனைய ஆசிரியர்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஆசிரிய மாணவர்க்கு உதவுதல். பாடத்திட்டங்கள், ஆசிரியர் கைந்நூல்கள் பொருத்தமான சுற்றுநிருபங்கள் முதலிய ஆவணங்களை வாசிக்கவும் தேவைப்படுமிடத்துப் பயன்படுத்தவும் உதவுதல்.

11. கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கை எல்லா வகுப்புக்களிலும் ஒருங்கிணைப்பதற்காக ஆசிரிய மாணவர்களைச் சமாந்தர வகுப்பாசிரியர்களுடன் சேர்ந்த பணியாற்றச் செய்தல். ஒழுக்கம், நேரந்தவறாமை, உடை போன்றன தொடர்பாக ஆசிரிய மாணவர்க்கு அறிவுறுத்தல்.

12. முன்மாதிரி நடத்தைகளைச் செய்துகாட்டி ஆசிரிய மாணவர்கள் அவற்றில் உதாரணங்களைப் பெறுவதற்கு வசதியளித்தல்.

**மாணவ ஆசிரியர்களை கணிப்பிடுதல்**

13. வகுப்பறைக் கற்பித்தல், வாண்மைத்துவப் பங்களிப்பு, செயல்நிலை ஆய்வு என்பவற்றை கற்பித்தல் கற்கைநெறியில் மதிப்பீட்டு நடைமுறைகள் என்னும் ஆவணத்திற்கு அமைவாகக் கணிப்பிடுதல்.

14. ஆசிரிய மாணவரின் கணிப்பீடு தொடர்பாக ஒரு பதிவேட்டை வைத்திருப்பதோடு, ஆசிரிய மாணவர்க்கு இன்னும் கணிப்பீடுகள் செய்யப்பட உள்ளன என்பதை ஞாபகப்படுத்ததல்.

**தேசிய கல்வியியற் கல்லூரியுடன் ஒத்துழைத்தல்**

15. தேசிய கல்வியியற் கல்லூரியால் நடத்தப்படும் கல்வியாண்டின் ஆரம்பத்தில் நடத்தப்படும் உள்ளகப்பயில்வு அறிமுகக் கூட்டத்திற்கு வருகை தரல்.

16. ஆசிரிய கல்வியாளரின் பாடசாலை வருகைத் தினங்கள் தொடர்பான பட்டியலைப் பெறுதல் ஆசிரிய மாணவரின் முன்னேற்றந் தொடர்பாக அவர் பாடசாலைக்கு வரும்போது சந்தித்து உரையாடல்.

17. ஆசிரிய கல்வியாளர் பாடசாலைக்கு வருகை தருமிடத்து ஆசிரிய மாணவர்க்கு வழங்கப்படும் வாண்மைத்துவ ஆதரவு தொடர்பாக அவரோடு ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

18. தொழில்வழிப்படுத்துநரின் சம்பவத்திரட்டுப் புத்தகம் ஒன்றை வைத்திருத்தல் தொழில் வழிப்படுத்துநரின் சகல செயற்பாடுகளும் பதிவுசெய்யப்படல். தொழில் வழிப்படுத்துநரின் மாதாந்த உள்ளக பயில்வுக்கான பதிவேட்டைப் பூர்த்திசெய்தல் பாடசாலையில் கட்டுறுப்பயில்வு நிகழ்ச்சித்திட்டத்தின் தரத்தை உறுதிப்படுத்துதல்.

19. தேசிய கல்வியியற் கல்லூரியால் ஒழுங்குசெய்யப்படும் அதிபர்கள் தொழில்வழிப்படுத்துநர்கள் ஆகியோருக்கான பயிற்சிச் செயலமர்வுகளிற் பங்குபற்றுதல்.

20. ஆசிரிய மாணவரின் வாண்மைத்துவ விருத்தி தொடர்பாக பரஸ்பர தகவல்களைப் பெறுவதற்காக ஏனைய ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரை மாதம் ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தல்.

21. ஆசிரிய மாணவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்வித் தொழினுட்பத்தை ஏனைய ஆசிரியர்களும் பயன்படுத்த உதவுதல் புத்தாக்கங்களை மேற்கொள்ளல், புதிய கண்டுபிடிப்புக்களைப் பகிர்தல்

இவ்வகையில் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு பாடசாலைகளின் சிரேஸ்ட ஆசிரியர்களைக் கொண்டு தொழில்வழிப்படுத்துதல் மிகச்சிறந்த பயில்வாகின்றது. உள்ளகப் பயிற்சிக் காலத்தில் தொழில் வழிப்படுத்துதல் செயன்முறைகளுக்குக் குறித்த ஆசிரியர்களுடன் பாடசாலை அதிபர், ஏனைய ஆசிரியர்கள்,கல்விப்பகுதியினர் அனைவரும் ஒன்றிணைந்து இவ் இளம் ஆசிரியர்களை வாண்மைப்படுத்தி சாதகமாகச் செயலாற்ற வேண்டும். எமது நாட்டில் தொழில் வழிப்படுத்தும் ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சியும், கொடுப்பனவும் சிறப்பாக வழங்கப்பட வேண்டும். எமது எதிர்காலச் சந்ததிகளான பாடசாலை மாணவர்களை நல்வழிப்படுத்தும் இளம் ஆசிரியர்கள் மிகச்சிறந்த முறையில் மிகத்தரமாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இதற்கான புதிய கொள்கைகளை விரைவாக வகுக்க வேண்டியுள்ளது.

**உசாவிய நூல்கள்**


1. மா.கருணாநிதி (2013) கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள் - சேமமடு
2. கட்டுறு பயில்வு 2002 கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம்
3. உபாலி எம். சேதர (2016) கன்னங்கர யுகத்திற்கு அப்பபால் 21 ஆம் நூற்றாண்டுக்கான கல்விச் சீர்திருத்தங்கள் கன்னங்கரா நினைவுப்பேருரை
4. பா.தனபாலன் (2023) உட்படுத்தல் கல்வி குமரன் பபதிப்பகம் கொழும்பு.
5. தி.கமலநாதன், பா.தனபாலன் (2022) வெற்றிகரமான கற்பித்தலுக்கும் முன்மாதிரிக்குமான ஆசிரிய வகிபாகங்கள் - முத்தமிழ் கலாநிதி வீரமணிஐயர் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கஜமுகன் காட்வெயர்
KAJAMUGAN HARDWARE
கட்டிடப் பொருட்கள், லங்கா கம்பி, பைப் வகைகள், சீமெந்து
மெக்ஷன் மெஷ் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும்
பெயிண்ட் சோடா வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்...
TEL: 021 222 2833, 021 222 7144
Fax: 021 222 2368
E-Mail: kajamuganhw@hotmail.com
147, 149, Stanley Road, Jaffna.
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


உங்கள் சேமிப்புக் கணக்கின் புதிய பரிமாணம் வேகம் மற்றும் சௌகரியம்
BOC SMARTGEN
சேமிப்புடன் வாழ்க்கை சுலபமாக
இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும் வங்கியியலில் புதிய பரிமாணம் மற்றும் சௌகரியமான சேமிப்பு கணக்கு உங்கள் விரல் நுனியில்
• இலவச வைப்பு புத்தகத்துடனான சேமிப்பு கணக்கு
• இணையத்தள கணக்கினை துரிதமாக செயற்படுத்தல்
• டெபிட் அட்டைக்கான உடனடி காப்புறுதி
• இலவச SMS சமிக்ஞைகள் மற்றும் மாதாந்த கூற்று
• தகுதியுடைய வாடிக்கையாளர்களுக்கு கடன் அட்டை
• கணக்கு மீதியினை பொறுத்து 90% வரையிலான கடன் வசதி
www.boc.lk
இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.
AA+(lka)
இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகாந்த்

போட்டோ கொப்பி, கலர் பிறிண்ட்,
பாடசாலை உபகரணங்கள்,
அலுவலக காகிதாதிகள்

இல:55 பலாலி வீதி திருநெல்வேலி
தொலைபேசி: 021 222 4675

# சிதம்பரப்பிள்ளை பொத்தகச் சோலை.

## Chithamparappillai Book Depot

காகிதாதிகள், புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள்,
விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சிறுவர் கல்வி சார் உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளளாம்.



60, 64, பிரதான வீதி, நெல்லியடி.
0212263223

# KKJ Work Shop & Sales Center

உள்ளூர் உற்பத்திகளை உலகதரத்திற்கு உற்பத்தி செய்து சாதனைபடைத்த
எமது நிறுவனம் இலங்கையில் கல்விக்கூடங்கள், சுற்றுலா மையங்களுக்கு
தேவையான அனைத்துச் சாதனங்களை தரமாகவும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

11, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்

021 221 7319
077 903 7203


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பாரம்பரியத்துடன் கிராமியச் சூழலில்

# பொன் செல்வ மகால்

# PON SELVA MAHAL

www.ponselvamahal.com



**A/C** வசதிகளுடன் கூடிய
திருமண மண்டபம்

அமைதியான இயற்கைச் சூழலில் அமைதியாகவும் இன்பமாகவும்
உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீர்வேலியில்
ஓர் ஒப்பற்ற திருமண மண்டபம்

**பொன் செல்வ மகால்**

நீர்வேலி வடக்கு
நீர்வேலி.
077 772 4169
077 994 4453
021 320 2600

# பவானி களஞ்சியம்

# BAVANI STORES & SUPER MARKET

அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்
வீட்டு உபயோகப் பொருட்கள், மின்சார பொருட்கள்,
கட்டிடப் பொருள்கள் மற்றும் உழவு இயந்திரம், மோட்டார் வண்டி,
உர வகைகள் என்பன பெற்றுக்கொள்ளலாம்.

**திருமண மண்டப வசதிகள் செய்து கொடுக்கப்படும்**



இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

021 223 0590
021 222 2363

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Guru Printers - 021 221 4777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org